உ

சிவமயம்.

580

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# பரிபூரணம்

## நானூறு.

இஃது,

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்-குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

கஅஅச௵.

௨

கடவுள் துணை.

# புத்தகவிளம்பரம்.

---

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரிவிப்பதியாதெனில் சென்னைபைச்சார்ந்த சூளை இருங்குன்றம் இலட்சுமிநாராயணபுரத்தில் தொட்டிக்கலைகுமாரப்பமுதலியார் வீதியில் ௩௯-வது கதவிலக்கமுள்ள கிரகத்தில் ஸ்தாபித்திராநின்ற பரப்பிரமமுத்திராக்ஷரசாலையில், இதனடியில்கண்டிருக்கப்பட்ட புத்தகங்களல்லாமல், கற்றுணர்ந்தபெரியோர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்டமிகமேலாகிய உபயோகமுள்ள பலவிதவேதாந்தசித்தாந்தகிரந்தங்களும், வயித்தியகிரந்தங்களும், ஜோசியகிரந்தங்களும், மகம்மதமார்க்க கிரந்தங்களும், இன்னும்அனேகவிதமான தமிழ்ப்புத்தகங்களும், விலைசரசமாய் விற்கப்படுமாகையால், வேண்டியவர்கள்மேற்படி அச்சுக்கூடத்தலைவராகிய தி. இ. பரசுராமமுதலியாரிடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| ஸ்ரீமகாபாரதக்கீர்த்தனை காலிகோ பவுண்டுடன்கிரயரூபாய்-௩-௨ | தக்ஷிணாமூர்த்திதிருமந்திரம்-௲ ௩ |
| ஸ்ரீமத்கம்பராமாயணவசனம் | தன்வந்திரி கலைக்ஞானம் |
| பிரமோத்தரகாண்டம்மூலமும்-உரையும் ... ... | சிமிட்டுரத்தினச்சுருக்கம் ௩ |
| ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம் | அகஸ்தியர்ஆயுள்வேதம் ௲௨... |
| பதார்த்தகுணவயித்திய அரும்பொருளகராதி ... | மேற்படியார் பாலவாகடம் ௩௱ |
| பதார்த்தகுணசிந்தாமணி | தன்வந்திரிவைத்திய சிந்தாமணி ... ௲௨௱ |
| சதுரகராதி | சினேந்திரமாலை |
| ஸ்ரீமகாபாகவதம் (௱அ) லெத்த கிராப்படத்துடன் | சிதம்பரபுராணம் |
| ஆத்மாட்சாமிர்தமென்னும் வயித்தியசாரசங்கிரகம் | விநாடிபஞ்சபட்சி |
| அகஸ்தியர்ஏமதத்துவமென்னும் பஞ்சகாவியநிகண்டு ... ... அ௱ | அராபிக்கதை-௩-வாலம் |
| | நளவீமபாகசாஸ்திரம் |
| | சீறுபுராணம் |
| | ஐந்துபடைப்போர் |
| | அப்பாசுநாடகம் |
| | பலவித்துவான்கள்பதம் |

ஸ்ரீ ஸ்ரீமகாபாரதவசனமும், ஸ்ரீமகாபாகவதவசனம்-௰அ-சித்திரவிசித்திரலெத்தகிராப் திருவுருப் படங்களுடனும், ஸ்காந்தபுராணவசனமும் ஸ்ரீகம்பநாட்டாழ்வார்செய்த கம்பராமாயணக்கவி சப்தகாண்டங்களுடனும், அச்சிட்டுக்கொண்டுவருகிறோமாதலால் வேண்டியவாளுக்கு கூடியவரையில் விலைசகாயப்படுத்தி கொடுக்கப்படும்.

ஸ்டாம்பு அனுப்பினாலல்லது கடிதம் பதில் அனுப்பப்படமாட்டாது.

உ

சிவமயம்.

அகஸ்தியமுனிவரருளிச்செய்த

# பரிபூரணம்-௪௱.

பூரணமாய்நிறைந்தபரிபூரணத்தைப்போற்றிப்
புகழ்பெரியவயித்தியபூரணத்தைப்பாடக்
காரணமாய்க்கருவுருவெங்குந்தானாய்க்
கண்மணியினடுவானகருணைதன்னை
யாரணமாய்முக்கோணநடுவினின்ற
அம்பரத்தையநுதினமுமறிவாற்போற்றி
வாரணமாமுகத்தோனையநுதினமும்போற்றி
மகத்தானவேதியனைவணங்கினேனே. ௧

வணங்கிமிகநிந்தையிலேவேதியோனும்— வடமொழியைத்தான்கொடுத்தேயருளுமீந்தார்; இணங்கிமிகப்பூரணத்தையிருந்து ார்த்தேன் ஏகாந்தபூரணத்தினின்பங்கண்டு, குணங்கிமிகப்போகாமலறிவிற்கூடி— குருவானபூரணத்தைக்கூர்ந்துபாடி, வணங்கிமிகவேதியன்முன்வைத்துயானும்- வணக்கமாய்கைகூப்பிப்பணிந்திட்டேனே ௨

பணிந்திட்டபின்னாலேவேதியனும்— பக்குவமாயாதியந்தனன்றுய்ப் பார்த்து, கனிந்திட்டகருவெல்லாமிதிலேதோன்றுங் -கைம்முறையுங் குருமுறையுமிதிலேதோன்றும்; அணிந்திட்டவிந்நூலைவைத்துக்கொண்டு- அநுதினமும்பூரணத்தைப்பண்பாய்க்கண்டு, துணிந்திட்டவயித்தியமும் வாதஞ்செய்து—துரியமுள்ளயோகமுடன்ஞானம்பாரே ௩

பாரென்றுசொன்னமொழிபெற்றுக்கொண்டு—பதிவானபொதியையி லேயிருக்கும்போது, நேரென்றவயித்தியபூரணத்தைப்பார்க்க நிமிஷத்திற்றென்பொதியிற்சித்தர்வந்து, தேரென்றதென்பொதியிற்கும்பமூர்த்தி— செகச்சோதியானபூரணத்தைப்பார்க்க, மேரென்றமேருகிரிதன்னில்வந்தோம்— மேன்மையுடனடியைப்படைத்துவென்றாரே ௪

என்றதொருசித்தர்களைப்பார்த்தயாலுர்-மின்பமுடன்பூரணச்சுத யவருக்கிறேன், வப்பருக்குமுலகத்திலுள்ளபேர்க்கும் - வாபாதுவாய்த் தாலும்வழிசொன்றுத, என்றதொருசிலயோகிக்கெய்துமாசி-லிகிலுள்ளக ருக்கெல்லாமெய்துமெய்தங்,கண்டுமிவன்காணுமற்கலக்குஞ்சோதிச- க ருவியிலேயமைந்தபூரணமென்பாரே ௫

பாரப்பாபூரணமாமிந்நூலைப்- பாரிலுள்ளோர்க்கியாசேபதனஞ்சொ ன்னேன், நோப்பாபூரணமும்வயித்தியமுஞ்சொன்னேன் நிலையாதகுருநா டிநிலைக்கச்சொன்னேன், காரப்பாபற்பமொடுசெந்தூரங்கள் கட்டானமா த்திரைகள்சாக்குவைப்பு, பேரப்பாமுப்பூவின்தீட்சையார்க்கம் பெருநூ லின்மறைந்ததெல்லாம்பேசினேனே ௬

பேசினேன்தயிலங்கள்ரசாயனங்கள் - பிலமானலேகியமும்கியாழத் தோடு,விசினேன்சகலவியாதியுபேதீர - விளம்பினேன்வசியமோடஞ்சன மாமுற்றர்,தூசியிலேதிரிபுகைகளங்கஞ்சொன்னேன் தடிவாணமாரணமும் வைப்புஞ்சொன்னேன்,பாஷையிலேஅஷ்டகர்மமெட்டுஞ்சொன்னேன் -ப ரபாத்தின்குறிசொன்னேன்பணிந்துகேளே

நூல்விவரம்.

கேளப்பாமூன்றுலட்சங்காப்புசொன்னேன் கிருபையுள்ளவாதமதுஇ ட்சங்காப்புச்,குளப்பாவயித்தியத்திலிரண்டுலட்சஞ்சொன்னேன்சுகமாக குறுக்கி யிருகாண்டஞ்சொன்னேன், பாளப்பாவதைக்குறுக்கிப்பா தியாக பாடினேன்அறுநூறுகாலுஞ்சொன்னேன், வேளப்பாதிராவகமெ ண்ணூறுஞ்சொன்னேன் மேதைமுறையைந்நூற்றில்வெளியிட்டேனே ௮

வெளியிட்டவைம்பதிலேமூன்றுஞ்சொன்னேன் விவரமாய்முந்நூ ற்றிற்செந்தூரஞ்சொன்னேன்வழி।ரகவெண்பதிலேமுப்பூவுஞ்சொன்னே ன்வயித்தியந்தானுபிரத்தைகந்நூறுஞ்சொன்னேன் அழியாதமுந்நூற்றிற்க ர்மம்தர்மம்அன்பாகச்சொன்னதைநீயறிந்துபாரு, முழியாதேநானூற்றிலிர ண்டுசொன்னேன் மூடினதோர்தீற்றினமாம்நாலுநூறு ௯

நானூற்றில்வயித்தியமும்பூரணமுந்தோன்று நாடியுடன்குறுநாடிந ன்றாய்த்தோன்றப்,பாலானமுப்பாலுநன்றாய்த்தோன்றப் பாடினேன்வயித் தியபூரணமிதப்பா,தேடினுற்கிடையாதிவ்வுலகத்துள்ளே சிவயோகிவை த்திருப்பார்கொடுக்கமாட்டார், நாளாகவவர்களிடந்தொண்டுசெய்து நன் மையுடன்நூல்வாங்கிகொட்டம்பாரே ௰

## வைராக்கியம்.

நாட்டமென்றபூரணத்தைக்காணவென்றால் நன்மையுள்ள சற்குருவாற்காணவேண்டும், ஓட்டமென்றவோட்டமெல்லாமோடாதேநீ ஒருமனதாய்ச்சுழிமுனையினுகந்துநில்லு, ஆட்டமென்றதிருநடனமங்கேயுண்டு ஐம்பத்தோரெழுத்து முதலெல்லாமுண்டு, பாட்டையிகப்பிதற்றினுமென்னவுண்டு பத்திமுத்திவயிராக்கியமாகப்பாரே ௰௧

பாரப்பாவுலகத்தில்ஞானமென்பார் பராபரத்தினுருப்பிடத்தைப்பாரார்பாரார், சாரப்பாஉலகத்தில்யோகஞ்செய்வார் சார்ந்திருக்கும்பரஞ்சோதிதன்னைக்காணார், ஊரப்பாகிரியையென்றேயுழலுவார்கள் உத்தமனேஉள்ளநிலையறியமாட்டார், நேரப்பாசரிதையென்பார்தன்னுக்குள்ளே நெருப்பாறுந்திருகோயில்கண்டிலாரே ௰௨

நெருப்பாறுமயிர்ப்பாலங்கடக்கப்பாலே நிலையாதகங்கையடாநீக்கப்போகா, இருப்பார்கள்குமயமாயாடிபாடி இன்பநலம்பற்றியோடியோ, குறிப்பாகக்கண்டவர்க்கேதெரியுமார்க்கம் கோடிரவிசுடர்காந்திகொண்டவாட்டம், வெறிப்பாகப்பூரணதையறிவாற்பார்க்கவெட்டவெளியாகுமடாகுருவைத்தேடே ௰௩

## பெருநூற்காவியப்புகழ்ச்சி.

குருவானஞானகாவியத்திற்றனுங்கூர்மையுள்ளபூரணத்தின் குறிப்பைச்சொன்னேன், பரிவானசௌமியமாஞ்சூக்கமப்பா பாடினேனுஞ் நூற்றில்ஞானமெல்லாம், கருவானபூரணமீராறுநூலிற் கருதினேன்ஞானமொடுகற்பமெல்லாஞ், சரியானபெருநூல்காவியத்திற்றனுஞ் சாற்றினேன்மும்மணியின்றன்மைதானே ௰௪

தன்மையுள்ளசௌமியசாகரத்திற்றனுஞ் சகலமுமேயாதியந்தமாகச்சொன்னேனே, முன்னமேகுருநூலாம்பன்னிரண்டுநூறில்முக்தியுள்ளஞானமொடுகற்பஞ்சொன்னேன், வன்மையுள்ளவயித்தியபூரணமீதையாவாழ்தநிலேன்வயித்தியத்தின்வழிதானன்றேச், சொன்னமொழி யெவ்வளவுந்தப்போவில்லை சோதியென்றபூரணத்தாற்றுலக்கினேனே ௰௫

பூரணமாமாகாரந்தன்னிலின்ற புரியட்டதசவாய்வின்பேர்தான்கேளு, வாரணமாம்பிராணனொடபானனுதானும் மகத்தானவுதானனுடன் சமானன்வியானன், காரணமானநாகனொடுகூர்மன்றானுங் கனமானகிரிகரன் கூர்தேவதத்தன், ஆரணமாந்தனஞ்சயனும்பத்துமாச்சு அப்பனேயவையினிஅறைகிறேனே ௰௬

அறைகிறேனிடைகலைபின்சுழினையாகி உவம்புடையுங்காந்தாரியத்தியோடு, இறையானசிகுவைசங்கினியோடெண்ண ,இயல்புருடன்குருவென்பார்சோத்திரந்தான், நிறையானநெடுந்தொக்குதட்சுவோடு நோமையுளளசங்குவையாக்கிராணமாகும், முறையுடனேயிவையறிந்துநிதானங்கண்டு முதன்மையுள்ளகுருநாடியஞ்சுக்கேளே ௰௭

புருஷநாடி.

அஞ்சாகிப்பத்தானதசநாடிக்குள் அப்பனேரவிமதியுநெருப்புமாகி மிஞ்சாதவாதபித்தஞ்சிலேஷ்மமாகி விராமன்மூன்றினிலேவியாதிகாண நெஞ்சாரக்காணுநற்குவகையைக்கேளு நோமையுளளதத்துவத்தைநினைவாய்ப்பார்த்து, செஞ்சாரைப்போலப்பாநாடிதன்னை திறமாகக்காணுநற்குவகையைக்கேளே ௰௮

கேளப்பாபுருடருக்குவலதுகையைக் கிருபையுடன்றான்பிடித்துமெட்டைவாங்கி, சூளப்பாபெருவிரலோரங்குலத்துக்கப்பால் சுகமாகமூவிரலால்முத்திப்பாரு. வாளப்பாமுதல்விரலேவாதநாடி வண்மையுடனடுவிரலேபித்தநாடி, தேளப்பாகடைவிரலேசேஷ்மநாடி திறமாகநின்னறிந்தெறெளிந்துகாணே ௰௯

புருடருக்குநாடிகள்நடக்கும்விதம்.

காணவேபுருடருக்குவாதநாடி கானகத்துமயில்போலும் அன்னம்போலுங், தோணவேகோழிநடைநடக்குஞ்சொன்னேன் துரியமெனநாடித்தத்திகுடிசேரு, ஏணவேயாமையுடனட்டையைப்போலும் என்மகனேஅட்டையைப்போனடக்கும்பாரு,வேணவேசேத்துமந்தான்பாம்புபோலும் வேணபடிதவளைகுதிபோலாம்பாரே ௨௰

பெண்களுக்குநாடிகள்நடக்கும்விதம்.

பார்ககவேபெண்டுகளுக்கிடதுபக்கம் பதிவாகப்பார்த்திடவேபாரக்கேளு,காக்கவேவாதநாசர்ப்பமபோலாங் கனமானபித்தமது தவளைபோலாஞ்,சேர்க்கவேயையமென்றநாடிதானுஞ் சிறுநடையாவன்னம்போற்செழிப்பாய்காணும்,ஆர்க்குமேதோன்றுமிந்தநாடிமூன்றும் அனுதினமுநல்லறிவாலறிந்துதேறே ௨௧

நாடிகள்கிழுமேலுமீறியோடும்விதம்.

தேறவே * சந்திரனும்வாதநாடி திறமானசூரியனும்பித்தநாடி, மீறவேயக்கனியும்சேஷ்மநாடி விளங்கவேவியாழமதிலங்கிமீறும், கூறவேமைந்தன்செயிரவிமூன்றுங் குணமானசூரியனுங்குமுறியோடும், ஏறவேதிங்கள்புதன்வெள்ளிகாணு மின்பமுள்ளசந்திரனுமோடுங்காணே ௨௨

(*) ஆதிவாரம் விடியற்காலத்தில் — சூரியகலை.

திங்கள்விடியற்காலத்தில்-சந்திரகலை
செவ்வாய் விடியற்காலத்தில்-சூரியகலை
புதன்—விடியற்காலத்தில்—சந்திரகலை
வளர்பிறைவியாழம்-விடியற்காலத்தில்-சந்திரகலை
தேய்பிறைவியாழம்—விடியற்காலத்தில்-சூரியகலை
வெள்ளிவிடியற்காலத்தில்-சந்திரகலை
சனி—விடியற்காலத்தில்—சூரியகலை

இவ்விதகலைபிங்கலை சுழிமுனை மூன்றுமேவாதபித்தசேஷ்மங்களெ ன்பவைகளவைதப்பினல் வருவனவற்றைஉங்கள்கையிற்கண்டுகொள்க.

## வியாதிகளறிய.

காணவேபிரவிசிலேவாதமோடில் கனமானசளிபிரும விரைப்புண் டாமே, நாணவேசெவ்வாயில்வாதமோடில் நன்மையுள்ள சுரமதாகு மெ ன்றுசொன்னேன், தோணவேமாந்தனிலேவாதமோடில் துணிந்ததொருசி களமுஞ்சன்னியெய்தும், வேணவேவியாழத்தில்வாதமோடில் விலாவோ டுதேகமெல்லாம்வலியுண்டாமே ௨௬

உண்டானதிங்களிலேபித்தமோடில் உத்தமனேசலதோஷமுடனேகா ணும், பண்டானபுந்தியிலேபித்தமோடில் பாரமுடனீரேற்றந்தலைக்குத்து ண்டாம், அண்டானவெள்ளியிலேபித்தமோடில் அப்பனேகண்ணேயுங் காதுநோயாம், தண்டானகுருவினிலேபித்தமோடில் தன்மையுறுந்தாபசு ரந்தலைநோக்காடே ௨௭

நோக்காடடையறிந்துரைக்கவயத்தியர்க்கு நுண்ணறிவாய் சொல் லிவிட்டேனுணக்கமெல்லாம், பாற்காட்டாறதெரியாதுபழக்கமாகப் பார் த்தறிந்தோர்தனையடுத்துப்பரிவாய்க்கேளு, கேட்காட்டாறகிடையாதவ் வுலகந்தன்னிலே கிருபையுடன்புனமுறுதியாகநீயும் வாய்க்காட்டாவி றா லெல்வாய்க்கும்பாரு வன்மையுள்ளகுருநாடிவகையைப்பாரே ௨௮

## குருநாடியிருக்குமிடம்.

பாரப்பாகுருநாடியைந்துக்குநடுவாய் பாறிநிற்கும்வாலாறுதன்னைக் கேளு,சிரப்பாபித்தத்தின்முன்னேநிற்கும்* திசைநாடிபத்துக்குத்திறமாய் நிற்கும்,வரப்பாவாதமென்றுசொல்வாரூடர் இருத்தியாகுமேபார்ப்பவளவி ல்வேறாய்நிற்கும், தாரப்பாகொண்டகுருநாடிநேர்மை தனையறிபவனையு னக்குச்சாற்றுவேனே ௨௯

* தசநாடி—திசைநாடியெனமருவியது.

## பஞ்சநாடிகளிருக்குமிடம்.

சாற்றுவேன்பெறுவிரலிற்பூகநாடி சங்கையில்லாஆள்தூண்டி வாத மென்க, ஏற்றமுள்ளநடுவில்தானபித்தமாகும் இசைந்ததொருபவித்திரமே

உ

யைபாமாகுந்,சோற்றுகின்றசிறுவிரல்கான்பூசுகநாடி சுக்தமுள்ள குருநாடி
யாரந்தட்சேரு,மாற்றுமெகுருநாடியைந்துட்சேர்ந்து வளர்ந்துநிற்குமபே
ர்பெரியவண்மைதானே ௨௭

பேர்பெரியகுருநாடிகுணமேசன்னிற் புரண்டுவாம் வாசத்திவட்
டைமேல், சீரறியவாய்வுமிகுமிநமறேன்றுந் தினவுசொறிமிவுமவாருந்
தேகப்வாடுஞ்,சூரியபித்தக்கிலாமைபோலத சோணறிடிவெசுரமிகக்குஞ்
சுரக்துமவாய்நீர், கார்பெருகிவருவதுபோல்வியாவுசோகறும் கதித்திடில்
நீர்கட்டுஞ்சிலேததமத்திற்போமே ௨௮

சேத்துமத்திற்குறுநாடிசிங்கம்போலே சிறிநிற்கிலதின்குணந்தாண்
சந்திசோன்றும்,ஆற்பணத்தையூடுருவததமருமாகில் அசாத்தியமாமரண
குறிகப்பாதப்பா,காற்பெனவேகுறுநாடிகுன்றிப்போகில் கழியும்வயிற்க
கடுப்பெடுக்குங்கைகால்விக்கும், எற்பனவுமில்லையில்லை திட்டஞ்சொன்
னே மிசைந்தகுறுநாடிநிலைபிருத்திப்பாரே ௨௯

பாரப்பாகுருநாடிபக்கம்பாயில் பாரித்தசிலேத்துமந்தானெதிரோமேச
தும்,கூரப்பாகுறுநாடிநேரேநிற்கில் குற்றமில்லைவாதபித்தமிரண்டுஞ்சே
ரும், தூரப்பாகுறுநாடிபின்னேவாங்கில் தப்பாதேயசாத்தியங்கள் தானு
ண்டாகும்,காரப்பாஉடலுக்குளுயிராய்நின்ற கருவானகுறுநாடியொன்று
காணே ௩௰

ஒன்றுக்குமொட்டாதநாடிநேர்மை யூடுருவித்தானிருக்க முண்மை
கேளீர்,வண்டுகள்தான்மதுவருந்துநேர்மைபோல வாதபித்தசிலேத்துமத்
தின்மதுவையுண்ணும்,என்றைக்குவாதபித்தநடுவேநிற்கும் எதுவகைக்கு
றைவதுமில்லையப்பா,கன்றுக்குபால்சுரக்கும்பசுவைப்போல காத்திருக்
குங்குறுநாடிகாலைப்பாரே ௩௧

குருநாடிநிலையறிபார்க்குருடரெல்லாங் கூட்டமிட்டுச்சாத்திரத்துக்
குவமைசொல்வார்,மருநாடிவாதபித்தசிலேத்மமூன்றின் மத்தியமென்றி
கையறியார்வார்த்தைசொல்வார், கருநாடிகுருநாடியாகக்காணும் கைம்மு
றையாய்க்குருதொட்டுக்காட்டத்தோன்றும், பெருநாடிசாத்திரத்தின்மய
ங்கிடாதே புலத்தியாகுருநாடிப்பின்னைப்பாரே ௩௨

பார்க்கப்பாவாதபித்தநடுவேபாற்கிற் பண்டதபோன்மதுவுண்ணு
மத்தியத்தில், போற்றப்பாமூவிரலுமுருநாடிக்காண்டிப் பூரணமாய்மூல
முதலுருவிப்பாய்ந்து, சாற்றப்பாவிசைநரம்பினூடேசேர்ந்துசந்திரமண்ட

லமேவிச்சார்ந்துபின்னு, நாற்றமுற்றகுருநாடியெங்குஞ்சுற்றி நடுவில்வரு நேர்மைதனைநாடிப்பாரே ௧௩

பம்பரம்போற்குருநாடிகிறுகிறென்று பற்றிநிற்கும்வாதபித்தநடுவிலேதான், அம்பரம்போற்குமுறியெழும்வாதபித்த மையமென்றநாடிமுதலாடியோடிக், சட்பமுடன்மண்டலெங்கண்மூன்றுஞ்சுற்றிச் சக்கிரிக்கோன்மாறலெனக்கட்டிச்சேர்ந்து, தப்பமுடன்வாதபித்தநடுவிலேதான் தமரகமபோலாடிநிற்குங்குருவிதாமே ௧௪

குருநாடிவாதமதனிற்கும்போது கோழியுடன்அன்னமயில்குறியாமென்ன, வருநாடிபித்தத்தினிற்கும்போது வளரமையட்டையெனவருக்கலாமே, திருநாடிசிலேத்மத்தினிற்கும்போது தெறித்துவிழும்விட்டிலைப்போற்றெளிந்துகாணும், பெருநாடிசாத்தியத்திலையவேண்டாம் பிராணகலைதனையறிந்துமாணப்பாரே ௧௫

## மரணநாடி.

மரணமதையறிதற்குக்குறியைக்கேளு வழுவாதவிசைநாப்புதுளிர்ந்துகாணு, குரணமெனும்பொறிகளெல்லாந்தளர்ந்துமெத்த விசைநாப்புதறளர்ந்துவிளாந்துவாங்கி, நரம்பெனப்பற்சடித்துமணியுப்நட்டு நாவுலர்ந்துமூச்சயர்ந்துநடுக்கமுண்டாய்த், தாணமெனுமவ்வாதபித்தசிலேத்மமெல்லாஞ் சோத்தியம்பார்விட்டிலைப்போற்றுடிக்கிற்சாவாம் ௧௬

துடிகொண்டசேத்துமந்தான்வெள்ளம்போலே சுருசுருக்காய்மடமடெனவோடுமாகில், அடிகண்டுபற்றுநாள்மரணமாகும் அப்பனேபித்தமதுசிதறியோடில், முடிகொண்டமூன்றுநாள்சாவார்சொன்னேன் முழுமையுமேவாதமதுசிதறியோடில், இடிகண்டஎட்டாநாளேமரணமாவார் இன்பமாய்க்கண்டறிந்தேதயிடைந்துநிலையே ௧௭

நில்லப்பாவாதபித்தமிரண்டுங்கூடி நிலைதப்பிச்சிதறியதுவோடுமானால், கொல்லுமப்பாபதினைந்துநாளிற்றானுங்குணமாகவிதனுடனேஐபங்கூடில், வெல்லுமப்பாமண்டலத்தில்யாசைபாழாம் விசமாசமூன்றுமேஒன்றாயகூடி, அல்லப்பாஅவைவால்துடியேகாணில் அப்பனேயவர்பிழையாரறிந்துபாரே ௧௮

பிழையாதவாதபித்தசேத்மங்கூடி பிரண்டுவருந் தேள்கொடுக்குப்போலேயாடி, உளையாதவோடம்போலோடுமானால் உத்தமனேதிங்களிலேமரணமாவார், குளையாதநாடியின்மெய்க்குறியைக்காணுர் கூட்டமிட்டுக்குருவெனவேபிரசங்கிப்பார்; விழிபானதலைகணிரண்டுமேற்றமன்னும் விதியறிந்தாற்சந்தியுமேவிளங்கும்பாரே ௧௯

சன்னிபெருபோதிலிந்தநாடுமூன்றும் சாதகமாய்ச்சுழல்வண்டுதண்ணீர்மீதில், உன்னியதுபாபாத்தேபேடுருப்போல் ஓடியெங்கும்வாதபித்தசேத்துமமெல்லாம்கண்ணியதுசாதகமாயவருமேயாகில்கதிப்பாகும்வாதபித்தம்பம்பாம்போல், பின்னியதுவிட்டிலேப்போற்றெறித்துவிழிற்பேச்சில்லை மரணமென்றுபிரித்துச்சொல்லே. சய

சொல்லப்பவாய்வுக்குமந்தத்துக்குந்துணையாகஅபர்ந்தமெத்தந்தளர்வாயோடும், அல்லப்பாபசிதனக்குத்தூங்கியோடும்அப்பனேசநிதான்புழுப்போலோடும்நில்லப்பாவயிற்றுவலிகண்டபேர்க்குநேராகவுள்ளுறவாய்வாங்கியோடும், கல்லப்பாகிரந்தியென்றேநோய்தனக்குங் கணையுடைந்தவருவியைப்போற்காணுங்காணே. சஉ

காணிதத்தில்வாதமென்றூர்சேத்மவாதம்காணுமடாசூலையென்றூர்சேத்மபித்தம், விரணமுடன்புண்புரைக்குவாதபித்தம்விதியறியாப்பிரசந்தான்பித்தசேத்மம், தூரணமுடனீற்பாடுகெர்ப்பப்பாடு சொல்லுகிறேனடியெல்லாஞ்சுழன்றுகாணும், கிரணமென்றபாம்புவிஷந்தாதுவெல்லாங்கெதிகெட்டுக்காணுதுகெர்ப்பமாமே

## வாய்வுக்கும்–மந்தத்துக்கும்–கெர்ப்பிணிக்கும்–வியாதிநாடி.

கெர்ப்பிணிக்குவாதபித்தங்கலங்கிக்காணுங் கிராணியதிசாரமென்றுற்றளர்ந்துகாணும், உற்பனித்தகபமீளைகாசரோகம் உற்றிடிலேசிலேத்துமந்தான்மீறிக்காணும், பிற்பிடித்தவிஷநீருஞ்சோகைபாண்டும் பிலமானவ்வீழைப்போல்மட்டும்பாரு, பற்பிடித்தமேகமென்றூல்பித்தமீறும்பாலகனேகங்கைகொண்டுநிராம்பாரே சங

நீர்மேகமானவர்க்குநாடிதானும் நிர்ணயமாய்நாடியெல்லாம் பிலமேகேட்டுக், கார்மேகம்போலவந்தளரியின்மேலே காண்டுவிழும்புழுப்போலேபுரட்டிக்காணும், சீர்மேசமானவர்க்குநாடிதானுஞ் சிறிநிற்குங்குருநாடிதிறமாய்த்தானும், பேர்மேகங்கடுத்திடுகில்வாதபித்தம்பின்னியதுதுடித்துவரும்உற்றுப்பாரே சச

உற்றதொருகெர்ப்பிணிக்குச்சேத்மபித்தம் உறுதியெனும்விக்கலுக்குச்சேத்மவாதம், மற்றதொருசுரந்தனுக்கும்வாதபித்தம் வகையானகணைக்காய்ச்சல்பித்தம்வாதம், சித்தமுறுந்தலைபிடிக்குப்பித்தமாகும் சீரானகமரோகந்தனக்குபித்தம், குற்றமில்லைபிதின்குணங்கள்மருந்தாற்றீருங்குருவானபூரணத்தின்குறிதான்பாரே சடு

## அஷடகர்மப்பாவைதம்பனம்.

பாரப்பா பூர்ணகாவியத்திற்றூனும் யாடினேன் அஷ்டகர்ம

பாவைதன்னை, நோப்பா அப்பாவைதன்னைநீயும் நினைவாகமனதினிலே நிறுத்திக்கொண்டு, சாரப்பாவுனதறிவைமேலுக்கேற்றிச் சந்திரனைச்சூரியனிற்சாரப்பண்ணி, கூசப்பா அக்கினியிற்கூர்ந்துநின்று குணமானபாவைதனைக்குருவாய்போற்றே ௪௬

போற்றியேநமெனையினின்றுகொண்டு பூரணமாய்நயமயநவென்றேயோதி, பார்த்திபனேகருப்பூரதீபம்பார்த்து பாங்காகவிபூதியைநீகையில் வாங்கி, நேத்தியாயனுதினமும்பூசிப்பூசி நீயிருக்கவதினுடைய நேர்மை கேளு, பார்த்தபேர்சகலருந்தம்பனமேயாவார் பாலகனேபராபரத்தைப்பணிந்துபோற்றே ௪௭

பணிந்துநின்ற பொற்பாவைதன்னைநீயும் பாலகனேசுழிமுனையான் மேருக்கேற்றி, அணிந்துநின்றுயவசிவயவென்றுநீயும் அப்பனேகர்ப்பூரதீபம்பார்த்து, துணிந்துநின்றவிபூதிதனைக்கையில்வாங்கிச் சுத்தமுடன் * லலாடமதிற்பூசிவிட்டால், அணிந்துநின்றசத்துருக்கள்வசியமாவார் அனைவோருந்தானவணங்கிநிற்பார்கேளே ௪௮

* லலாடம்-நெற்றி.

கேளப்பாபொற்பாவைதன்னைநீயுங் கொடியாகக்கேசாத்தில்நிறுத்திக்கொண்டு, வாளப்பாபூரணத்தின்மனைகயூன்றி மயநயமவென்றுநீமதிற்கொண்டு, வேளப்பாகர்ப்பூரதீபம்பார்த்து விபூதிதனையுத்தளமாப்பூசிக்கொண்டால், கேளப்பாவொன்றுமில்லையெல்லாமோகம் குணமானபூரணத்தின்கிருபையாலே ௪௯

கிருபையென்ற பூரணத்தாற்பாவைதன்னைக் கொச்சிமாநடுமனையிலூட்டிக்கொண்டு, வருமமுடன்சிவயவசிவென்றுநீயும் மார்க்கமுடனகர்ப்பூரதீபம்பார்த்துப், பெருமையுடன்விபூதியுத்தளமாப்பூசில் பேரானசத்துருக்கள்மரணமாவார், அரூபமென்றபூரணத்தினுண்மையாலே யமையாதநோயெல்லாமகன்றுபோமே ௫0

போமப்பாபூரணத்தாற்பாவைதன்னைப் புத்தியுடன்சுழிமுனையிற்கண்டுகொண்டு, காமப்பாவசியசிவவென்றுநீயுங் கனமானகர்ப்பூரதீபம்பார்த்தே, ஓமப்பாவநுதினமும்பூசிக்கொண்டால் உன்னுடையசத்துருக்களோடிப்போவார், காமப்பால்கொண்டுநிதங்கருவினின்று கண்மணியாற்சின்மணியைக்கண்டுபோற்றே ௫௧

போற்றப்பாபொற்பாவைதன்னைநீயும் புத்தியுள்ளவறிவினிடம்பொருந்தவைத்து, பார்த்தப்பாயநமநயவென்றுநீயும் பத்தியுடன்கர்ப்பூரதீபம்பார்த்தே, சாற்றப்பாவிபூதியைநீலலாடமீதிற் சகலருமேயாகிருஷ்ணமாந்தன்னைச்சேர்வார், காத்தப்பாபூரணத்தைப்பார்க்கப்பார்க்கக் கனமாய்னைதான்திரிந்துசோதியாமே ௫௨

* ஆகிருஷ்ணம்-அழைத்தல்.

## விந்துவேஷணம்.

சோதியென்றபராஞ்சோதிப்பாவைதன்னைச் சுத்தமுட னுச்சியென்றமேருக்கேற்றி, நீதியுடன்வயசியவவென்று நீயும்நினைத்துக்கர்ப்பூரதீபம்பார்த்தே, ஆதியென்றவிபூதியைநீகையில்வாங்கி அணிந்துகொண்டால்வேஷணமாமறிவாற்பாரு, பாதிமதியணிந்தபான்கிருபையாலே பராபரத்தின்குறிகண்டேயறிவாய்நில்லே ௫௩

நில்லென்றநிலைதனிலேநின்றுகொண்டு நிலையாதபொற்பாவைநினைவிற்சேர்த்து, சொல்லுகின்றமந்திரந்தான்சியவயசியென்று சொல்லியேகாப்பூரதீபங்கொண்டே, அல்லுமேவிபூதியுத்தளமாய்ப்பூச அனைவோருமுனைக்கண்டாற்பேதலிப்பார், வெல்லுமேயட்டகர்மமெட்டுமாடும் விதமாகக்கண்டறிந்துமேலேபாரோ ௫௪

## பேதளம்.

மேலானகுதம்பத்தையுற்றுப்பாரு மேன்மையுள்ளமூன்றெழுத்துமொன்றாய்க்காணும், காலானவாசியிடவெழுத்துமங்கே கனமானபிரமாவின்கருணையங்கே, மாலானமாலினிடபதியுமங்கே மந்திரங்கண்மூன்றெழுத்தாம்மறைந்ததங்கே, சேலானசெயலறிந்தாலெல்லாமுண்டு செயலறியச்சற்குருவைத்தேடிப்பாரோ ௫௫

## முப்பூ.

பாரப்பாவின்னமொருசெய்திகேளு பதிவானமுப்பூவையறியவென்றால், பேரப்பாசொல்லுகிறேனன்றாய்க்கேளு பெருமையுள்ளபிறப்பிறப்புமகற்றுமூலி, வேரப்பாவடிமுடிநடுவுமாகி வேதாந்தசித்தாந்தநாதாந்தமாகி, காரப்பாவாலையுடன்புவனையாகி கருணையுள்ளதிரிபுரையின்கண்மூன்றுமே ௫௬

மூன்றானபூநீற்றைச்சலத்திற்கொட்டி முத்துபோற்றெளிவிறுத்தைந்துவிகையாய்ச்சு, நன்றானவெடியுப்புப்பலந்தானுலுநாட்டதிலேசினமோடிந்திரண்டே, ஒன்றானசத்தியெட்டுச்சோடசந்தா னுத்தமனேகலவத்திலிட்டுக்கொண்டு, சென்றாட்டவெண்கருவிலெருக்கம்பால்வார் சிறந்தபழச்சாறாட்டியரைத்துப்போடே ௫௭

## சவர்க்காரவைப்பு.

போட்டரைக்கச்சூட்டினொருகாசுபோடு புகழானசரக்கெல்லாஞ்சேரவொன்றாய், நீட்டரைக்கசாமம்ரண்டுக்கதிகம்வேண்டாம் நிலையானவில்லைசெய்துநினைவாய்க்கேளு, காட்டையாரவிதனிலேகாயப்போடு கனமானசுண்ணாம்புக்குள்ளேவைத்தே, ஆட்டமுடனடுப்பேற்றியெரிப்பாய்சாமம் அத்தோடேவாங்கியெல்லாப்புடத்தைப்போடே ௫௮

புடமெடுத்தேயாறவைத்துப் பூரணத்தைநோக்கிப் புத்திபுடன்று
ணெடுக்கவெளுத்துநீறும், குடமெடுத்தகெங்கையின்னுள் பாலின்றேவி
குகிகொள்வாளுன்முகத்திற்குறைவொன்றில்லை, தறவிடமெடுத்தசவர்க்
காரக்குருவிதாச்சு வெள்ளாட்டிற்கெதிற்பட்டவேங்கையாச்சே ௫௯

## முப்பூவின்பெயர்.

வேங்கையென்றமுப்பூவின்பேர்தான்கேளு வெறித்தசிங்கம்போன்
டம்வெள்ளச்சாரை,தாங்கையென்றசிறுநாகம்பட்சிராசன் சரக்கானசெந்
தவிக்குக்காலன்காலன், பாங்கையெல்லாங்கண்டவனேவாதஞானி பதிவா
னவண்டமடா ஆதியுப்பு, ஓங்கியென்றசத்தியுப்புவமலையுப்பாம் உண்மை
யுள்ளநாதவுப்பைவுகந்துகேளே ௬௰

## நாதவுப்பின்பெயர்.

உகந்துநின்றநாதமடாவாலைவாலை ஓங்காரறிங்கார வொருமைப்பிள்
ளை, செகந்தனிலேதிருவென்றுஞ்செந்தியென்றுந் திட்டான திட்டருக்கு
ஞ்செல்வியென்றும், அகந்தனிலேயமிர்தமென்றுஞ்செந்தேனென்றும்அ
ன்பானவிஷமென்றுபேச்சியென்றும், முகந்தனிலேசிந்தூரத் திலகமென்
று மோனமுள்ளவாலைபடாசத்திகேளே ௬௧

சத்தியென்றவுப்பினிடபேரேதென்றும் றபங்காததரிசையென்று
ங்காரமென்றுஞ்,சித்தானகெந்தமென்றுமண்தாமென்றுஞ் சிவசிவவன்
னமயத்தன்னமென்றும், உத்தியென்றபராசத்திபெருமைக்காரி யொடுங்
காதவாசமுள்ளவியோமசித்தி, கற்றூலுமனம்பதருங்கைகால்கூசும்கருணை
யுள்ளசத்தியைநீகண்டாற்றுனே ௬௨

## சத்தியுப்புவமலைப்பெயர்.

தானுனவமலைபிடிபேர்தான்கேளு தருவானவண்டகேசரிதானென்
றும்,கோணுனகொடிமுடியாம்பொதியிலென்றுங் குருவானபீடமென்றுங்
குறுக்கனென்றும், தேஜனசோதியென்றுந்தீபமென்றுந் தெவிட்டாதவ
மிர்தசவாக்கியமென்றுங், காணுநபூரணமாம்வமலையென்றுங் கண்டுபா
ர்முப்பூவின்கருவிதாமே ௬௩

ஆமப்பாமுப்பூவுமொன்றாய்க்கூடி யாதிபிமேலமும்மூர்த்தியானர்பா
ரு, காமப்பால்கானற்பாற்சோமப்பாலுங் கலந்துநின்றரவிமதியுமக்கினியு
மாகி, ஓமப்பாமூலமுதலாறுமாகி உடன்சேர்ந்தபொருளதனைஉற்றுப்பாரு
தாமப்பா முப்பொருளென்றிதற்குப்பேரு தண்மையுள்ளமூலமுதன்முடி
வரையுமெண்ணே ௬௪

எண்ணவேயின்னம்வெகுபேர்களுண்டா மென்மகனே புத்தியினு
ளறிந்துகொண்டு, சொன்னதொருகருயானமேதென்றுலே சொல்லறிந்து

சொல்லுகிறேன்பிண்டம்பிண்டம், மன்னவனேபிண்டமென்றால் மலேக்க வேண்டாம் மந்திரகலேவழலேமலர்பூக்குங்காலம், முன்மேயக்காலமறிந்து மைந்தா முத்திகொண்டநாதமதில்விந்தைப்பாய்ச்சே ௬௫

## பிண்டஅண்டம்.

விந்துநிலேயறிந்துவிந்துபாயுங்காலம் வேதாந்தநாதமதுக் குயிருண்டாகி, சொந்தமுடனேயிரண்டுமணியுமாகிச் சோதிமணியானதுவும்பிறையுமாகி, வந்தமதிப்பிறையதுவும்வட்டமாகி வட்டமதிரண்டுருவாய்மண்ணுமாகி, அந்தமுள்ளமண்ணுசறிஉப்பாய்நின்றே யாதியென்றபொருளானபிண்டமாச்சே ௬௬

பிண்டமென்றசுவர்க்காரவித்தைதன்னே பேருலகிலாரறியப்போறாரப்பா, கண்டவர்கள்கோடியிலேயொருவருண்டு கைம்முறையாயவர்காட்டிற்குருவுந்தோன்றும், பண்பாகநின்றபூரணத்தைக்கண்டாற் பாலகனேமுப்பூவுநன்றாய்த்தோன்றும்,விண்டதில்லேகண்டவர்கள்சொல்லார்சொல்லார் விஞகச்சுட்டலேந்துவிதியென்பாரே ௬௭

விதியானவிதியறிந்தோன்வாதங்காண்பான் விதியறியான்பதியறியான்வீணன்வீணன், சதியாகமுன்சொன்னமுப்பூவாலே சகலதொழில்கைம்முறையாய்ச்செய்யலாகும், பதியானபதியறிந்தேயபிர்தமுண்டு பாலகனேலாடமதிற்பற்றிக்கொண்டு, கெதியானமோட்சமெனநின்றயானுற்கே சாத்திற்கேசரியாள்கிருபையாமே ௬௮

## வசியத்துக்குவிபூதி.

கிருபையுள்ளபுலத்தியனேவசியமொன்று கெணிதமுடன்சொல்லுகிறேனன்றாய்க்கேளு, துருவமுள்ளருத்திரபூமியிலேசென்று சுகமாக வெந்தஅஸ்தியெடுத்துமைந்தா,அருவமுள்ள அஸ்தியுடன்விஷ்ணுமூலி ஆதிசத்திதன்னுடையவேருங்கூட்டிக்; கருவையினிச்சொல்லுகிறேன்கலசப்பாலாற் கருணேயுடன்றனைத்தேயுண்டைசெய்யே ௬௯

செய்யடாஉண்டைதனேயுலரவைத்துச் செம்மையுடனெருவடுக்கிப்புடத்தைப்போடு, மெய்யடாசொல்லுகிறேனீறிப்போகும் வேதாந்தமானதொருநீற்றைவாங்கி, வையடாசவாதுடனேபுனுகுசேர்த்து மார்க்கமுடன்அங்கெனவேலட்சமோதி, மையமென்றநெற்றியிலேவிபூதிபூசி மார்க்கமுடன்அரசரிடஞ்சென்றபாரே ௭௰

சென்றுமிகநின்றுடனேயிராசமோகம் சிவசிவாகசெகமோகம்ஸ்ரீவசியமாகும், அண்டர்பிரானருள்பெருகிவசியமுண்டாம் அப்பனேஓம்கிலியும்றியுமென்று, பண்டுபோலிலட்சமுருவேற்றிப்பின்னர் பாலகனேலலா

டமிசைப்பூசிச்செனறால், தொண்டரென்றேசத்துருக்கள் வணங்குவார்க ள் துஷ்டனென்றமிருகமெல்லாம்வசியமாமே ௭௧

வசியக் காப்பு.

ஆமென்றவசியமொன்றுசொல்லக்கேளு அதிமுதலானகொடியறுகு வாங்கி, ஓமென்றுகண்டித்துமதுவிற்போட்டே ஒருமையுடன்மண்டலஞ் சென்றெடுத்துப்பாரு, நாமென்றநீரதுவேநன்றாய்வற்றி நடுவானசொடிய துவும்பதமாய்நிற்கும், தாமென்றுதனமயமாவந்தமூலந் தருவானமூலமெ தின்றன்மைகேளே ௭௨

தன்மையென்னவெள்ளியுடன்செம்புசேர்ந்து கருவானசங்கமதுமூன் றுமொன்றாய், உண்மையுடன்தானுருக்கித்தகடுதட்டி உறுதியுள்ளமூல மதைவைத்துருட்டிச், செம்மையுடனவிவளையம்போலேசெய்து தெரி யாமற்பொதிந்ததின்வாய்சேர்த்துக்கொண்டு, நன்மைபெறச்சற்குருவைத் தியானம்பண்ணி ஞாயிறிலேசத்திமுன்புவைத்துப்போற்றே ௭௩

வைத்தெடுக்காவிவளையம்விளக்கித்தன்னை வலதுகையிற்றான்பூட் டியிருப்பாயானல், மைத்திகமுர்விழியாருமன்னர்கூட்டம் மகத்தானமிரு கமுதல்வசியமாகும், மெய்த்தரோசிம்முறைதானதிசுவித்தை வேதாந் தபூரணத்தில்விண்டமார்க்கம், உற்றதொருசேதிநன்னையுகைத்தோர்க்கேயு ரையாதேயுரைத்ததிருவுறுதிபோமே ௭௪

வசியமை.

போக்கானஇன்னமொருவசியங்கேளு புகழ்பெரியதவின்கோரோச சனைகர்ப்பூரம், வாக்கானகண்ணனிடமூலிவேரும் மகககானசந்தனமும் புனுகுங்கூட்டி, தாக்கானமந்திரம்ஓரீம்வசிசர்வமோகினிவசியமென்றே யோது, தேக்கானதில்லைநடமாடும்போலே செந்துவெல்லாந்தேடிநின்றுக தறும்பாரே ௭௫

* கண்ணனிடமூலி—விஷ்ணுகாந்தை.

பரசப்பாகிராம்பொன்றுகூடச்சேரிற் பரைவசியம்ஜோவசியம்இரண் டுமாடும், நேரப்பாஉள்ளங்கையுள்ளங்காலில் நின்றமூக்குஞ்சவ்வாதுஞ்சே ர்ந்துதானல், தேரப்பாமந்திரத்தைபென்னசொல்வேன் திரிலோகமூன்று மேவசியமாகும், காரப்பாமந்திரத்தைலட்சமோதில் கருவியெல்லாம்வசி யமடாகண்டுபாரே ௭௬

உருமாற்றமை.

வசியமென்றமாற்றமொன்றுசொல்லக்கேளு வால்நீண்டிஇருக்கின்ற கரிச்சான்பிச்சு, வசியமென்றபச்சோந்திபச்சைப்பாம்பு வல்லமையுள்ள பாம்பாணைபிச்சுங்கூட்டி, வசியமென்றகரும்பூனைகருங்குரங்கு மார்க்க முள்ளகண்ணிரண்டும்பிச்சுங்கூட்டி, வசியமென்றயானைச்[illegible]கட்டித்து ரில் மார்க்கமுடன்றான்கருக்கிகலவத்தாட்டே ௭௭

ஆட்டுவாய்புனுகுடனேசவ்வாதுகூட்டி அப்பனேசூதகமாகாதம்வி
ட்டே, ஆட்டியேயாலையிடதங்கச்செப்பில் அப்பனேவழித்துவைத்துப்ப
தனம்பண்ணி, ஆட்டெடன்றதாம்பரத்திற்சீலைசுற்றி அப்பனேவையாட்டா
ன்மைகாணாது, ஆட்டினமேர்மையதனிற்பணம்போல்நெற்றில் அணிந்தி
டவேநின்னுருவமாருங்காணார் எஅ

காணாதேபோகுமடாமையின்சூட்சங் கருவாகஉலகத்தோரறிந்தாரா
னால், வீணாகப்போகாதுகொலைகள்செய்வார் விருதுபெற்றசித்தருன்னை
வைவாரப்பா, தோணாதமையிதனைவைத்துக்கொண்டு திருவமென்றஆயி
ரத்தெட்டிதழினின்றால், காணாதகருவிதொண்ணூற்றாறுமுன்னைக் கை
லாயத்திருநடனங்காணுவாயே எகூ

### தூரத்துசெய்தியறியுமை.

காணாதற்கேயின்னமொருகருவைக்கேளு காசினியில்வேரெல்லாங்
காய்க்கும்பூக்குங், கோணாதற்குச்சொன்னபலாவேரைமைந்தா சுத்தமுட
ன்றானுலர்த்திநறுக்கிகொண்டு, பூணாதற்குமாலதேவிருக்கிக்கொஞ்சம்,பு
த்தியுடன்பாம்பாணைப்பிச்சுங்கூட்டி, ஆணவத்தான்மூன்றுமொன்றாய்ப்
பொடித்துக்கொண்டே அப்பனேஅயக்காண்டிதன்னிற்போடே அ௰

தன்னிலேபசுநெய்யால்வறுத்துக்கொண்டு சாதகமாய்காகிதத்திற்
றுழாவிவைத்தே, உன்னிதமாய்ப்பசுநெய்யாலரைத்துமைந்தா உறுதியுள்
ளதங்கமென்றசெப்பில்வைத்துத், தன்னிலையைத்தானறிந்துதியானஞ்செ
ய்து தன்மையுள்ளவெற்றிலையிற்றடவிப்பாரு, உன்னிதமாய்வெகுதூரமு
ள்ளசெய்தி உறுதியுடன்தோணுமடாவுற்றுப்பாரே அக

தோணுமப்பாவெளியிலுள்ளவஸ்துவெல்லாஞ் சூட்சமாயிம்மைக்கு
ச்சாபமில்லை, காணுமப்பாபாலர்முதல்கிழவர்மட்டுங் கருணையுள்ளபூரண
த்தின்கடாட்சத்தாலே, ஆணவமாயிம்மையைவெளியிடாதே ஆதிசத்தி
யஞ்சனதேவிபூசை, பூணுமப்பாமெய்சுருக்கந்தன்னிற்சொன்ன புத்தியு
டன்அனுதினமும்பூசைபண்ணே அ௨

### பெண்ணுக்கும் ஆணுக்குமருந்து.

பண்ணப்பாவின்னமொருகருவைக்கேளு பச்சோந்திபிச்சுடனேயா
டையொட்டி, நிண்ணப்பாசிணுங்கியொடுசிறியாநங்கை நிலையாதவிசுரமா
மூலிவேரும், கண்ணப்பாபொன்னுமத்திலையுங்கூட்டிக் கருவாகக்குமரி
யிடாதத்தாலே, நண்ணப்பாமைபோலேயரைத்துநீயு நலயானமிளகது
போல்குளிகைசெய்யே அ௩

## இடுமருந்து.

குளிகைதனைச்சிமிள்தனிலடைத்துக்கொண்டு குருவானமனோன்மணியைக்குருவாய்ப்போற்றி, குளிகைதனைதம்பனத்தான்மோகனமோதிக் குணமாகவிந்தரனின்மத்தித்தேதான், குளிகைதனையறுசுவையிலிட்டாயானால் கும்பிட்டுமதிமயங்கிமோகமாவார், குளிகைதனைகொடுத்துவிட்டுமோகியாதே குணமாகப்பொருள்பரிதயருளைத்தேடே ௮௪

## சண்டமாருதம்.

அருளானபெண்களிடபுருஷர்தானும் அயலாரைமோகித்தேயகல்வாரானால், வெருளாதேயவனுதந்தன்னிற்சேர்த்து வேணபடியறுசுவையில் தாக்கச்சொல்லு, இருளானவெளியாசையொழிந்தநல்ல இல்லிடமேவணங்கிமிகஇணக்கமாவான், பொருளானபொருளப்பாவெளியிடாதே பூரணத்தார்காரணத்தைப்புகன்றிட்டேனே ௮௫

## திரிபுகை.

புகன்றிட்டேனின்னமொரு வித்தைகேளு புகையானதிரிபுகைதான்புனிதமாக, அகன்றிட்டகருங்கழுதைச்சடைதானென்று அப்பனேயதின்கஷ்டம்நாயின்கஷ்டம், புகன்றிட்டதாம்பரத்தின்சீலையோடு பூநீறுஞ்சவர்க்காரஞ்சாரங்கெந்தி, இகழ்ந்திட்டவெடியுப்புங்கழஞ்சுவிதம் என்மகனேபொடிசெய்துதிரியிலூட்டே ௮௬

## பூதமாரணம்.

ஊட்டியேகருங்கழுதைநெய்யின்மைந்தா உத்தமனேதிரிநனைத்துத்தீபமேற்றிக், காட்டியேதானவித்துப்புகைக்கும்போது கனமானபேய்ப்பூதங்காணுதோடும், நாட்டியேதுஷ்டதேவதைகளெல்லாம் நாடாமற்கோயில்விட்டுக்காட்டிற்போகும், தாட்டிகமாப்பச்சைமரப்பட்டுப்போகும் தன்மையுடனிப்புகையைவெளிவிடாதே ௮௭

வெளிவிட்டாலுலகத்தில்துஷ்டருண்டு வேடிக்கைபோலவருஞ்செய்துபார்ப்பார், விழிகெட்டகுருடனாப்போற்றெய்வமெல்லாம் விடுவிட்டுக்காடுறையும்விதியோவென்று, பழிவிடப்போகாதுநின்னையுறறுப் பத்திரமாயிந்நூலைப்பதனம்பண்ணு, வெளிதொட்டேயொளிகொண்டஞானியானால் விஸ்தாரமாகவிதைச்செய்வார்பாரே ௮௮

## சத்துருமாரணம்.

பாரப்பாபூதமாரணத்தைசசொன்னேன் பதியானபுலத்தியனேபகைவரெல்லாம், வீரப்பாதானடங்கிமாரணமாக விதமானகருவொன்றுவிளம்பக்கேளு, நேரப்பாசெங்கொட்டைகூதநாபி நெறியானகௌரிவெள்ளைத்

தப்பாவதாணம், ஆரப்பாகார்முகிலுமெலிப்பனையுங்கூட அப்பனேசெந் தோன்றிச்சுனையுங்கூட்டே ௫௯

சுனையுடனே தருவண்டுங்கழுதைவண்டுஞ் சொற்பெரியபாச்ம்வினை பன்னிரண்டு,இணையாகாஞ்சாடிவிதங்கூட்டி என்மகனேயிராகுவின்றீவி ஷத்தாலாட்டிக், கனமானகுழம்புபோற்எண்ணிக்கொண்டு கருணையில்லா ச்சத்துருக்கள்காலிற்றாக்குத், தினவானுலெடுக்குமடாகுழம்பின்வேகந் நி ரதசொரியுடனேகுஷ்டமாகும் ௬௰

அதர்க்குமுறிவு.

குஷ்டமொடுகுழிவிழுந்தாரணாந்துசர்வான் குடிகெடுக்கும் பாவிக ளுக்கிதுவேவேண்டும், கஷ்டமுற்றுப்பாவிகள்தான்றிரும்பிவைத்து காவி லேபணிந்திட்டால்கருதக்கேளு,மட்டமென்றவருகதுவோர் பிடிதான்மை ந்தா மார்க்கமுள்ளவெண்குன்றியிலைபவ்விதஞ், சட்டமாயனைத்ததனைமே லும்பூசித் தன்மையுடன்றான்குடிக்கச்சாந்தமாமே ௬௧

சாந்தமென்றேயிக்குழம்பையுலகத்துள்ள சகலருக்குஞ்சொல்லாதே சபிப்பார்சித்தர், காந்தமென்றகாந்தரனைவிடுத்தோருண்டு கருவானஎளி யோர்கள்பெரியோருண்டு, வேந்தரென்றவேந்தருண்டுசிசுக்களுண்டு விந் தைசொன்னகுருவுண்டுபெண்களுண்டு, பாந்தமுடனிவர்களுமேகுற்றஞ் செய்தால் பதறாதேபதறினதாற்பாவமாமே ௬௨

பாவமென்றபாவமதுசெய்யநன்றே பலபேதசாத்திரத்தைப்பார்க்க நன்றே, தாமென்றதாரசுக்குதோசமமாகா தன்மையில்லாக்கோபத்தாற்ற பசபாழும், சோபமென்றபெண்கண்மேன்மோகம்வேண்டாஞ் சொந்தம னையிருந்தாலுந்தோஷமில்லை, கோயிலென்றுங்குளங்களென்றுந்தேட வேண்டாங் குணமாகஉன்னிடத்திற்குறிதான்காணே ௬௩

ஞானம்.

காணுதற்கேயின்னமொருகருவைக்கேளு கருணையுள்ளபுலத்தியனே கணிதவானே, பூணுதற்குநவ்வெழுத்தின்மேலேமைந்தா புத்தியுடன்மவ் வெழுத்தாற்சிகாரந்தோன்றும், பேணுதற்குமவ்வெழுத்தின்மேலேசென் றால் பிலமாகவவ்வெழுத்தின்கீழதாகச், தோணுதற்குச்சிவாலயமுகதியு முண்டு சுத்தமுடனவ்விடத்தேகண்டுதேறே ௬௪

கண்டுமனந்தேர்ந்தந்த நதியின்மூழ்கிக் கடலமலர்சிவாலயத்தை ப் பூசைபண்ணில், கண்டமென்றபூரணத்தில்கீழதாகச் சபையானசி வாலயந்தனதிலுண்டு, கொண்டுநின்ற அநேகதமாமயிர்ப

பாலத்திற்கொள்ளாநின்ற சிவாலயங்கணதிகளுண்டு, வண்டேனவேவாசி மலர்தனையெடுத்து மகத்தானசிவாலயத்தைப்பூசைபண்ணே. ௯௫

பூசையதுசெய்வதற்குப்பலத்தைக்கேளு புனிதமுடனட்டாங்கஞ் சித்தியாகும், நேசமுள்ளஅட்டாங்கஞ்சித்தியானால் நிலையானசிவயோக நினைவிற்றோன்றும், பாசமில்லாசிவயோகநினைத்தபோதேபரமகுருதேசிக னும்பதிவாய்வந்தே, ராஜனென்னசிவராஜயோகங்காட்டி நடுமனையினபூ சைவகைநல்குவாரே. ௯௬

வகையானபரமகுருவருவதேது மார்க்கமுள்ளசரிதைவழிமார்க்கத் தாலே, திகையாமற்சரிதைவழிநடந்தாயானால் சிவகிரியையதின்வழி யேதோன்றும், பகையாமற்கிரியைவழிநன்றாய்ப்பார்த்தாறபாலகனேயோ கவழிபரிவாய்த்தோன்றும், நகையாமல்யோகவழிநன்றாய்ப்பார்த்தால் நன் மையுள்ளஞானவழிநாடும்பாரே. ௯௭

பாரப்பாபுலத்தியனேபிரமக்கியானி பரிவானஞானமதைப்பகரக்கே ளு, காரப்பாஆதாரமூலந்தன்னிற் கனிவானஅக்கினிதன் றவிதன்னைச், சேரப்பாமுக்கோணச்சுடரினின்று திருவர்சிபானமேதாருசெங்கனமேவி ச், சாரப்பாவந்தமனைசொந்தமென்று சங்கையுடன்றானிருந்து தன்னைக காணே. ௯௮

காணப்பாமேல்வழியைக்கண்டுகூடிக் கருணையுடனவ்வழியைக்கலந் துமேவிப், பூணப்பாநிராதாரஞ்சித்தமாகிப் பூரணமாய்நின்றபூரணமதாகி த், தோணப்பாசிவன்மன்மாற்பூசைசெய்து தொடங்கிநிறைதில்லைவெளிக ண்டுமேற்றுப், பேணப்பாபிரபஞ்சத்தாசையற்றுப் போண்டச்சோதியி லேபுகுந்துவாழே. ௯௯

புகுந்துமிகவாழ்ந்ததினாற்பலத்தைக்கேளு புனிதமுடன்பிறப்பிறப் புமற்றுநலல, ஜெகச்சோதியாதமதிற்சேர்ந்துவாழ்வாய் திருவானபூரணத் தின்கிருபையாலே, இகழ்ந்துநீமனமொத்துப்பாராவிட்டால் எண்ணமொ ண்ணாப்பிறப்பிறப்புமெய்துஞ்சொன்னேன், தகுந்ததொருஞானத்தின்ற ன்மைகண்டால் சாயுச்சியபதவியிலேசாரலாமே. ௱

சாராமற்காயசித்திசெய்துநீயுஞ் சமர்த்தாகவுலகத்திற்சஞ்சரித்தால் வீரானஆணுவத்தைவிட்டுமைந்தா விருதுபெற்றசித்தனென்றே விளக்க மாகத், தாராளமாகநீசாக்குவைப்புந் தண்மையுள்ளவையித்தியமுந் தா னேசெய்து, போதமுப்பூவால்வாதங்கண்டு பேரின்பநிலைகாணப்பெரு மைகேளே. ௱௧

## சைவீரவைப்பு.

கேளப்பாபச்சையென்றுஞ்சாக்குவைப்பு கெடியானசைவீரவைப்பு க்கேளு, நாளப்பாகெந்தகந்தான்பலமிரண்டு நன்மையுள்ளபுத்தோட்டிலு ருக்கிக்கொண்டு, வேளப்பாசூதமதிற்பலந்தானெட்டு விட்டதிலேகின்

டையிலேயனல்படாதே, கூழப்பாபோலவுமேஅயத்தாற்கிண்டுகுணமான ரசமதுவுமடிந்துபோமே. ௱௨

போமப்பாகரிபோலேசூதந்தானும் புத்தியுடன்பொடிசெய்துதோண்டிக்கேற்றி, நாமப்பாமறுதோண்டிகவிழ்த்துமூடி நன்மையுடனுமுந்தைத்துச்சீலைசெய்து, தாமப்பாமதின்மேல்மண்சீலைவைத்து தளமாகச்செய்தனையுங்காயவைத்து, ஓமப்பாகணபதிக்குப்பூசைசெய்து உத்தமனேயடுப்பேற்றிமூன்றுசாமம். ௱௩

சாமமடாதீபம்போலெரித்துநீயுந் தண்மையுடன்றானிறக்கிப்படுக்கப்போடு, நேமமுடனாரினபின்னவிழ்த்துநீயும்நினைவாகமேற்றோண்டியெடுத்துப்பாரு, தாமமுடன்மாப்போலேயிருக்குஞ்சூதந் தனையெடுததுநிறைக்கவுமேகுறையாதப்பா, வாமமுடன்சூதமென்றமாவுதானும்மைந்தனேபலமெட்டுவைத்துக்கொண்டே. ௱௪

கொண்டதொருவெடியுப்புத்துருசுசீனம் குணமாகவகைக்கிரண்டு பலந்தான்கூட்டிக், கண்டதொருநவச்சாரம்பலமுநாலு கனமானபூநீறுபலமதொன்றே, டுண்டதோரன்னத்தின்பேதிதானும் உத்தமனேபலமூன்று கல்லுப்புத்தான், பண்டையிலேசேர்த்தாப்போல்பலமிரண்டு பாலகனேகல்லுப்புந்துருசுங்கேளே. ௱௫

கேளப்பாவெளுக்கவேவறுத்துக்கூட்டுக் கிருபையுள்ளஎழுசாக்குநன்றாயாட்டி, மாளப்பாமாச்சூதஞ்சேர்த்துநீயும் மார்க்கமுடன்றானரைத்துக்காயவைத்து, கேளப்பாகாசியென்றகுப்பிக்குத்தான் குணமாகவந்துமண்சீலைசெய்து, தாளப்பாவாரமற்காயவைத்துத் தண்மையுள்ளகுப்பியைமருந்தையேற்றே. ௱௬

ஏற்றியேநாற்சதுரமாடம்போலே இதமானஅடுப்புமேகிழக்கதாகப், பார்த்திபனேநீயிருக்கவடக்கத்தான பாங்கானஅடுப்புமட்டந் திண்ணைபோட்டுப், போற்றியேபுகைபோகமேற்குத்தானும்பூமிமட்டுந்தரையோடேபொதிந்துவைத்துச், சாற்றியேசாந்தமேலநன்றாய்தநீத்திச் சமர்த்தானகணபதிக்குப்பூசைபண்ணே. ௱௭

பண்ணப்பாவாலுகையில்தாளியொன்று பாங்காகஅடிகனத்தபாண்டமேற்றி, நண்ணப்பாபொடிமணல்நால்விரன்மட்டிட்டு நாதாந்தமனோன்மணியைத்தோத்திரஞ்செய்து, கண்ணப்பாமேல்நோக்கிதீபம்பார்த்துக் கருணையுள்ளகுப்பிதனையதன்மேல்வைத்து, மண்ணப்பாகழுத்தளவுமணல்தானிட்டு யார்க்கமுடன்கமலம்போலெரித்திடாயே. ௱௮

எரித்திடவேபன்னிரண்டு சாமந்தானும் என்மகனேயெரிக்கும்விதஞ்சொல்லக்கேளு, பொருத்திடவேபகலைக்கேயெரித்துநீயும் பத்தியுடனிராத்திரிக்கவ்வடுப்போடேவை, மறுதினமும்பகலைக்கண்டெரித்துநீயு

ம் ம்ாற்றிவைக்குமூன்றுநாளெரிக்கும்போது, முரித்திடவேயனல்விறவெ ரித்திடாதே முன்போலநீயெரித்துச்சிலாகைப்போடே. ௱௬

சிலாகையிட்டுநீகிண்டிப்பார்த்தாயானால் தீர்க்கமுடன்வெண்மையா க்குப்பிவாயில், நிலாவதுபோல்வெண்மையாய்மூடிக்காணும் நில்வாமாய டிபிலேகறுகறுத்து, கலகைமது சிலாகையிலேகாணுமானல் கனமானபத மிதென்றுகண்டுகொண்டு, பலவகையிலிருக்காமல்அனலேயாற்று பாகம டாஅவ்வேளைபரிந்துபாரே. ௱௰

பாரடாகுப்பிதனையெடுத்துநீயும் பத்தியுடன்குளிர்ந்தபின்னருடை த்துப்பாரு, நேரடாவீரமதையென்னசொல்வேன் நிசமானபூரணச்சந்திர னைப்போலே, போடாபெற்றதொருவீரமாச்சுப்பெலமாகமுன்மருந்திற்பா திசேர்த்துக், காரடாமுன்போலேமூவிசைசெய்திட்டால் கனமானகொச் சியென்றவீரமாமே. ௱௰௧

## இரசகர்ப்பூரவைப்பு.

வீரமென்றவீரவைப்புக்கைம்முறையாய்ச்சொன்னேன் விருதானபூர வைப்பைவிளம்பக்கேளு, நேரமில்லைமுன்செய்தசூதமாவில் நிறுத்தெடு த்துநாலுபங்குகுப்பிக்கேற்றி, பாரமில்லாவாலுகையிற்காலம்போலே பத மாசஎரிக்கையிலேயுருகும்பாரு, வோரமில்லையுருகுபதந்தன்னைக்காண உ றிதியுடனிருசாமமெரித்துமேலே. ௱௰௨

மேலாகச்சிலாகையிட்டுக்கிண்டிப்பாரு மேன்மையுடன்றானுருக்கி க்குழம்புபோலாம், காலானசினம்அரைப்பலத்தைத்தானுங் கணக்காகப் பொடித்ததிலேபோட்டுக்கிண்டி, நாலானசாமமட்டும்எரித்துநீயும் நன் மையுடன்சிலாகையிட்டுப்பார்த்தாயானல், கோலான அடியின்மருந்தில்லா விட்டால் குருவானபதமென்றுகுணமாயாற்றே. ௱௰௩

## சூடன்வைப்பு.

ஆற்றியே குப்பிதனையடைத்துப்பாரு அப்பனேவெள்ளையாயிருக்கு ஞ்சொன்னேன், போற்றியேபூரவகைப்பதனம்பண்ணு புண்ணியனேயி ன்னமொருவித்தைகேளு, சாற்றுகிறேன்ஆலாத்திப் பூரவைப்பைத் தன் மையுடன்றானுரைக்கத்தயவாய்க்கேளு, மேற்றேலைப்போக்கினதோர் * முத்தக்காசும் விளங்கியதோர்வலங்கமிடைவாரகன்பத்தே. ௱௰௪

* முத்தக்காசு-கோரைக்கிழங்கு.

பத்தானசினமஃதிரண்டுபத்துப் பாங்கானவெடியுப்பு நூறுங்கூட் டி, சித்தானகல்வத்திற்பொடித்துக்கொண்டு சிவந்தகருவாப்பட்டைத்த யிலம்வாங்கி, முத்தானமிச்சாமமரைத்துமைந்தா முறையுடனேயிட்டுப்

போலுதிர்த்தநன்கு, வற்றுதகங்காசலக்குப்பிதன்னில் மார்க்கமுடனை வாசியடைத்துக்கேளே. ௱௰௫

கேளப்பாமாக்கல்லாலடைத்துநீயுங் கிருபையுடனெழுசீலைமண்ணு ஞ்செய்து, நாளப்பாநன்றாகக்காயவைத்து நாதாந்தவாலைபதநாடிநின்று, வாளப்பாவாலுகையிற்பாண்டம்வைத்து விதமாகஆறுவிரல்மணல்தானி ட்டு, வாளப்பாகுப்பிதனைமேலேயிட்டு வண்மையுடன்பானைரொம்பமணலல்மூடே. ௱௰௬

மூடியேயடுப்பேற்றிக்கமலம்போலே மூர்க்கமுடனொருநாழியெரித் துப்பாரு, நாடியேமணற்கூடுநிரம்பவானல் நன்மையுடன்பாண்டமதை யிறக்கிவைத்துக், கூடியேகுளிரநன்றாயாறவிட்டுக் குருவானகுப்பிதனை யுடைத்துப்பாரு, தேடியேயலைந்தாலுமிந்தப்பூரம் தேசத்தில்விசேமெ ன்பார்காணே. ௱௰௭

பச்சைகர்ப்பூரவைப்பு.

காணப்பாஇன்னமொருவைப்புக்கேளு கருவானபூரமடாபச்சைப்பூ ரம், பூணப்பாகூடனொருபலமும்வாங்கிப் புனிதமுள்ளவெடியுப்புக்காற்ப லந்தான், தோணப்பாவுவருப்புப்பலமரைதான்கூட்டி துரிதமுள்ளபுனு குடனேயேலந்தானும், வேணப்பாகஸ்தூரிவகைக்குத்தானும்விளங்கவே யரைகழஞ்சிவேண்டுவாயே. ௱௰௮

வேண்டியேகல்வத்திலரைத்துநன்றாய் விதமானசந்தனத்தின்தயிலத் தாலே, தோண்டியேபிட்டுப்போற் பிசர்க்கொண்டு சுத்தமுள்ளகுப்பியி லாயிட்டுமைந்தா, தூண்டியேமாக்கல்லால்வாயைமூடி துரிதமுடனெழு சீலைமண்ணுஞ்செய்து, தாண்டியேதாளிரையமணல்தானிட்டுத் தன்மை யுற்றகுப்பிவைத்துமேலுமூடே. ௱௰௯

மூடியேமணற்செம்பியோடுமூடி மூர்க்கமுடன்சீலைமண்மலுவாய்ச் செய்து, நாடியேசவிதனிலேகாயவைத்து நன்மையுள்ளகணபதியைநாடிக் கொண்டு, தேடியேவாலுகையிலேற்றிமைந்தா திறமாகவொருசாமந்தீபம் போலே, கூடியேயெரித்துமெல்லஆறவைத்துக் குருபதத்தைதான்வண ங்கியெடுத்துப்பாரே. ௱௨௰

எடுத்துமிகப்பார்க்கையிலே யென்னசொல்வேன் இன்பமுள்ளசிறு பெட்டியாக்ககடுபோலக், தொடுத்துநின்றகாமரைப்பூவாசம்வீசுந் துரைத் தனத்தாக்கேற்றபச்சைப்பூரமாச்சு, அடுத்துநின்றபேர்களுக்குமிந்தவா சம் அதிகமுடன்செங்கழுநீர்ப்பூப்போல்வீசும், கடுத்துநின்றநீர்கடுப்புகல் லடைப்பு குணமானபித்தமெல்லாங்காணுந்தோடும். ௱௨௰௧

வாலைரசவைப்பு.

காணுதகாட்சியெல்லாமிந்நூலிற் கருதினேனின்னமொருகருவைக் கேளு, தோணுதவாலைரசம்வைக்குமார்க்கஞ் சொந்தமுடன்சொல்லுகிறே

ன்கூட்சமாக, பேணதொருசாதிலிங்கந்தன்னைநீயும் விதமாகத்தான்பொடி
த்துத்தோண்டிக்கேற்றி, நாணுதகன்னுரிவேர்தான்கொஞ்சம் நன்மையுட
ன்பொடிசெய்துகூடப்போடே. ௱௨௨

போட்டுமேமறுதோண்டிதன்னைநீயும் புனிதமுடன்றான்மூடிபொரு
ந்தவைத்து, நாட்டியேசீலைமண்ணேழுஞ்செய்து நலமாகவுலர்ந்தபின்பு
நன்மையாக, ஆட்டுமேகணபதிக்குப்பூசைசெய்து அப்பனேவாலுகையி
லேற்றிமைந்தா, காட்டுமேகாடாக்கினியாகத்தானுங் கனமாகவொருசாம
மெரித்திடாயே, ௱௨௩

எரித்தாங்கஅனலணைத்தேயிறக்கிமைந்தா இன்பமுடன்ஆறவிட்டே
யவிழ்த்துநீயுந், தரித்ததொருமேற்றோண்டிதன்னைமைந்தா தண்மையுள்
ள * வராகமூடிதன்னுலேதான், தெரிந்துமிகப்போகாமற்றுடைத்துநீயுந்
திறமாகப்பார்க்கையிலேசூதம்போலே, பொருந்திமிகஇருந்ததொருவாலை
தன்னைப் புத்தியுடன்குடுக்கைதனிலடைத்துவையே. ௱௨௪

* வராகமூடியென்பதுபன்றிமயிர்க்கற்றை

வாலைரசத்துக்குத்தீரும்வியாதி.

வைத்ததொருவாலைதனைப்பணவிடைக்கால்மைந்தா மார்க்கமுடன்வி
டைத்தலைவேர்சந்தனத்தில், மெய்த்திட்டமாசநீபத்துநாள்தான் மேன்
மையுடன்அந்திசந்தியீய்ந்தாயானல், கைத்ததொருபுகையுடனேபுளியுந்த
ள்ளிக் கனமாகஇருபதுநாள்கழிந்தபினபு, செய்திட்டந்தவறுமல்வோமங்
தேய்ததுச் சிவசிவாதலைகுனிந்தால்புளியைக்கூட்டே. ௱௨௫

கூட்டவேதீறுகிறவியாதிகேளு கூறுகெட்டசொறிசிரங்கு கிரந்தி
நோயும், நாட்டவேபுண்புரைகள்வயிற்றிரைச்சல் நலமானபேதியுடன்கா
ய்ச்சல்தீரும், பூட்டவேதேகமதிம்காந்தமீறி புனிதமுடன்றுதுவிர்த்துப்
பெலமுண்டாகும், வாட்டமாமின்னமொருஅநுபானங்கேள் மைந்தனே
வாலைரசம்விராகன்ரண்டே. ௱௨௬

வாலைரசத்திற்கு அனுபானம்தீருநோய்கள்.

விராகனிடையிரண்டப்பாபரங்கிப்பட்டை வீரானதிப்பிலியிலவங்
கம்ரண்டு, விராகனிடைநாலப்பாகரும்புவெல்லம் விசையடங்காத்தாமரை
த்தேயுண்டைகேளு, விராகனிடைமுக்காலாயுருட்டிமைந்தா விறுகெட்
டமானிடருக்கேழுநாள்தான், விராகனிடைமுக்காலாயந்திசந்தி விவரமு
டன்றான்கொடுத்துமேலுங்கேளே. ௱௨௭

கேளப்பாபத்தியந்தானஉப்பாகாது கிருபையுடன்பசுவின்பால்கூட்
டிக்கொள்ளு, நாளப்பாபதினைந்தாநாளிலேதான் நன்மையுடன்தலைமுழுக்
குமுழுகவாறு, கேளப்பாவொன்றுமில்லைக்கோழிச்சாறுகூட்டியேபத்திய

த்தைமுறித்துப்போடு, வேளப்பாவாயெல்லாம்வெந்துகாணும் விதமாகத் தான்றனேயாறுந்தானே. ௱௨௮

தாந்தானேயாறுகையிற்றிருநோய்கள் தன்மையில்லாமேகவெள்ளை தடிப்புப்புண்கள், சேர்ந்தகொருஅழிகிரந்திகுழிக்கிரந்தி தீராதஅரையாப்புமேககூலை, போந்தானேகால்முடக்குகைம்முடக்குப் பொல்லாதநோய்களெல்லாம்போகுஞ்சொன்னேனை, நாந்தானவாலையிடகருணையாலே நன்மையிலலாவியாதியெல்லாநலமதாமே. ௱௨௯

தாதுபுஷ்டிக்குக்குளிகை.

நலமானஇன்னமொருகுளிகைகேளு நன்மையுள்ளவாலைரசங்கழஞ்சி மூன்று; குலமானசாதிலிங்கம்கழஞ்சியொன்று கூறுகிறேம்வெண்காரங் கிராம்புகஞ்சா, தலமானமுருங்கைவிதைசாதிக்காயுந் தன்மையுள்ளசாதிபத்ரிமுத்தக்காசு, பிலமானஅபினபூனைக்காலிவித்தும் புண்ணியனேசாரத்தின்பருப்புங்கூட்டே, ௱௩௰

கூட்டுவாய்பூமிசர்க்கரைக்கிழங்கு குணமாகவகைக்கரைப்பலந்தான் கூட்ட, நாட்டுவாய்பொடிசெய்துதேங்காய்க்குள்ளே நன்மையுடன்றனைத்துச்சாணமேற்றிப், போட்டுவிடபத்தெருவிற்புடந்தானப்பா புண்ணியனே * சிரட்டையதுவேகும்போல, ஆட்டுவாயாறினபின்சிரட்டைநீக்கி அப்பனேமுருங்கைப்பூச்சாற்றினாலே. ௱௩௧

* சிரட்டை-கொட்டாங்கச்சி.

முருங்கைப்பூச்சாற்றாலேமூன்றுசாமம் முக்யமுடன்றனைத்துக் கழற்சிக்காய்போல், நெருங்கவேயுருட்டியுலர்த்திக்கொண்டுநீமகனேயோருண்டைநினைவாய்க்கேளு, நருங்கவேபொடிசெய்துசர்க்கரையிலுண்ணு நன்மையுள்ளபுளிகள்ளிச்சாதமுண்ணு, குறுங்கையென்றபசுவின்பாற்சர்க்கரையுங்கூட்டு குணமாகத்தானருந்திக்கூடுவாயே. ௱௩௨

கூடுவாய்பெண்களுடன் போகஞ்செய்யில் குணமாகவிந்துதம்பனமேயாகி, நாடுவாயிடுப்புவிடமாட்டாதப்பா நாரியர்கள்சோபமானடுங்குவார்கள், தேடுவாயிடுப்புவிடமாட்டாதாகில் திறமானகுளிகையிடதிறத்தினாலே, ஓடாதேயுனதுவிந்துவிழுந்திடாது உத்தமனேபெண்களெல்லாமுறவாவாரே. ௱௩௩

உறவானகுளிகைதனையுலகத்தோர்க்கே யுண்மையுடன்றன்கொடுக்கவுறுதிகண்டு, திருவானபொருளப்பாவேணதீவார் திறமாகவாங்கியதைத் தருமஞ்செய்தால், பரமானபரமரிடபாதங்காட்டும் பரமகுருதான்வருவார்பணிந்தாயானால், நிறமானநிராமயத்தின்ஸ்வரூபங்காட்டி நினைவாலேயொளிகாட்டிவெளிசொல்வாரே. ௱௩௪

யெளிசொல்வார்பொருளாசையின்மையாலே வேதாந்தகுருசொல்லி ல்வெளியாய்க்காணும், வளியாவளிதோன்றுமிராஜவீதி மற்றமற்றயோக மெல்லாங்குருட்டுவிதி, ஒளிசொல்வேனென்றுசொல்லி யுலகக்குருவெல் லாம் உன்னிடத்திற்பொருள்பறித்தேயுடலெழுத்தைச்சொல்லி, விழியத ணைமுடிப்பான்றேபோவோர் விழிமுடிலொளியங்கேவிளம்புவாயே. ()

காமகேசரிகுளிகை.

விளம்புவேனின்னமொரு குளிகைக்கேளு வீரியமாமதனப்பூஅபின்சி ராம்பு, தளும்பாமல்சாதிக்காய்மாட்டிமொக்குத் தங்கபஸ்பமசாம்பிரா ணிபதக்கங்கூட, அளம்பாமல்முருங்கையுடன்ஆலரசுஅத்தி அதின்வித் துமதூமுடன்சமனுக்கூட்டிக், குளம்பாகமுருங்கைப்பூச்சாற்றாலாட்டிக் குண்மாகத்தான்வழித்தேயுண்டைபண்ணே. ௱௬௫

உண்டையதுசிறுசுண்டைக்காய்விதந்தான் உத்தமனேயநுபானஞ் சொல்லக்கேளு, உண்டையதுபசுவின்பாற்றன்னிற்கொள்ளு உத்தமனே முருங்கைப்பூபோட்டுக்காய்ச்சி, உண்டையதுமண்டலந்தான்அந்திசந்தி உண்டவர்க்கேயெழுஜென்மபிலனுண்டாகும், உண்டதினாற்றுதுவிர்த்தியதி கமுண்டாம் உத்தமனேயோகியென்றுலபோகியானே. ௱௬௬

போகமதுசெய்தகினால்விந்தறாது பூதலத்திற்பெண்களெல்லாநடுங் குவார்கள், சோகமறமெத்தவண்டாம்பெண்கள்மோகஞ் சேர்ந்துமேமு கந்தளர்ந்துவாடுவார்கள், வேகமதுதிருந்தற்குவேறேவேறே விடியமட்டுஞ் செய்தாலும்விந்தறாது, பாகமாய்கிருஷ்ணவதாரந்தன்னில் பன்னிரண்டா யிரமென்னும்பாவைமாரே. ௱௬௭

பாவையாரைப்புணர்ந்திந்தக்குளிகையாலே பாலகனேகாமகேசரியி தப்பா, சேவையில்லையென்றாலுமனங்கேளாது தெரிவைபனைந்நூறுபே ர்தினம்போகாது, கோலமின்றிமன்மதனார்வளைத்துவிலலும் குமரிகடன் பார்வையம்புங்கொள்ளுநாள்வேசம், பாவையர்களெல்லோரும்வசியமாவார் ப ட்சமாய்மன்மதன்போலீலைசெய்யே. ௱௬௮

சர்வசுரகுளிகை.

செய்யவேயிம்மருந்தை யுலகத்தோர்க்குச் செப்பாதேயாசருக்குச் செய்தாலும், ஐயனேபுலத்தியனே யறிவுள்ளோனே அரசசெலாமுனைப் பணிவாருடையாகி, மெய்யாகஇன்னமொருகுளிகைகேளு மேன்மையில் லாச்சுரங்களதுதிர்வதற்குத், துய்யதாய்க்கெளரியொருபலந்தானப்பா தூ க்கியதைமுலைப்பாலிலூறப்போடே. ௱௭௰

போட்டப்பாமூன்றுநாளூறப்போட்டுப் புனிதமுடன்றானெடுத்தே யோட்டில்வைத்து, நாட்டப்பாமுலைப்பாலாற்சுருக்குத்தாக்கு நன்மையுடனூற்சாமநயந்துநீயும், தேட்டப்பாகௌரியதுசுத்தியாகுந் திறமாகத்தாளமோர்பலந்தான்வாங்கி, கூட்டப்பாசுண்ணாம்புக்குள்ளேவைத்துக் குணமாகச்சுத்தசலந்தன்னையூற்றே. ௱௪௧

ஊற்றியேநீறியபின்னெடுத்துநீயும் உத்தமனேஏழுவிசைநீற்றசுத்தி தோற்றியேஇரண்டுமொன்றாக்கல்வத்திட்டுத் துரிதமுடன்றானரைக்கும் போதிலேதான், தேற்றிமேமுலைப்பாலால்நாலுசாமந் திறமாகத்தானரைத் தேயுழுந்துபோலே, பார்த்திபனேயுருட்டியதைநிழலுலர்த்திப் பக்குவமாயுலர்த்தியதைப்பதனம்பண்ணே, ௱௪௨

பண்ணப்பாசுரம்வந்தோர்தனக்குத்தானும் பாங்கானமாத்திரைதானென்றுகேளு, உண்ணப்பாமுலைப்பாலின்மூன்றுநாளும் உறுதியுடனிருவேளையுண்மையாக, தண்ணப்பாதான்கொடுக்கமூன்றுநாள்தான் தயவானபித்தமெல்லாந்தானேகக்கும், கண்ணப்பாபித்தமெல்லாங்கக்கும்போது சுகமானசுரங்களெல்லாங்காணாதென்னே. ௱௪௩

காணாதநாலாநாள்வரைக்குமைந்தா கருநாகப்புளியையுந்தள்ளச்சொல்லு, நோணாததுவரையுடன்கத்திரிப்பிஞ்சு சுகமாகத்தான்கூட்டியுண்ணச்சொல்லு, ஆணானஅரோசியங்கள்வந்திட்டாலும் அப்பனேபத்தியங்கள்தவறிட்டாலும், வீணானமிளகுதனைகியாழம்பண்ணி வீரியமாய்த்தான் கொடுக்கமீளும்பாரே ௱௪௪

மீளுமேமிளகுதக்குமுறிவுமாச்சு மிஞ்சாதவாதசுரம்விட்டுப்போச்சுத், தாளுமேபித்தசுரங்குளிருங்கூடத் தயவானஅய்யசுரமாறல்கூடச்; கோளுமேகள்ளசுரமூன்றுமாறல் குடிகெடுத்தகாச்சலிடகுடிலந்தீருப், நாளுமேசுரமுதலாய்த்திருமப்பாநாட்டோர்க்குச்செய்திடவேநன்மையாமே.

## சுரத்துக்குப்பாஷாணகுளிகை.

நன்மையாயின்னமொருகுளிகைகேளு நாடாதபாஷாணக்கட்டிவாங்கி, வெண்மையாமெருக்கம்பால்நாலுசாமம் மீறுமழ்சுருக்கிடவேசுத்தியாகும், வண்மையுள்ளஇலிங்கமதைமுலைப்பால்தன்னில் மாக்கமுடனூற்சாமமூறச்சுத்தி, தண்மையுள்ளவெண்மிளகுமூன்றுமொன்றாய்த் தான்சேர்த்துக்கல்வத்திலரைத்திடாயே. ௱௪௫

அரைத்திடுவாய்சம்பழத்தின்சாற்றினாலே அப்பனேநாற்சாமமரைத்துநீயுந், திறத்துடனேயுழுந்துபோற்றிரட்டிமைந்தா திறமாகநிழலுலர்த்திவைத்துக்கொண்டு, பரப்புடனேகுளிர்காய்ச்சல்சகலத்துக்கும் பணபாகுளிர்ந்தநீர்தன்னிற்றாக்கு, உரைத்துமேமூன்றுநாளாறுவேளை உத்தமனேதான்கொடுக்கவொழிந்துபோமே. ௱௪௬

போமப்பாபுளியுப்புமற்றொன்றுகா புலத்தியனே வமுதனையுந்தவ ளையாகும் —நாமப்பாவழாதமொன்றுகேளு நன்மையுள்ளமிளகினிட கியமூமிந்து —வேமப்பாஎட்டாநாளோமங்கேய்த்து வெந்நீரான்முழுக்காடிச்சுட்டுபுளிகூட்டுத் -காமப்பாகுளிச்சுரங்கள்தானேதீர்ந்து தணமையுடனேதானிருப்பார்தயவாய்க்கேளே ௱௪௮

கேளப்பாவாந்தியுடன்பித்சமீறில் கிருபையுடன்மிளகுநீர்குடிக்கத் தீரும், வேளப்பாபாஷாணந்தின்றபேர்க்கு விதமாகமிளகொருசேர்தன்னை வாங்கி, நாளப்பாஅரைத்தேஉள்ளுக்கிய நன்மையுள்ளபாஷாணம்விறுகெட்டுத், தாளப்பாமலத்துடனேமலமாய்ப்போகுந் தயவானமாற்றறந்து கனதாய்நில்லே ௱௪௯

சுரத்துக்கு அமிமன்குளிகை.

நில்லப்பாஇன்னமொருகுளிகைகேளு நிலையாதசுரங்களதுநிவர்த்தியாக, அல்லப்பாஅமினியதுவிராகனிடையாறு அன்பானசுககுமதுவிராகனிடையேழு, நல்லப்பாவிராகனிடைதிப்பிலியுமெட்டு நன்மையுள்ளசீரகமொன்பதிடைகூட்டு, சொல்லப்பாமிளகுபத்துவிராகனிடையாகச் சுகமாகஇந்துமொன்றாய்க்கல்வத்திட்டே ௱௫௰

கல்வத்திலரைத்திடுவாய்விஷ்ணுகாந்தி கனமானகிராமமதால் நாலுசாமம், வலுமைபெறத்தானரைத்துக்குன்றிபோலே மைந்தனேதானுருட்டிநிழலுலர்த்தி, அலேவுபெற்றசுரங்களுக்குமூன்றுநாள்தான் அப்பனே தான்கொடுக்கஅநுபானங்கேள், நலுவைத்த * வில்லையொடுவிஷ்ணுகாந்தி நன்மையுள்ளசீரகம்வெற்றிலையின்காம்பே ௱௫௧

* வில்லை—வில்வம்.

காம்புடனேநாலுமொன்றாய்க்கியாழஞ்செய்து கனமானவொருகுளிகைஆறுவேளை, தாம்புடனேதான்கொடுக்கசுரங்கள்தீரும் தருவானகழிச்சலொடுதாபசுரந்தீரும், நாம்பானபெரியோர்க்குஞ்சிறியோர்க்குமாகும் நன்மையுள்ளபத்தியந்தான்புளியைமாற்று, வேம்பானபுளிகூட்டில்வேறொன்றில்லை விதமானகாய்ச்சலதுவிட்டிடாதே ௱௫௨

விட்டிடாச்சுரங்களுக்குமூன்றுவகைகுளிகை விதமாகச்சொன்னதைநீசெய்துமைந்தா, இட்டிடுவாய்ப்பெட்டியிலேபணங்கள்போலே இருத்திவைக்ககுளிகைகட்குமுயிருண்டாகும், பட்டிடவேநாட்சென்றாற்குளிகைவேகம் பார்க்கமுன்னேசுரங்களெல்லாம் பதறியோடும், சுட்டிகள்போல்துடுதுடுக்காய்ச்செய்யவென்றால் சுகமாககுளிகையொன்று சொல்லுவேனே ௱௫௩

## சாத்துக்குவெண்காரகுளிகை.

சொல்லுவேனிலிங்கமொன்றுநாபியொன்று சுகமானவெண்காரந்திப்பிலியுமிளகும், வெல்லுவேனேர்வாளமாறுமொன்றாய் விதமாகச்சுத்திசெய்துசமனாய்க்கூட்டிக், கெலலுவேன்பழச்சாற்றாலநன்றாயாட்டி கிருபையுடன்குன்றிபோல்நிழலுலர்த்தி, நல்குவேன்பதனமதாய்வைத்துக்கொண்டு நன்மையுள்ளவாதசுரந்தனைக்குக்கேளே ௱௫௪

கேளப்பாமூன்றுநாளாறுபோது கிருபையுள்ளசர்க்கரையிலுண்ணத்தீரும், நாளப்பாபித்தசுரந்தனக்குத்தானும் நற்சீரகத்தினிட நீரிற்றாக்கு, வாளப்பாசேத்மசுரம்இஞ்சியிலேதீரும் வன்மையுள்ளமூன்றுநாள்கொடுக்கும்போது, தாளப்பாசுரமெல்லாந்தவறுண்டேபோம் தண்மையில்லாப்பத்தியந்தான்புளியாகாதே ௱௫௫

புளியாகுந்தின்னதினாற்சுரந்தீராது பூகலத்திற்பேதிக்கோகொடுக்கவென்றால், வளியானமாத்திரைதானிரண்டுதந்து வண்மையுள்ளமிளகுதனையொன்றுதுப்பி, வெளியானமாத்திரையைத்தின்னச்சொல்லு விவரமுடன்துன்மலங்கள்வெளியாய்ப்போகும், ஒளியாததுன்மலங்களொழிந்துதானால் உத்தமனேமிளகுநீர்சாதமுண்ணே ௱௫௬

சாதமுண்டுசாய்ங்காலஞ்சுக்குநீர்கொள் சமர்த்தானபேதியதுநிரம்பவானால், நீதமொன்றுநீமயங்கிப்போய்விடாதேநிலவாவாய்த் துவரையினாற்பருப்போடொக்க, பாதமென்றஅரிசியிட்டுக்கிச்சடிபோற்பொங்கிப் பதமாகநெய்யூற்றித்தின்னநிற்கும், பேதமொன்றுமில்லையடாவசம்புதன்னைப் பிரியமுடன்கருக்கிடவேபேதமாமே ௱௫௭

## வாலைசஞ்சீவிகுளிகை.

பேதமாமின்னமொருகுளிகைகேளு பிரியமுடன்திரிகடுகுமிலிங்கமோகம், பேதமாம்வெண்காரங்கிராம்புகூட்டிப் பிலமாகவழுமொன்றாய்க்கல்வத்திட்டுப், பேதமாபழச்சாற்றால்நன்றாயாட்டிப் பெருமையுள்ளஉழுந்ததுபோற்குளிகைகட்டிப், பேதமாநிழலிலேயுலர்த்திக்கொண்டு பெருமையுள்ளசுரங்களுக்குப்புகலக்கேளே ௱௫௮

கேளப்பாதுளசிச்சாறதனிற்றாகக்கு கிருபையுள்ளநாய்த்துளசிச்சாறுமாகும், கேளப்பாமூலைப்பாலிற்றாக்கினாககால் குணமாகுஞ்சந்நிசுரம்பாலகர்க்கு, நாளப்பாமூன்றுநாள்கொடுக்கச்சொல்லு நன்மையுள்ளசலதோஷநாடிற்றானால், வாளப்பாவெற்றிலையின்மென்றுதின்ன வளமானநீர்தோஷமாறிப்போமே ௱௫௯

## வாலைபேதிக்குளிகை.

மாறிப்போம்இன்னமொருவாலைபேதி மகத்தானகுளிகை யொன்று வகையாய்ச்சொல்வேன், தேறிப்போமிளகிடையோனாந்துங்கூட்டித திறமானசுக்குதிப்பிலியும்ஓமம், கூறிப்போம்ரோகணியுங்கூர்மத்தோடு கோஷ்டமுடனெல்லாமோரிடையாய்க்கூட்டி, ஆறிப்போஞ்சுத்திசெய்தவாளமைத்து அப்பனேபழச்சாற்றாலரைத்திடாயே ௱௯௰

அரைத்துமேமிளகளவாயுருட்டிக்கொண்டே அய்யனேநிழலுலர்த்திமூலைப்பாலிற்றான், உரைத்தீயக்குழந்தைகட்குப்பேதியாகும உத்தமனேசநநிசுரஞ்சீதசுரங்கூட, இரைத்திடுமேயிடுப்புவலியுள்ளதெல்லாம் இன்பமுடன்றான்றீரும்வேணநோய்கள், கரைத்துமேவெந்நீருஞ்சாதமுண்ணேகனமானபேதிநிற்குங்கண்டுபாரே ௱௯௧

## பேதிமாத்திரை.

பாரப்பாவின்னமொருகுளிகைகேளு பாங்கானசாதிக்காயோமங்கிராம்பு, காரப்பாகரியசீரகமுஞ்சுக்குக் கனமானதிப்பிலியுங் கஸ்தூரிமஞ்சள், சாரப்பாவசம்புடனேகாயமொக்கச் சரியிடையாயொன்பதுக்குச் சமன்றான்கேளு, வேரப்பாவெள்ளைக்காக்கணத்தின்பட்டை விதமாகத்தான் கூட்டிவெந்நீராலே ௱௯௨

வெந்நீராற்றானரைத்துச்சுண்டைக்காய்போல் விதமாகத்தானுலர்த்திவைத்துக்கொண்டு, வெந்நீராற்குழந்தைகட்கேழுநாள்தான் விதமாகத்தான்கொடுக்கஉப்பாகாது, வெந்நீராற்சாதமிட்டேயுண்பாரானால் வேண்டியதோர்நோய்தீரும்விளம்பக்கேளு, வெந்நீராஞ்சளியிருமல்கக்கல்காய்ச்சல் மீறிவருஞ்சுழிகணங்கள்விச்சுழியும்போமே ௱௯௩

போமப்பாஅள்ளுடனேசந்நிதோஷம் பொல்லாதவலிப்புடனேவிஷசுரங்கள், போமப்பாமந்தமுடன்வயிறுநோயும் பொருமலுடனிரைச்சலுமேபோகுஞ்சொன்னேன், போமப்பாவசம்பதனைச்சுட்டுக்கூட்டுப் போக்கேடேபச்சையென்றால்பேதிரொம்ப, போமப்பாசுட்டதினால் மட்டாம்பேதி போகுமடாமற்றநோய்புனிதமாமே ௱௯௪

## சந்நிக்குத்-தாம்பரகுளிகை.

புனிதமுடன்தாம்பரத்தைத்தூளதாக்கி புண்ணியனேசட்டியிட்டுவறுக்கும்போது, கனிதமுள்ளபுளியாஞ்சிறுகீரைதானும் கடியளவாய்த்தான்போட்டுகாலுசாமம், இனிதமுடன்வறுக்கையிலேமாண்டுபோகும்என்மகனேயிதில்கழஞ்சியாறுதூக்கி, வனிதமுடன்வாலைரசங்கழஞ்சியாறு வண்மையுள்ளகெந்தியதுகளஞ்சியாறே ௱௯௫

ஆறுகுமருந்தெல்லாங்கல்வத்திட்டே அப்பனேசெருப்படிச்சாற் விட்டேயாட்டிக், கூறுவமிளகதுபோ லுருட்டிக்கொண்டு குணமாகத்தானு லர்த்திக்குப்பிக்கேற்றி, மீறுமல்வாய்மூடிமண்ணுஞ்செய்து விளங்கவே காயவைத்துத்தாளிக்குள்ளே, பாறுமல்அங்குலசால்மணல்தானிட்டுப் பண்பாகக்குப்பிவைத்துமேலேமூடே ௱௬௬

மூடியேமணலிட்டுச்சட்டிமூடி மூர்க்கமுடன்மண்சீலைமூனுஞ்செய்து, தேடியேகணபதிக்குப்பூசைபண்ணித் திரமாகவாலுகையிலிரண்டு சாம, நாடியேகமலம்போலெரித்துநீயு நலமாகத்தானிறக்கியாறவைத்துக் கூடியேகுப்பியுள்ளமருந்தைத்தானுங் குணமாகத்தாமெடுத்துக்கல்வத்திட்டே ௱௬௭

இட்டுநன்றுயரைத்திடுவாயிஞ்சிச்சாற்றி லென்மகனேபருத்தவிளாப்பிரமாணந்தான், பட்டுநன்றாய்த்தானுருட்டிக்காயவைத்துப் பாங்கானபாணியிலேபதனம்பண்ணிப, பிட்டுநன்றாய்த்துளசிச்சாற தன்னிலேதான் பிலமானதிரிகடுகுதூளுஞ்சேர்த்து, அட்டிபண்ணுதிருபோதுமூன்று நாளு மடவாகத்தான்குடிககவகலுநோய்கேள் ௱௬௮

கேளப்பாபதின்மூன்றுசந்நிதீருங் கிருபையுள்ளதோஷமெல்லாங்கெதிகெட்டோடும், வாளப்பாவசாத்தியமாஞ்சந்நிகூட மைந்தனேதீருமடாமருவிப்பாரு, நாளப்பாவுப்பில்லாப்பத்தியம்வைத்து நன்மையுள்ளபொரியரிசிக்கஞ்சிகொள்ள, தாழ்வப்பாவொருநாளுமில்லையில்லை தண்மையுள்ள சந்நியெல்லாந்தணிந்துபோமே ௱௬௯

## சாம்பிராணிபதக்கம்.

போமப்பாவின்னமொருகுளிகைகேளு புண்ணியனேசாம்பிராணிமுதற்றரமாய்த்தானு, நாமப்பாபளிங்காகநாலுபலம்வாங்கி நன்றாகப்பொடிசெய்துசட்டியிட்டு, ஓமப்பாமேற்சட்டிக்குள்ளேநீயு முத்தமனேகாகிதத்தையுருப்போலொட்டி, நாமப்பாமேன்மூடிச்சீலைசெய்து நன்மையுள்ளவடுப்பேற்றிறநீபம்வையே ௱௭௰

வைத்தக்கால்பசுநெய்யாற்றீபமேற்றி மைந்தனேயடிச்சட்டிதாசிற்சூடு, தைத்தக்கால்நாற்சாமஞ்சென்றபின்பு தண்மையுடன்றானிறக்கிப்படுக்கப்போட்டு, செய்ததொருசீலைமண்ணவிழ்த்துவெள்ளத் திறமானமேற்சட்டிக்காகிதத்தி, லீணத்ததொருவப்பிரகப்பற்பம்போலே நன்மையுள்ளவாசமதாய்மணக்கும்பாரோ ௱௭௧

பாசப்பாவப்பூவையெடுத்துநீயும் பாங்கானவெற்றிலைப் பாக்குண்ணும்போது, நேரப்பாமிளகளவுதின்றுவந்தால் நேர்மையுள்ளதாதுவிர்த்திரிலக்கும்பாரு, சாசப்பாவப்பூவுங் கழஞ்சிரண்டு கனமானகிராம்பு

மோசுமுஞ்சிமூன்று, கூரப்பாகோரோசனைகழஞ்சியொன்று கூட்டியரை வெற்றிலையின்சாற்றினுலே ௱௭௨

சாற்றினுலிருநாழியரைந்துமைந்தா தண்மையுள்ளகுன்றிபோற்குளிகைகட்டி, ஆற்றிநன்றாய்நிழறனிலேபதனம்பண்ணு அப்பனேதேனிலொருகைபீந்தாற்,போற்றியேமூன்றுநாளாறுபோதிற்பொல்லாதகுதகுத்திலசுரங்களும் பார்த்திபனேசெய்மிளகிலிய்ந்தாயானுற் பறந்துபோம்குதகத்தின்சயங்கடானே ௱௭௩

சயமானசர்க்கரையிலேழுநாள்தான் தண்மையுடன்றான்கொடுக்கதயவாய்க்கேளு, மயமானகுதகத்தின்வாய்விரேடு மைந்தனேவுதிரத்தின்கட்டுதீரும், நயமானவெற்றிலையின்மென்றுதின்ன நன்மையில்லாசுகசந்நிநாடாதோடும், பயமென்னபத்தியத்தின்பயமேயில்லை பாமானபூரணத்தின்பதிவுதானே ௱௭௪

## கட்டுவாதிமாத்திரை.

தானென்றவின்னமொருகுளிகைகேளு தண்மையுடன்சாதிக்காய்சாதிபத்ரி, மானென்றமாசக்காய்கிராம்புகோஷ்ட மதுரமுடனதிவிடையம்லவங்கப்பட்டை, தேனென்றவிடைவுடனேவிளாம்பிசினுமொன்றாய்ச் சேர்ந்தரைத்துமாதளங்காய்க்குள்ளேவைத்து, கோனென்றவெணசிலைபொதிந்துசுற்றிக் குணமாகவதனமேலேசாணமப்பே ௱௭௫

அப்பியேகாட்டெருவிற்புடத்தைப்போடு அண்டையிலேபார்த்திருநீராய்வேகாமற், றப்பியேசாணமதுவெந்துபற்றிற் றான்காயில்வேகையிலேதள்ளிக்கொண்டு, ஒப்பியேசவசமொடுசிலைநீக்கி உத்தமனேகல்வத்திலரைக்கும்போது, செப்பினேனிஞ்சாவின்சாற்றாலாட்டி சிறுசுண்டைக்காய்போலவுருட்டுவாயே ௱௭௬

உருட்டியேநிழலுலர்த்திவைத்துக்கொண்டு வுண்டையுடன்வடிதயிரிலீந்தாயானுற், றிரட்டையைப்போலிரத்தமுடன்கடுப்புஞ்சீதந் தீராதமூலரத்தந்தீருஞ்சொன்னேன், மிரட்டியேதேனிலிடவதிசாரபேதி மீளுமடாபத்தியமோபுளியுமாகுஞ், சுருட்டிமிகமிளகாயைக்கூட்டிடாதே துடிமெத்தவிரத்தமடாதுணிந்துபாரே ௱௭௭

## இரசகர்ப்பூரக்குளிகை.

பாரப்பாவின்னமொருகுளிகைகேளு பதிவானமுலைப்பாலின் மூன்றுநாள்தா, னேரப்பாவூறினதோரசகர்ப்பூர நிலைவாகவிராகனிடையஞ்சுங்கூட்டி, காரப்பாமுளைநீக்கிவெள்ளைப்பூண்டு கணக்காகவிராகனிடையிருபதுமேகூட்டி, சாரப்பாமிளகுதான்விராகனிடைதானுந் தண்மையுடன்முப்பதுமேதயவாய்க்கூட்டே ௱௭௮

கூட்டிவெய்வெற்றிலையினிடைதான்சேரு குணமாகநாற்பதிடைகூட்டிக்கொண்டு, நாட்டுவாய்பூரமதைநன்றாயாட்டி நன்மையுள்ளசாக்கெல்லாமொன்றாய்க்கூட்டி, ஆட்டுவாய்வெற்றிலையின்சாற்றினாலே அப்பனேவறாசாமநன்றாயாட்டி, போட்டுவாய்சுண்டைக்காய்போலுருட்டி புனிதமூடனிழறனிலேவுலர்த்திக்கேளே ௱௭௯

கேளப்பாவத்திசந்தியேழுநாளுங் கிருபையுடன்றான்விழுங்கிப்பத்தியமேகாக்க, பாறப்பாவுப்புடனேபுளிப்பாகாது பாங்காகவொருவேளைபசும்பால்கூட்டு, நாளப்பாவேழுநாள்சென்றபின்பு நன்மையுடன்வறுத்தவுப்புக் துவரைகூட்டு, கோளப்பாபதினைந்துநாளிற்றானுங் குணமாகத்தலைமுழுகிபுளியைக்கூட்டே ௱௮௰

புளிகூட்டியொருநீர்விட்டபின்பு புண்ணியனேயெண்ணெயிட்டுமுழுகும்போதம், வளியிட்டவளிக்கிரந்திலிங்கப்புற்று வகையானசொறிகிரந்திபோனிப்புற்று, குழிபட்டரிணமாறுங்குழிக்கிரந்தி கூறியதோர்கிரந்தியெல்லாங்குணமதாகும், பழிவிட்டுச்சொன்னதொருபூரணத்தை பார்தனிலேவிள்ளாதேயின்னங்கேளே ௱௮௧

இலிங்கக்கட்டு.

கேளேநீபுலத்தியமகாரிஷியேயையா கிருபையுள்ளலிங்கமொருட்டியாகத் தாளேநீமூலைப்பாலிலூறப்போட்டுத் தன்மையுடன்பத்தாநாள்கழுவிபபின்பு, வேளேநீவெயிலுலர்த்திவைத்துக்கொண்டு விகமானவிடைக்கிடைதான்கர்ப்பூரம்வாங்கு, வாளேநீசாம்பிராணிபளிங்குபோலேவளமாய்த்தானே ௱௮௨

வளமானசாம்பிராணிகூடன்கொண்டும் வண்மையுடன்கல்வத்தின்மாளஆட்டி, மெழுகாகுலென்னசொல்வேன் திப்பறக்கஆட்டிமேன்மையுடன்வழித்ததைப்பத்துபங்காய், வழுவாமலொருபங்கைச்சீலையூட்டி வண்மையுடலிங்கமதைவைத்துருட்டி, நழுவாமல்விளக்கிலே கொளுத்திப்போடு நன்மையுடனறினபினெடுத்துக்கொள்ளே ௱௮௩

எடுத்ததன்மேற்கரியைச்சுறண்டிபோட்டு இன்னமொருபங்கதனைசீலையூட்டி, அடுத்துமதிலிங்கமதையுருட்டிமுன்போல் அப்பனேவிளக்கினிலேகொளுத்தும்போது, பிடித்துமதுகானெரித்துஆறிப்போகும் பின்பதைதான்முன்போலேபத்துவிசைசெய்து, தொடுத்தநின்றகரியெல்லாஞ்சுறண்டிபோட்டு சுத்தமுடன்றேனிலிடவாய்வுபோமே ௱௮௪

போமப்பாதிரிகடுகுசந்நிதோஷம் பொல்லாதநெஞ்சடைப்புவாய்வுமூர்ச்சை, தாமப்பாவயறுபேதிவயிற்றிலூதற்றனியிஞ்சிச்சாற்றிலேதாக்க

த்தீரும், மேமப்பாசிலையொடுபித்தபாண்டு விடபாகவயிற்றுவலிகுன்மஞ்
சோகை, பாமப்பாகொடுவேலிகியாழத்திய பறக்குமடாவெகுரோகமறிந்
துபாரே ௱௮௫

## இரசகர்ப்பூரக்கட்டு.

பரிந்துமேயின்னமொருகட்டுசொல்வேன் பாலகனேரசகர்ப்பூரம்ப
லந்தானென்று, வெரிந்தமேஒருகட்டியாகவாங்கி விதமாகமுலைப்பாலிற்
பத்துநாளுந், தெரிந்துநீஊறினபின்னுலர்த்திக்கொண்டு திறமாகவெள்ளு
ள்ளிதயிலம்வாங்கி, இருந்துநீமுச்சாமஞ்சுருக்குத்தாக்கு எடுத்துநீசுறண்
டியதைபின்னுங்கேளே ௱௮௬

பின்னுமோரோட்டிலேவெடியுப்புத்தானும் பிரியமுடனஞ்சுபலம்ப
ரப்பிமேலே, முன்னமேசொன்னதொருபூரம்வைத்து மூடர்க்சமுடன்மே
லுமவ்வீதமூடி, என்னமோவென்றுநீயெண்ணிடாதே என்மகனேகோழி
முட்டையுடைத்துமேலே, சொன்னமேஅஞ்சுமுட்டையூற்றிமைந்தா சுரு
க்காகவாசலடுப்பிட்டுகேளே ௱௮௭

கேளப்பாகால்நாழிகமலம்போலே கிருபையுடன்றானெரிக்கவுப்புப்
பொங்கி, வாளப்பாஉருகியது நெருப்புபற்றும் மைந்தனேஅண்டத்தின்ம
கிமையாலே, கேளப்பாபாணவுப்புபுகைந்திடாது குழம்புபோலுருகியது
கெட்டியாகும், தாளப்பாவிறக்கிவைத்துகுளிர்ந்தபின்பு தயவாகவுடை
த்துமெள்ளவெடுத்துக்கொள்ளே ௱௮௮

எடுத்துநீமேலுள்ளவுப்புநீக்கி என்மகனேசந்நிசுரம்நாவறட்சி, தொ
டுத்துநின்றமலவாதசந்நிக்கெல்லாம் சுத்தமுடன்அநுபானமறிந்துசேர்த்
தே, விடுத்துநின்றலிங்கமுடன்கரைத்துத்தாக்க விபரமுடன்வாதநோய்
விட்டுப்போகும், தடுத்துநின்றகைபாகநன்றாய்ச்சொன்னேம் தயவானபூ
ரணத்தின்றன்மையாலே ௱௮௯

## தாளகக்கட்டு.

தன்மையென்றஇன்னமொருவித்தைகேளு தயவானதாளகத்தைநே
க்குப்போலே, வண்மையுடன்லேசாகக்கிழித்துகொண்டு மைந்தனேய
ணாப்பலந்தானிறுத்துக்கொண்டு, உண்மையுள்ளகிளிஞ்சியிலேஅப்பிரக
ம்வைத்து உறுதியுள்ளதாளகத்தையிட்டுமேலே, கண்மையென்றகளிப்ப
றட்டைக்கீரைசாற்றைக் கனமாகத்தான்பிழிந்துமேலேகேளே ௱௯௰

கேளப்பாஅப்பிரகத்தகட்டால்மூடி கிருபையுள்ளகிளிஞ்சியதைமூ
டிக்கொண்டு, நாளப்பாபத்துஎரு சுற்றிவைத்து நன்மையுடன் கீழ
மேல்ரண்டெருவும்வைத்து, தாளப்பாதீமூட்டிப்புகையுமாறித் தண்மை

யுடன்றக்கவெனவெரியும்போது-வேளப்பாகுறட்டாலே மேலே நவைநீக்
குவிதமானகிளிஞ்சியதினடுவில்வையே ௱௬௧

வைத்தப்பாமேல்நெருப்பெருவால்மூடி மார்க்கமுடன்பாக்கடிக்குத்
திறந்துமெள்ள-உத்தப்பாமேல்நெருப்புகிளிஞ்சிநீக்கி உண்மையுடன்று
லபார்க்கஉருகிநல்ல-சத்தப்பாவில்லாமல்கெப்பபோலே தானிருந்தாலிறக்
கியதன்றுாரிற்றன்னில்-வைத்தப்பாஆறினபின்சிவந்துகாட்டும்மார்க்கமுட
னப்பிரகந்தள்ளிப்போடே ௱௬௨

போடவேகட்டியாய்வைத்துக்கொண்டு புண்ணியனே மூன்றுமொ
ன்றாய்க்கூட்டித்தாக்கு-சாடவேசந்நிமுதல் சுரங்கள்தீரும் தயவானதா
ளகத்தைமீட்டுகேளு- கூடவேகிராப்புதிப்பிலிசிற்றரத்தை குணமாகவ
றுத்துநன்றாய்ச்சாணைதன்னில்-சேடவேயிழைத்திடுவா தேனிற்றானுந்தி
றமானதாளகமிழைத்துக்கொளளே ௱௬௩

கொள்ளவேதீருகிறவியாதிகேளுகுடிகெடுத்தபழுபசுரங்குத்திரைச்ச
ல்-துள்ளவேவாந்தியொடுஅனைதிரேஷம் துயரமுள்ள சேததுமத்தின்சு
ரங்கஉரும்-வள்ளலார்பத்தியமோ விதற்கோவேண்டாம் மைந்தனேபுளிக்
கூட்டிச்சோறுமுணணு-உள்ளபடிபூரணத்திற்றபபோஇல்லையுறுதிவெகு
வுறுதியடவுண்மையாமே ௱௬௪

## தாளகபற்பம்.

உண்மையுடனின்னமொருவிதத்தைகேளுஉறுதியுள்ளதாளகத்தின்ப
ற்பஞ்சொல்லுவேன்;நன்மையுடன்வெடியுப்புபுளியுமொன்றாய்நாட்டமுடன்
றணிடித்துவட்டுபோலவெண்மையாயோட்டிவிட்டுவாசல்தன்னில்விதமா
கவடுப்பிட்டுவனலைமூட்டு- தண்மையுடனோட்டையனல்மீதில்வைத்துதா
னடுக்கிநின்றுமெள்ளப்பார்த்தாற்கேளே ௱௬௫

பார்த்தாலேயனற்சூடுவுரைக்கும்போதுபாங்கானவெடியுப்பு பறறிப்
போகுங்-காத்தாலேவில்லையது கறுத்துகாணும் கனமாகப்பொடிசெய்
துபீங்கானிலிட்டு-வேத்தாலேகுழிவெட்டிவைத்துமூடி விதமாகமேல்மூ
டிகாற்றுடாமல், பாத்தாலேமூன்றுநாட்கழிவுகண்டு பாலகனேயொருபக்
கந்தண்ணீராமே ௱௬௬

தண்ணீராமங்கீரைசெங்கீரென்பார் தண்மையுடனோடோறுமெடுத்து
க்குப்பி, அங்கீரையடைததுவைத்துக்கொண்டுநீயும்அப்பனேதாளகத்தை
வைத்துவாடடி, பொன்னீர்போற்கரியோட்டிற்கருகவாட்டு புண்ணிய
னேநவக்கிரகஞ்சிவந்துகாணு, முன்னீரைவிட்டுமேயரைத்துக்கொண்டுமி
ஞசாமலேசாகவில்லைதட்டே ௱௬௭

கட்டியோவிதனிலேகாயவைத்து கனமில்லாவகலிலே சிப்பிச்சுண்ணம், இட்டுமேகீழ்மேலாய்வில்லைவைத்து என்மகனேமண்சீலையேழுஞ்செய்து, பட்டுமேபத்தெருவிற்புடக்கைதப்போடுபோலகனேபுடமாறியெடுத்துப்பாரு, நட்டமேவாராதுதவளம்போலாம் நன்மையுடனன்னீரால லைத்துப்போடே. (௱௯௮)

போட்டப்பாமுன்போலச்சீலைசெய்து புனிதமுடன்பதினைந்துஎருவிற்றூனும், நாட்டப்பாபுடம்போடப்பற்பமாகும் நன்மையதாய்வெளுக்காட்டால்முன்போலாட்டி, கூட்டப்பாவிருபதெரு தன்னிற்போட்டுக்குருவானதாளகமும் பற்பமாகும், பாட்டப்பாபற்பத்தை பனவெல்லத்திற்பாங்காகபணவிடைகால் பருகக்கேளே. (௱௯௯)

பருகவேபித்தசுரம்பித்தவெட்டை பாங்கானபித்தசயம்பித்தகாசம், தருகவேமாட்டாதுமந்தகாசந் தன்மையுள்ளஈளைவலி மேகரோகம், வருகவேமாட்டாதுஉப்பாகாது மண்டலங்கால்கொண்டுவிட மார்க்கமாக, உருகவேவாதமொன்றுமலேந்திடாதே உண்மையுடன்நோய்தீர்ந்தால் வாதமாமே. (௨௱)

வாதமென்றரசவாதமுலகத்தோர்க்கு வாயாறுவாசையென்றவஞ்சகத்தால், போதமென்றசிவயோகம்பெற்றபேர்க்குப் பூதலத்திலாசையில்லைவாதங்கட்டும், வேதமென்றவேதவாக்கியமீதாகுமப்பா விருதாவில்வாதமென்றால்விழலாய்ப்போகும், பாதமென்றபாதமதையறிந்தால் முத்திபாதைவழிமார்க்கமதைப் பகரக்கேளே. (௨௱௧)

## அகாரம்உகாரம்.

பகரக்கேள்புலத்தியனேதேகஞ்சித்தி பராபரமாமுள்ளுயிராய்வாயுமாச்சு, நிகரில்லைரண்டுமொன்றாய்நிலைத்தால்முத்தி நினைவாகமவுனத்தின்வீடுகேளு, புகலவேஅகாரமதைகீழேதாக்கி புரிந்துநின்றால் உகாரமதைமேலேசேர்த்து, உகரக்கேள்மகாரத்தினடுவேநின்று உற்றுப்பார்பூரணத்தின்ஒளிகாண்பாயே (௨௱௨)

காணப்பாசத்திசிவம் ஒன்றதாகக்கலந்திருப்பார்ஒருவருமே காணார் காணார், தேன்போலேயருவியங்கேபாயும்வீடு திருவானசுழிமுனையில்திறமாய்நின்றால், தான்போலேதானுள்ளே தானேதோணும்தனதாகமுகமக்கேதானேதோணும், வீணப்பாவலைந்துகெட்டு திரியவேண்டாம் விபரமாயின்னமொருபாகங்கேளே. ௨௱௩)

## கர்ப்பூரசிலாசத்துப்பற்பம்.

கேளப்பாசிலாசத்துயார்தான்காண்பார் கிருபையுள்ளகர்ப்பூரசத்துவாங்கி,நாளப்பாசுத்திசெய்துகல்வத்திட்டு நன்மைசிறுசெருப்படிபின்சாற்றாலாட்டி, கோளப்பாலேசாகபில்லைசெய்துகுணமாகக்காயவைத்துவோ

ட்டில்வைத்து, தாளப்பாசீலைமண்மிதமாய்ச்செய்து தன்மையுடனைம்ப தெருப்புடத்திற்போடே. (௨௱௪)

போட்டுமேஆறவிட்டுமுன்போற்போடுபுண்ணியனேமூன்றுவிசை யரைத்துப்போடு, நாட்டுமேவெண்மையுமாய்ப்பற்பமாகும் நன்மையுடன்மேலெரிவுபித்தவெட்டை, காட்டுமேபசுவெண்ணெய்தன்னிலீயக் கனமானநீர்க்கடுப்புக்காணுதோடும்,பாட்டுமேபத்தியங்களுண்டோவில்லைபாலகனேபற்பமுறைபரிந்துபாரே. (௨௱௫)

வெண்காரப்பற்பம்.

பாரப்பாகர்ப்பூரச்சிலையின்பற்பம் பாங்காகக்கழஞ்சிரண்டுஅகலிலிட்டு, நேரப்பாவதின்மேலேபீனைவாய்க்கேளு நிலையாதவெண்காரஞ்சுத்திசெய்து, சாரப்பாகழஞ்சிரண்டுஇட்டுமேதான் தயவாகமேலுமேப்பமிட்டு, காரப்பாஅகல்மூடிச் சீலைசெய்து கனமாக மூணெருவிற் புடத்தைப் போடே (௨௱௬)

போடப்பாஆறினபி னெடுத்துக்கொண்டு பொல்லாதநீர்க்கட்டுநீர்க்கடுப்பு, தேடப்பாவெண்ணெயிலேயீய்ந்தாயானால் தீருமடாகல்லடைப்புத்திரவென்றால், நாடப்பாவாரலிணிடதலையின்கல்லு நன்மையுள்ளவெள்ளரியின்விரையின்சாறு, கூடப்பாபற்பமுடன்கலக்கிக்கொள்ளக் குடிகெடுத்தகல்லடைப்புக்குணமதாமே. (௨௱௭)

குணமாகமாட்டாமல்கல்லடைத்துக்கொண்டால் குவலையத்தாருன்னையுமேநகைசெய்யாமல், குணமாகவின்னமொருசம்பிரதாயங்கூறுகிறேன்முள்ளங்கியிடித்தசாறு, குணமாகக்காற்படியிற்பணவிடைகால்பற்பங்கூட்டியேதான்கொடுக்கக்கல்லும்வீழ்ந்து,குணமாகுமுள்ளங்கிஆண்மையப்பா கூறுதவின்னமொருபற்பம்பாரே. (௯௱௮)

வெள்வங்கபற்பம்நவமூலத்துக்கு.

பாரப்பாஇன்னமொருபற்பங்கேளு பாங்கானவாலைரசங் கழஞ்சுமூணு, நேரப்பாஅதினிடைக்குவெள்வங்கந்தான் நேர்த்தியாய்த்தொந்தித்துக்கல்வத்திட்டு, சாரப்பாகர்ப்பூரசிலாசத்துதானுங் தயவாகக்கழஞ்சுயதுமூன்றுங்கூட்டி, காரப்பாஅரைத்திடுவாய்கண்ணநீரால் கருவாகப்பில்லைதட்டிகாயப்போடே. (௨௱௯)

காய்ந்தபின்புவோட்டிலிட்டுச் சீலைசெய்து கருணையுடன்முப்பதெருப்புடத்தைப்போட்டு, ஆய்ந்துநன்றாயாறியபின் னெடுத்துமைந்தா அப்பனேமுன்னீராலிரண்டுசாமம், பாய்ந்துநன்றாயரைத்துபில்லைரவியிற்போடு பாங்கானவோட்டிலிட்டு சீலைமண்செய், மாய்ந்துவிடு மைம்பதெருப்புடத்துக்குள்ளே மல்லிகைப்பூகிறம்போலேவெண்மையாமே. ( )

வெண்மையென்றவெள்வங்கபற்பந்தன்னை விதமானபணவிடைதானநுபானங்கேள், வண்மையென்றமாதளம்பூவிதழ்தான்மைந்தா மார்க்கமுடன்ரண்டுபலம்நிழலுலர்த்தி, நண்மையென்றசீரகம்அவ்விதங்கூட்டி நலமானசூரணந்தான்பணவிடைநால்கூட்டி,உண்மையுள்ளபசுநெய்யிலிரண்டுவேளை உண்டிடவேமண்டலத்திலுள்மூலந்தான். (௨௱௰௧)

உள்மூலம்வெளிமூலமிரத்தமூலம் உண்மையில்லாமெய்நோயும்ளலும்புருக்கி, வெள்மூலஞ்சீழ்மூலமேகமூலம் விதமானசளிமூலம்பித்தமூலம், நல்மூலமொன்பதுமேதீர்ந்துநல்ல நாடிகளுந்தான்வலுத்துத்தாதுவுண்டாம், வெள்வங்கபற்பமடாபத்தியந்தான் வேண்டாமவிதமானஉமூக்துமொச்சைபூசணிக்காயநீக்கே. (௨௱௰௨

கன்மவரலாறு.

நீக்காதமூலநோய் கன்மத்தாலே நிலைகெட்டஅபானத்தில் நெருப்போமீறி, வாக்காலேஅபானத்தில்வாசல்தன்னில் வந்துமுளைமேகமதால்சூட்டால்காணும், தாக்கோலாலடைத்தாப்போல்வாயுநின்று தண்மையுள்ளமலமதனைவாட்டித்தீய்த்துப், பேய்க்கோலம்பண்ணுமடாமூலரோகம் பேரானபழவினைகளின்னங்கேளே. (௨௱௰௩)

பழவினையால்விஷப்பூச்சிகடித்ததோஷம் பாதகர்க்குவொருநாளுந்தீர்வதில்லை, உள்ளவினையாலூடாடிக்கொல்லவந்த உண்மையது அறியாமல்மூர்க்கஞ்செய்வார், கள்வினையுந்தீர்வதில்லைகடினமெத்த கருணையுள்ளபூரணத்தில்கண்டகாட்சி, அள்வினைநீகாணுமுன்னேஅகலச்சொல்லுஅடையாளம்விரல்குறுகுமின்னங்கேளே (௨௱௰௪)

விரல்குறுகுங்கால்திமிரும்விஷம்போலேறும் மெய்யழுந்துந்தலைசுழலும்வெளுக்குமேனி,பரமானதேகமெல்லாந்தடித்துக்காணும் பாதமெல்லாம்வெடித்துமிகப்புண்ணுங்காணுந், சரசமுடன்சொறிகரப்பான்பணம்போல்தோணுஞ் சாந்தையமேவிந்துகெடுத்தடித்துவீங்கும், நாருலகிலிந்நோய்க்குமருந்தியாதே நல்லோரைப்பழித்தகுஷ்டங்கன்மமாமே.()

நல்லோர்கள்பெரியோர்கள்நடத்துஞ்செய்கை நாட்டிலுள்ளதுர்ச்சனர்கள்நகைத்ததாலே, பொல்லாதவிஷக்கடிநீர்பற்றிவந்து பொன்னனதிரேகமெல்லாங்குஷ்டம்போலே, சொல்லாதகடிவிஷங்கள்குன்மம்பாண்டு துயர்தீராக்கர்மவினைசெய்தபாவம், எல்லாரும்நகைக்கவுடம்பெடுத்தபாவி இன்னமுண்டுவிபரமதாயுலகிற்கேளே. (௨௱௰௬)

உலகுதனில்செவிடுமைகுருடர்தாமு மூக்குமுள்ளசப்பாணிமூக்கி ல்லாதார், நலகுமதுவிஷக்கடிநீர்குன்மம்பாண்டு நாடிவரும்பெருவயிறு கவுசியினை, பிலக்குமதைபெரியோரைக்கற்புள்ளோரைப் பேதமில்லாச்சி வஞானப்பொருளுள்ளோரை, தலைகவிழவவரவர்கள்தனைத்தூஷித்தோர் கள் சண்டாளரிந்நோயால்தயங்குவாரே. (உ௱௰எ)

கன்மந்திர.

தயங்காமல்திருதற்குவகையைக்கேளு தண்மையுள்ளவருஷமதுத கையுக்காலம் நயங்காமலாடியமாவாசையன்று நன்மையுள்ளதெளிநீரில் ஸ்நானம்பண்ணி,முயங்காமற்சிவதலத்தைக்கோபிவந்துமுத்தியுடனயிர ம்போவேதியர்க்கு, சுயம்பாகந்தான்கொடுத்துநவக்கிரகந்தன்னைத்தோத் தரித்து அட்சதையும்வாங்கிக்கொள்ளே. (உ௱௰அ)

வாங்கியேபோதியைக்குத்தென்கிழக்குமூலை வரிசையுள்ளவானுமா மலைக்குச்சென்றால், தூக்கியேயாலிலைமேற்பள்ளிகொண்ட சுவாமியிட சந்நிதியில்தியானஞ்செய்து, வோங்கியேநூறுபேர்பிராமணர்க்கு வுத்தம னேசுயம்பாகங்கொடுத்துநீயும், தேங்கியேயுதகமென்றகிரணங்கண்டு தி றமாகவொருசெம்புநெய்யைவாரே. (உ௱௰௯)

விரித்துமேமறுசெம்புதயிலமொண்டு மைந்தனேவேடுகட்டிக்கொ ண்டுபோய்நீ, ஆற்றுமேயந்திசந்திகாசிலையாய்க்கொள்ள அப்பனேதிங் களதுமூன்றுக்குள்ளே,தோற்றுமேதேகமதுபொன்போலேதான் துயரா னசன்மநோய்தூராவோடும், காத்துமேயித்தயிலங்கொள்ளாவிட்டால் க ன்மநோய்தீராதுஇன்னங்கேளே. (உஉ௰)

வெண்குட்டந்தீரச்சொர்னபற்பம்.

இன்னங்கேள்புலத்தியனேயிராசயோகிக் கின்பமுள்ளசொர்னபற்ப மிதமாய்ச்சொல்வேன், முன்னமேமுள்ளிக்கீரைச்சாற்றிலேதான் மூன்று நாளூறவைத்துபொடியாய்ராவி, சொர்னமதைக்கல்வத்திலரைக்கும்போ து * சித்திரப்பாலாடையதுசிவந்தசாற்றில், நன்னயமாய்மைபோலேய ரைத்துப்பில்லை நயமாகவியுலர்த்திநலமாய்க்கேளே. (உஉக)

* சித்திரப்பாலாடை-அம்மான்பச்சரிசி.

கேளப்பாகடம்பினிலையரைத்துமைந்தா கிருபையுடன்பில்லைமேல் கவசங்கட்டி, கோளப்பாவகலில்வைத்துவோட்டால்மூடிக் குணமாகச்சீ லைமண்ணேழுஞ்செய்து, தாளப்பர்நூறெருவிற்புடத்தைப்போடு தண் மையுடன்ஆறினபின்தவளம்போலே, வேளப்பாவெண்குட்டந்தீருதற்கு விதமானவநுபானம்விளம்பக்கேளே. (உஉஉ)

விளம்பவேகவுரியிலேச்சாறுதானும் விதமாகத்தனிசாறுய்ப்படி.தா னெட்டு, தளும்பவேவெயிலில்ட்டுமெழுகுபோலே தானவற்றிற்கலந்த இடையாடாதோடை, குளம்போடேயிலையரைத்துமெழுகுபோலே கூட் டியதிற்புனுகுமோர்பலந்தான்கூட்டி, துளும்பவேசொர்னபற்பங்கழஞ்சி ரண்டு தூக்கியதிற்போட்டரைத்துநெல்லிக்காய்போல், (உஉங)

காய்போலேயுருட்டியதையிளம்பதமாயுலர்த்திக்கனமானஎள்ளினி டஎண்ணெயிலேபோட்டு தாய்போலேயோருண்டையக்கிசந்தி தண்மை யுடனரைவருஷந்தயவாய்க்கொள்ள, வாய்போலேவெளுக்ககுட்டந்தீர்ந் துபோகும் வண்மையுள்ளபத்தியஞ்சையோகமாகா, பேய்போலேகாமப் பேய்கொண்டபேர்க்குப் பெருமையுள்ளசொர்னபற்பங்கொடுத்திடாயே (

கொடுத்ததினால்மருதுரும்எண்ணெய்தன்னைக் குணமாகஎட்டுநாட் கொருக்கால்மூழ்க, கொடுத்ததினால்மருந்துவிடுமட்டும்மூழ்கக் குவலையத் தில்பறங்கிஎன்றகுட்டந்தீருந், தடித்துநின்றவெண்குட்டமேகக்குட்டம் தயவாகத்தீருமடா தண்மையாலே, அடுத்திருந்தபேர்களைநீயகலச்சொல் லி அப்பனேகைபாகமறிந்துசெய்யே. (உஉடு)

## வெள்ளிப்பற்பம்.

செய்யவேயின்னமொருகுளிசைகேளு செயமானஊதுசுட்டிவெள் ளிதன்னை, துய்யமாயக்குகையில்ட்டு புருகும்போது துரையானவெள்ளி யிடைமகிழம்பூச்சாற்,அய்யனேஇரண்டுஇடைவிட்டுருக்க வப்பனேவெ ள்ளியதுமடிந்துபோகும், பொய்யல்லவப்பொடியைமுன்சாற்றிலே புக ழாகவரைத்துபில்லையுலர்த்திகேளே. (உஉசு)

உலர்த்தியதோர்வில்லைக்குக்கவசங்கேளு வுண்மையுடன்முட்சாவே ளைவேரைத்தானும், பிலக்கவதைமுன்னீராலரைத்துக்கட்டி பிரியமுடன் குகையிலிட்டுச்சில்லுமூடி, உலர்த்திநன்றாய்மண்சீலைவலுவாய்ச்செய்து உள்ளபடிநூறெருவிற்புடத்தைப்போடு,பெலத்ததோரசிதமென்றவெள் ளிப்பற்பம் பெருமையுள்ளவெண்ணெயிலேகொடுத்துப்பாரே. (உஉஎ)

கொடுத்துமிகப்பார்க்கையிலே தீரும்நோய்கள் குணமில்லாக்காசு மொடுஇரத்தகாசம்,அடுத்துநின்றமேகசயமந்தாரகாச மப்பனேதிப்பிலி யிலகலுஞ்சொன்னேன், தொடுத்துமிகப்புளிபுகையுந்தவிர்க்கவேணுஞ் சு யமாகவேளைக்குப்பணவிடையிற்பாதி, கடுத்துநின்றபவுத்திரமுமூலச் சூலை காணுமலோடுமடாகண்டுபாரே. (உஉஅ)

## நாகபற்பம்.

கண்டுபாரின்னமொருபற்பங்கேளு கருவானநாகமதைப்பயறுபோ லே, கொண்டுபோர்பொடிசெய்துகழஞ்சிரண்டு குணமானஅயக்காண்டிக

ன்னிலிட்டு, நின்டுபார்முதற்றாமாஞ்சோமணுதி நிறுத்தெடுத்துப்பண விடையுங்கூடப்போடு, மொண்டுபார்சுத்தசலங்கழஞ்சுவிட்டு மூர்க்கமு டனிளஞ்சிலேவேடுகட்டே, (௨௨௯)

கட்டிபேசாலமேதுவக்கினைமந்தா கதிரவனிலிருபத்தாந்நாழிமட்டு ம், இட்டுமேயிறகாலேகாணம்தீநாரில் இதமானவேலையென்றபருத்திச் சாந்தடவி, தொட்டுமேயுனையாத்தாம்போது சுகமாகத்தானுருகி மஞ்சள்போலே, பட்டியேபுளையெழும்பும்போகுமட்டும் பாங்காகத்தா துகற்பமாமே. (௨௩௰)

பற்பமடாவைத்தஇடைகுறைந்திடாதே பாலகனேசெய்பாகந்தவறி டாதே, அற்பமென்றுபற்பமதையெண்ணிடாதே அப்பனேவெண்ணெ யிலேபணவிடைதான்கொள்ள, சொற்பமென்றவுப்பாகாபுளியுமாகா து வரையிடபருப்பிட்டுக்கிச்சடிபோற்பொங்கி, நற்பமென்றபசுநெய்யுங்கூ ட்டியேதான் நலமாகவெழுநாள்கொள்ளுகொள்ளே. (௨௩௧)

கொள்ளவேயெட்டாநாளுப்புங்கூட்டு குணமாகப்பத்தாநாள்ஸ்நான மாட்டு, துள்ளவேபுளிகூட்டுதீருநோய்கேள் துலையாதவெள்ளைபதுதுலை ந்துபோகும், கள்ளமாமூலமதுதீர்ந்தநல்ல கனமானதாதுவிர்த்தியுண்டா கும்பாரு, ஒள்ளவுங்கைபாகந்தப்போவில்லை ஏகாம்புபூரணத்தினியல் புகேளே, (௨௩௨)

பூரணமாம்நாலுறுங்கைபாகந்தான் புலத்தியனேயுனக்காகநன்று ய்ச்சொன்னேன் காரணமாய்வடமொழியைத்தமிழால்செய்த கன்னூல்சா ரக்குசத்தியஷ்டலோகம், மாரணமுந்சொன்னடாநூற்றினைந்து வகை யானபத்திலேமகிழ்ந்துபார்த்தல், காரணமும்பூரணமுங்கண்டபோதே கருவானபற்பமெல்லாங்கைக்குள்ளாமே. (௨௩௩)

## இரசபற்பம்,

பற்பமென்றரசபற்பமொன்றுகேளு பாலகனேரசமதனைப்புளிக்கா ய்ப்பாலில், அற்பமொன்றுகினையாமல்கையிற்றேய்க்க யகன்னகயிலொட் டுமடாசயம்போலே, துப்புரவாய்ந்தேய்த்துமெள்ளக்கழுவச்சுத்தி செய் தரசங்கழஞ்சுபன்னிரண்டு, திப்புரமாய்குழிக்கல்லிலிட்டுக்கொண்டு நினை வாகத்தானரைக்கத்தயிலங்கேளே. (௨௩௪)

தயிலமென்றால்கெந்தகத்தின்தயிலமப்பா தண்மையுடன்இறக்கும் வகைதயவாய்க்கேளு, ஓயிலாகக்கெந்தகத்தைத்தூளாயாட்டி யுண்மையு ள்ளகலபத்தில்பாதிபோட்டு, மயலாகக்கலசம்வாய்க்கேற்றப்போலேமை ந்தனேமண்ணலேபுனலுண்டாக்கி, அயிலமென்றகலபத்தில்மூடிச்சீலே யஞ்சாறுமண்வலுக்கச்செய்துகொண்டே. (௨௩௫)

கொண்டபின்புவடியுயர்ந்தகுப்பிவாங்கிகுணமாகச்சலநிரப்பி யடைத்துப்போட்டு, அண்டையிலேயொருவனைத்தான்பிடிக்கச்சொல்லி, அடியப்பா இரும்பாணிதூரிலேதான் பண்டையிலேபோடியிற்றமருண்டாகும் பாலகனேபுனல்மூக்குத்தமருள்விட்டு, ஒண்டையிலேமண்பூசி புகையோடாம லுத்தமனேசிறுவடுப்பில்தீபம்போலே. (௨௱௬)

தீபம்போல்மேல்குப்பிகனல்படாமல் தீபெரித்தநாழிகைதானிரண்டுக்குள்ளே, தூபமென்றகெந்தகத்தின்புகைதான்குப்பி சுற்றிலுமேதிராவகமாய்நிற்கும்பாரு, தாபமென்றமறுகுப்பிக்கேற்றிகொண்டு தடவாக நாற்கழஞ்சுதயிலம்விட்டு, சோபமென்றுரசமாளவனைத்துருட்டிச் சுருக்காகமேற்கலசஞ்சொல்லக்கேளே. (௨௱௭)

சொல்லக்கேள்பூவாரம்பட்டை பலமிரண்டுசுத்திசெய்தநெல்லிக்காய்கெந்திபலமிரண்டு, அல்லக்கேள்சிறுதும்பைச்சாறுவிட்டாட்டி யப்பனேரசமெழுகிலணிந்துருட்டி, நல்லாய்க்கேள்வாய்பொருந்துந்தாளிரண்டு நன்னயமாயடித்தாளிதன்னிலுப்பும், வல்லக்கேள்செங்கலுமே பொடித்துப்பாதி வகையாகத்தான்செம்மிமருந்துவையே. (௨௱௮)

வைத்தப்பாமுன்றாளால் மறையமூடி மார்க்கமுடன்மேற்றுளிதூரிலேதான், கைத்தப்பாகையான்சாறேழுவிசைபூசிகாயவைத்து மேல்மூடியேழுமண்செய்து,சத்தப்பாவெடித்தஇடமண்ணும்பூசிச்சதானந்திபதம்போற்றிவாலுகைமீதேற்றி நைத்தப்பாகாடாக்கினிமூன்றுசாமம்நலமாகத்தானெரித்துவடுப்போடாற்றே. (௨௱௯)

ஆற்றியேகீழிறக்கியோரப்பாட்டாய்அப்பனேதான்சாய்த்துவவிழ்த்துமெள்ள, தூற்றிமேற்சட்டிக்குள்ளேமைந்தா துயர்திரவராகமுடிகொண்டுநீயும, பார்த்திபனேதுடைத்தெடுத்ததனைநீயும்பாங்கானகன்மநோய்திரவேண்டி, சாற்றியேபணவிடைதான் பனைவெல்லத்தில்தயவாகஇருவேளையேழுநாளே. (௨௱௰)

ஏழுநாள்தான்கொடுக்கத்திரும்நோய்கேள் என்மகனேகுறையுநோயுங்குன்மநோயும், ஆழுமேதுக்கமுஞ்சூலையனையாப்பு அபானத்தில்குலையுடன்போனிப்புறவு, கேழுமேழுலேழுளைகண்டமாலைகிரந்தியுடன்றடிப்புவெள்ளைக்கருங்கரப்பான், பாழுமேவண்டுகடிசிலவிடமுந்திரும்பத்தியந்தானுப்பாகபசும்பாலாமே. (௨௱௰௧)

பாலாகும்வெந்நீராம்பதினலாநாள் பாலகனேவோமநீர் ஸ்நானம்பண்ணி, நாலாகும்உப்பதனைவறுத்துக்கூட்டு நன்மையுடன் மறுநாளும்

வெந்நீர்மூழ்கு, காலானவிளக்கெண்ணெய்பின்புமூழ்கி கனத்தபுளிசுட்டு மேகூட்டச்சொல்லு, ஆலானஸ்ரீபோகமண்டலமாகாது அப்பனேசகல நோய்அகலும்பாரே. (௨௪௨)

குப்பிசெந்தூரம.

பாரப்பா இன்னமொருசெந்தூரங்கேள் பாடுகிறேன்புலத்தியனே பதிவாய்க்கேளு, நேரப்பாவாலைரசம்பலந்தான்நாலு நேர்த்திபென்னகெந்தியோர்பலமேகூட, காரப்பாகரியோட்டில்தொந்தித்தேதான் கனமாகப்பொடிசெய்துகுப்பிக்கேற்றி, மேரப்பாவாலுகையிலேற்றிக்கொண்டு மேன்மையுடனொருசாமந்தீபப்போலே. (௨௪௩

தீபம்போல்மறுசாமங்காலம்போலே திறமாகத்தானெரித்து மூன்றுஞ்சாமம், தாபம்போற்காடாக்கினிபோலேமைந்தாதானெரிக்கில்கெந்தகத்தின்வாசம்வீசுங், கோபம்போல் சிலாகையிட்டுமெள்ளக்கிண்டுகுமாரனுடன்குமரியுமேகூடும்நேர்மை, சோபம்போலிணக்கமதாயுருகிக்காணுந் துரிதமுடனிளகுபதமில்லாட்டாலே. (௨௪௪)

இல்லாட்டால்மேலோரோடுமூடி யென்மகனேயொருநாழிகடுந்தீப்போட்டு, சல்லாபமாய்நீக்கிச்சலாகையோடு சதிராகவுருகியதுகுழம்பாய்க்காணும், பொலலாததாளகத்தைப்பொடித்ததூள்தான் புலத்தியனேயரைப்பலந்தான்குப்பியில்போட்டு, நல்லாய்த்தானல்புறமுங்கீழுமேலும் நன்றாகச்சலாகையினாற்கிண்டிப்போடே. (௨௪௫)

கிண்டியேமுச்சாமங்கடந்துமேலேகிருபையுடனல்சாமந்தன்னில் மைந்தா, அண்டினல்வடவையென்றதணலைப்போடு அப்பனேமருந்தெல்லாமேலேயேறும், தூண்டியேமிதப்பதனைமறந்திடாதே துரிதமுடனல்சாமம்எரித்துநீயும், தண்டியேசலாகையிட்டுப்பார்க்கும்போது தயவாக சலாகைமுனைசிவந்துபோமே. (௨௪௬)

சிவந்தாலும்வெளுத்தாலும் பதமிதப்பா சீக்கிரத்திற்குறட்டாலேயெடுத்துக்குப்பி, மவமாகநீர்தெளித்துஆற்றிப்போடுமைந்தனேசலாகைமுனைகறுத்துத்தோன்றில், குவிந்திருந்தகுப்பிதனையடுப்போடேதான்குணமாகஎரிப்பாற்றிவைத்துப்போடு, தவிந்திருந்தஅடுப்பினதுவேகத்தாலே தான்சிவக்குமிருநாழிசென்றப்பாலே. (௨௪௭)

அப்பாலேகுறட்டதினல்குப்பிவாங்கி அசராமல்தெளித்திடுவாய்சுத்தகங்கை, தப்பா தகுப்பிதனையுடைத்துப்பாரு தயவானசெந்தூரங்கறுத்துக்காணும், இப்பாலேயுறைக்கையிலே முருக்கம்பூப்போல் இருக்குமடாபணவிடைதான்தேனிலீய, செப்பாதபத்துநாள்தன்னிலேதான் தீருகிறவியாதிதனைத்திறமாய்க்கேளே. (௨௪௮)

கேளப்பாமூலநோய்மேகரோகங் கெடியானபவுத்திரமுமனேகநோய்கள், தாளப்பாபுளிபுகையுந்தள்ளத்தீருந் தயவானவாலைரசச்செந்தூரத்தை, ஆளப்பாசுற்பாதிசெப்வானப்பா அரகராவுலகத்தோர்ரசமென்பார்கள், வாளப்பாஇன்னமொருசெந்தூரந்தான் வகையாகச்சொல்லுகிறேன்வரிசையாக. (உசகூ)

## அப்பிரேகச்செந்தூரம்.

வரிசையாய்ச்சொல்லுகிறேனப்பிரேகந்தன்னை மைந்தனேபொடிப்பொடியாய்ப்பொடித்துக்கொண்டு துரிசமதாயந்திடைக்குப்பனேவெல்லந்தான்சுகமாகவெடியுப்புமொன்றாய்க்கூட்டி, பரிசமுடன்சுத்தகங்கைதன்னைலாட்டிப் பாலகனேயில்லைகட்டிஒட்டிவிட்டு, பிரிசமுடன்மேல்மூடிச்சிலைசெய்து பெலமாக்கிக்கெசபுடத்திற்போட்டுப்பாரே. (உருய)

போட்டுமேயாறினபின்னெடுத்துப்பாரு புண்ணியனேதளுங்கற்றுப்பறபம்போலாம், தாட்டிகமாய்க்கல்வத்திலிட்டுக்கொண்டு தானரைப்பாயொருசாமமெருக்கம்பாலால், மாட்டியமாய்க்கல்லோடேரவியிற்போட்டு மற்றுநாளெருக்கம்பால்சாமமாட்டு, நாட்டுமேகல்லோடேவெயிலிற்போட்டு நலமாகவவ்விதம்காற்பதுநாள்போடே. (உருக)

நாள்கேளுநாற்பதிலேவில்லைகட்டு நன்மையுடன்காயவைத்துஒட்டிவிட்டு, வேள்போன்றமேலோடுபொருந்தமூடி மேன்மையுடனெழுசீலைமண்ணுஞ்செய்து, தாளான்தானிமைஞ்சிகெசபுடத்திற்போடு தயவாகவாறினபின்னெடுத்துப்பாரு,வாள்போன்றவப்பிரகஞ்சிவந்துகாணும் மைந்தனேகல்வத்திலரைத்திடாயே (உருஉ)

அரைத்திடுவாய்பொற்றலையின்கையாள்சாற்றி லப்பனேநாஸ்சாமமரைத்துவில்லை, திறத்துடனேகாலுலர்த்திக்கெசப்புடத்திற்போடு நீர்க்கமுடனிவ்விதமாயரைத்தரைத்து, உரக்குடனேயஞ்சுபத்தும் ஒன்றும்போட உத்தமனேயருணனைப்போல்சிவந்துகாணும், நிரைந்துமதைப்பொடிசெய்துகுப்பிதன்னில் நீபதனம்பண்ணிவிடுவனுபானங்கேள். ()

கேளடாஆவாரைபஞ்சாங்கந்தான் கிருபையுடன்பலமெட்டு*அசுவகெந்தி, நாளடாஅவ்வீதஞ்சீரகந்தான் நன்மையுடன்பலமிரண்டுஞ்சூரணித்து, தாளடாவெருகடியிறகுன்றிவீதக் தருவானபசுவெண்ணெய்கன்னிலுண்ண வேளடாஇருவேளைமண்டலந்தான் விதமாகக்கொண்டுவிட்வியாதிகேளே. (உருச)

## * அசுவகெந்தி அமுக்கறா.

கேளேநீமேகமென்றுவிருபத்தொன்றுங் கெடியாகத்திருமடாயக்தியமேயில்லை, கோளேநீரிழிவுமதுமேகந்தீரும் கோடானகம்பமிதக்கொ

வ்வாதப்பா, வாளேநீசெந்தூரஞ்சகலருக்கும் வாயாறுவார்படுவாரிங்கபாடு, வேளோனேவென்றசித்தர்செப்புமார்க்கம் வெளியாகச்சொன்னதிந்தப்பூரணந்தான்பாரே. (௨௫௫)

காந்தசெந்தூரம்.

பாரப்பாஇன்னமொருசெந்தூரந்தான் பாங்கானகெந்திசமன்காந்தக்கூட, நேரேநீகரிசாலைச்சாற்றாலாட்டி நினைவாகப்பில்லைகட்டிக்காயப்போட்டு, சாரப்பாஓட்டில்விட்டுஓடுமூடித் தயவாகச்சீலைமண்ணேழுஞ்செய்து, தாரப்பாகெசபுடத்திற்போட்டுவாங்கித் தயவாகஇந்திடைக்குக்கெந்திகூட்டே. (௨௫௬)

கூட்டியேமுன்சாற்றாலரைத்துமுன்போற் குணமாகக்கெசபுடத்திற்போட்டுவாங்கி, நாட்டியேயிவ்விடைக்குக்கெந்திகூட்டி நலமானபழச்சாற்றாலரைத்துமுன்போல்,மாட்டியேகெசபுடத்திற்போட்டுப்பின்பு மைந்தனேயிவ்விடைக்குக்கெந்திகூட்டு,தாட்டிகமாயிவ்விடைக்குச்சித்திரமூலந் தயவாகத்தான்கூட்டிமுலைப்பாலாட்டே. (௨௫௭)

ஆட்டியேபில்லைதட்டியோட்டிலிட்டு அப்பனேமுன்போலபுடத்திற்போடு, நாட்டியேகெந்தியொடுசித்திரமூல நன்மையுடனிவ்விடைக்குநான்றாய்க்கூட்டி, ஆட்டிவோய்கோழிமுட்டைவெண்கருவினாலே அப்பனேபில்லைசெய்துபிடத்திற்போட்டு, காட்டிடவேபின்னெடுத்துக்கல்வத்திட்டுக் கனமாகஎருக்கம்பால்தன்னாலாட்டே. (௨௫௮)

எருக்கம்பால்தன்னாலேநாலுசாம மென்மகனேதானரைத்துப்பில்லைதட்டி, சுருக்கமுடன்தானுலர்த்திபோட்டிலிட்டுச் சுகமாகமேலோடுமூடிச்சீலை, இருக்கமுடன்மண்செய்துகெசபுடத்திற்போட்டு எடுத்துப்பார்செங்கனப்பாயிருக்கும்பாரு. பொருக்கமுடன்பொடிசெய்து பதனம்பண்ணிப் புண்ணியனேபணவிடைதான்தேனிலுண்ணே. (௨௫௯)

உண்ணப்பாஅந்திசந்திமண்டலந்தானுத்தமனேபத்தியமோ அதற்குவேண்டாம், கண்ணப்பாமோகமதுதவிர்த்தாற்போதுங் கனமானவிஷப்பாண்டுகவுசிக்கட்டி, தண்ணப்பாசோகையுடன்பித்தபாண்டு தருகாகீராம்பலண்டவாயு, நிண்ணப்பாமேலேறும்ஆனந்தவாயு நிலையானவாயுவெல்லாம்நீங்கிப்போமே. (௨௬௰)

அயச்செந்தூரம்.

நீங்கிப்போமின்னமொருசெந்தூரங்கேள் நிலையானஅரப்பொடியைக்கல்வத்திட்டு, ஏங்கிப்போம்காடிதெளித் தொதியன்பட்டைஇடித்துப்பிழிந்திச்சாற்றையூற்றிமைந்தா, பாங்குடனேமூன்றுநாள் ரவியில்வைத்

தே பாலகனேவைத்தபின்புநாலாநாளிற், சாங்கமாய்முன்சாற்றிலரைத்து
வில்லைதயவாகத்தான்செய்துகாயப்போடே. (௨௬௧)

போடப்பாஓட்டிவிட்டுஓடுமூடிப் புகழாகச்சீலைமண்ணேழுஞ்செய்
து, நாட்டப்பாகெசபுடத்திற்போட்டெடுத்து நலமாகமுன்சாற்றிலரைத்
துமுன்போல், தேட்டப்பாகெசபுடம்எட்டும்போட்டுத் திறமாககாடிய
துசேர்ந்தசாற்றிற், கூட்டப்பாதனிச்சாற்றில்மூன்றும்போடு குணமாக
அயமதுவுஞ்செந்தூரமாமே. (௨௬௨)

ஆமப்பாவனுபானமறிந்தேயுண்ண அரும்பிணிகள்வாதபித்தம்அ
ய்யத்தாலே, நேமப்பாஅனேகமகாரோகமெல்லாம் நீங்கித்திரிநாடிகளுமு
றுக்குமேறி, காமப்பால்பெரிதிருக்கும்சிந்துகட்டும் கண்கள்செவ்வலரிய
றிவீரஞ்செய்யும், தாமப்பாஆலாசுபச்சிவித்து சமனிடைக்குஅதிமதுர
ம்பசுநெய்யாமே. (௨௬௩)

நெய்யாகுந்தேனுகுமதுபானந்தான் நீங்காதவாய்வுகளுநீங்கிப்போ
கும், பொய்யாகுங்கையாகந்தவறிட்டாலும் புலத்தியனேமருந்தொன்று
ம்பலித்திடாது, வையாதேபூரணத்திற்கையாகந்தான் வண்மையுடன்
சொன்னதினுல்வைத்தியபூரணம், அப்பமில்லாநாளூறும் வெளியாய்த்
தோணும் ஆதிகுருகொடுத்தவடமொழிதன்னுலே. (௨௬௪)

நாகசெந்தூரம்.

தன்னுலேயின்னமொருசெந்தூரக்கேள் தருவானநாகமதையுருக்கி
மைந்தா, முன்னுலேமுவேழுதரந்தானன்றாய் மூர்க்கமுட்டனிலுப்பைநெ
ய்யிற்காய்ச்சசுத்தி, பின்னுமேலபுதுசட்டிதன்னிலிட்டுப் பியகாமலடுப்பி
ட்டுஉருக்கிக்கொண்டு, தன்னுலேசீதாசெங்கழுநீர்ப்பூண்டு தான்போட்டு
அபயக்கரண்டிதன்னிற்சுண்டே. (௨௬௫)

கிண்டுவாயடிக்கடிதான்பூண்டுபோட்டுக் கிருபையுடனனல்போட்டு
நாலுசாமம், தண்டுமிண்டுபண்ணுதேகிண்டிவாங்கு தருவானநாகமதுமா
ண்டுபோகும், கண்டுமேசெங்கழுநீர்ச்சாற்றைத்தூக்கனமாவாயில்லைசெய
துகாயப்போட்டு, பண்டுமேபோட்டிவிட்டுஓடுமூடிப் பாலகனேசீலைமண்
வலுவாய்ச்செய்யே. (௨௬௬)

செய்துமேகெசபுடத்திற்போட்டுவாங்கித் திரும்பவதைப்பொற்ற
லையின்சாற்றாலாட்டி, எய்துமேமுன்புவிசைமுன்போற்போட என்மக
னேநாகமதுசெந்தூரமாகும், கொய்துமேபணவிடைதான் பன்றிவெண்
ணெய்தன்னிற்குழைத்திரண்டு வேளையரைமண்டலமேகொள்ள, வைது
மேமூலமெல்லாம்திருமப்பா வகையானமேகநோய்மாறிபோமே. (௨௬௭)

மாறிப்போம்பத்தியந்தான்காப்பான்பண்டம் மைந்தனேயாகாதும
ற்றதெல்லாம், தேறிப்போம்புலத்தியனேசெந்தூரந்தான் சிவக்காதுமற்

சள்வண்ணஞ்சிவப்புமாகும், கேசரிப்போஞ்செந்தூரங் கொடுக்கும்போது குணமில்லாமூலநோய்மூலவாயும், மாறிப்போம்நாகசெந்தூரமப்பாவகையாகச்செய்துநீவைத்தியம்பாரே. (உ௬அ)

அறிவு

வயித்தியம்நீபார்க்கவென்றால்சொல்லக்கேளு வண்மையுள்ளமானிடர்க்குக்கர்மநோய்தான், பயித்தியமோவில்லாட்டால்நோயோவில்லைபாலகனேமுன்செய்தபாவத்தாலே, சயித்தியமோதொடர்ந்துவரும்குஷ்டரோகம்தன்னாலேயுன்னையவர் பணிந்துகாப்பார், அயித்தியமாம்பொருளாசைபட்டாயானால் அணுகுமடாபுலத்தியனேஉன்னைத்தானே. (உ௬௯)

புலத்தியனேபொருளாசைகொண்டுநீயும் பூதலத்திற் பணங்கேட்டால்நோய்தீராது, சிலத்தியாவன்மனதுகனிந்துரைந்தாற் சிந்தையல்லநீயவனைக்கேட்கவேண்டாம், கிலத்திலேவயித்தியன்றன்மனம்நொந்தாக்கால் நீடூழிகாலமட்டும்நரகிற்சேர்வார், தலத்திலேபணம்பிடுக்கும் வயித்தியனேயானால் தன்மையுடன்கன்மநோய்க்குள்ளாவானே. (உ௭௰)

கன்மநோய்க்குள்ளாகிப்பிறக்கனன்றே கயிலாயபராபரத்திற்சேர்தனன்றே, வன்மமென்னுமுலகத்தார்மீதிலேதான் வயித்தியனேசிவன்மேலேகன்மம்வைத்தால், கன்மநோய்நிருமடாகாலனில்லை கயிலாயபதிகிடைக்குங்கருணைதங்கும், நன்மையென்றபெயரெடுக்கவெகுநாள்செல்லும்நலமானவயித்தியந்தான்றருமமாமே. (உ௭௧)

தாம்பிரச்செந்தூரம்.

தன்மமாமின்னமொருசெந்தூரங்கேள் தருவானதாம்பிரத்தைத்தகடுதட்டி, நின்மலமாமனோசிலைதான்கொஞ்சம்போலேநேர்மையுள்ளஅந்தரமாமூலிச்*சாற்றில், வன்மமுடனரைத்ததின்மேல்தடவியப்பா மார்க்கமுடன்பத்தெருவிற்புடத்தைப்போடு, கன்மமடாதானகலும்போலேமைந்தாகருவாகவிருபுறமும்வெந்துபச்சை. (உ௭உ)

* அந்தரமாமூலி-ஆகாசதாமரை,

பச்சையாய்த்தானிருக்குமதைத்தான்மைந்தா பக்குவமாய்முன்போலப்போடச்சாகும், மிச்சமாய்ச்செத்ததொருசெம்பைநீயும்மீறுமறப்பொடிசெய்துபுதுசட்டிதன்னில், அச்சமறப்புளியிலைச்சாற்விட்டுக்காய்ச்சியரைப்படிதான்குழம்புபோல்வரும்நேரம், உச்சிதமாய்ச்சுத்தகங்கைநாழிவிட்டுஉணவடையுடன்றான்கலக்கிதெளிடவையே. (உ௭௩)

தெளிந்தபின்னிறுத்துவிட்டுமறுநீர்வாரு திறமாகக்கல்லகியதைத்தெளிவைநீக்கி, ஒளிக்துவிடப்பச்சைவர்ணமூறல்தானும் ஒன்பதுநீர்தெளிவிறுக்கவூறல்நீங்கும், அளிந்துநீயவசரமாய்த் தெளிந்திடமதேஅப்பனேஊரலற்றுச்சுத்தியாகும், இளிந்துநீயடுப்பில்வைத்துச் சூடுதாக்கு என்மகனேகற்றைக்கிட்டிக்கிண்டக்கேளே. (உஎச)

கிண்டிடுவாய்புளியஞ்சிறுகீரையாலேகிருபையுட னற்சாமங் கிண்டியும், அண்டிடுவாய்கல்வத்திலிட்டுக்கொண்டு அப்பனேபுளியஞ்சிறுகீரைச்சாற்றால், கிணடுடனேதானரைத்துப்பில்லைதட்டி கினைவாகத்தானுலர்த்திஓட்டிலிட்டு, பண்டிடவேசெபுடத்திற்போட்டுவாங்கிப்பருவமுடன்றானரைப்பாய்பொற்றலையின்சாற்றில். (உஎரு)

சாற்றாலேயரைத்து அதைமூனுபுடமுன்போல் தயவாகப்போடவேகருஞ்சிவப்பாய்க்காணும், தோற்றுததாம்பிரம்வீறடங்காவிட்டால்துரிதமுடன்றிரிபலையின்கஷாயத்தாட்டி, காற்றாலேமுன்போலேபுடத்தைப்போடுகருவாகப்பணவிடைதான் கொள்ளச்சொல்லு, பார்த்தாலேகுஷ்டமெல்லாந்திருமப்பாபண்பானமேகமோடீளைபோமே. (உஎசு)

ஈளையொடுமெந்தாரக்காசம்போகும்இன்பமுடன் கரிசாலைச்சாறுநாழி, கோளையென்றபசுவின்பால்படிதானென்று கூட்டியதிற்சர்க்கரையும்பலம்பத்தாகும், பேளையென்றபாகுபதம்வருதல்கண்டுபெலமானமிளகுபலம்பதினறப்பா, வாளநல்லாப்பொடித்திட்டுலேகியம்போற்கிண்டிமைந்தனேநெய்யுழக்குத்தேன்றான்பாதி (உஎஎ)

பாதிவிட்டுக்கிண்டியதில்லேகியமப்பாபாங்கானசெந்தூரம் பணவிடைகால்கூட்டி, சாதியமாயிருவேளைமண்டலந்தான் கொள்ளச்சகலநோய்தீருமடாதாம்பிரத்தின்மேகம்,ஆதியாயப்புளிபுகையுந்தவிர்த்துநல்லஅன்பானபசுநெய்யும்வெள்ளாட்டுக்கண்டம், ஓதியதோர்சிறுபயறுதுவரையாகும் உத்தமனேவழுதலையுமுருங்கைப்பிஞ்சே. (உஎஅ)

பரும்பாடுதீரமிளகுலேகியம்.

பிஞ்சாகுமின்னமொருலேகியங்கேளு பெலமானபொஸ்தக்காய்கர்க்கடகசிங்கி. தஞ்சமென்றவகைக்குஒருபலமாய்வாங்கித் தன்மையுடன்மராட்டிமொக்குகழஞ்சுசேர்த்து,மிஞ்சாமற்பொடிசெய்துபனைவெல்லந்தான் மீறுமல்மருந்திடைக்குப்பாகுசெய்து, அஞ்சாமற்சூரணத்தைக்கொட்டிக்கிண்டிஅப்பனேதேனையும்விட்டுக்கிண்டே. (உஎகூ)

கிண்டியேபாக்களவுலேகியந்தான்கிருபையுட னிருவேளையஞ்சுநாளும்,கொண்டிடவேபெண்களின்உதிரப்பாய்ச்சல் கொடுமையென்றபெரு

ம்பாடுதீருமப்பாஉண்டிடவேபத்தியந்தானென்றுபாகாஉத்தமனேவறுத்
தவுப்புமிளகுகூட்டி வண்டலென்றதுவுளையுடன் சுண்டலாகுஞ்சுகமான
வெங்கீருஞ்சாந்தமாமே. (௨௮௰)

## தேற்றாங்கொட்டைலேகியம்,

சாந்தமாமின்னமொருலேகியங்கேள் சமர்த்தானபலமைந்து தேற்
றாங்கொட்டை, சேர்ந்ததொருதிரிகடுகுதிரிபலாதிசிற்றரத்தை சீரகம்வ
கைக்கரைப்பலந்தான்,பாந்தமாய்ப்பொடிசெய்துவைத்துக்கொண்டு*பஞ்
சதாரைபலம்நாலுபடியாவின்பால்,தோய்ந்திட வேகலக்கியதைப்பாகுசே
ர்த்துத்துரிதமுடன்நூள்கொட்டிக்கிளருவாயே. (௨௮௧)

* பஞ்சதாரை-சர்க்கரை.

கிளரயிலேபசுவினெய்படிகால்வாரு கிழறக்கித்தேன்பாதிவிட்டுக்கி
ண்டி, தளரயிலேபாக்களவுலேகியத்தில்தருவானநாகபற்பம்கூட்டித்தின்
னு,அளரயிலேயிருவேளை இருபதுநாள்கொள்ளு அப்பனேமூலநோயக
லுஞ்சொன்னேம், இளரவேசயமுடனேயத்திசுரவாத மிதமானஅக்கி
னியாமந்தம்போமே. (௨௮௨)

## திரிகடுகுலேகியம்.

மந்தமொடுமூலத்தின்வாயுதீரும்மைந்தனேபுளிபுகையுமாற்மச்சொ
ல்லு, அந்தமுடனின்னமொருலேகியங்கேள் அன்பானதிரிகடுகுவகைப
லந்தானென்று, சொந்தமுடன்சீரகமுங்கிராம்புஏலம்துரிதமுடன்வகை
க்குஅரைப்பலமேவாங்கி, விக்தையாய்ச்சுத்திசெய்துசூரணித்து விதமா
னபலவெல்லம்பலந்தானஞ்சே. (௨௮௩)

அஞ்சாகும்பாகுபோற்காய்ச்சிக்கொண்டு அப்பனேசூரணத்தைப்
பாய்ச்சிக்கிண்டி, மிஞ்சாமல்நெய்யுழக்குஅரைக்கால்தேன்றான் விட்டும
லைலேகியம்போற்கிண்டிவாங்கிக், கொஞ்சமாய்க்கொட்டைப்பாக்களவு
மைந்தா குணமாகஇருவேளை இருபதுநாள்கொள்ளு, நெஞ்சாரத்தீருகிற
வியாதிகேளு நிலையானவாதமொடுவாயுவோமே. (௨௮௪)

வாயுவொடுஉஷ்ணமும்பித்தவாய்வுவயிற்று வலிகடுப்புளைவுஎரி
ச்சல்பேதி, தீயுவென்றஅக்கினியாமாந்தம்வாந்திதீராத அஸ்திசுரமஸ்
திவெட்டை, பாயுமதோர்பொருமலென்றவாயுக்கிராணி பறக்குமடாலே
கிடத்தில்அயச்செந்தூரம், பேயுமின்றிப்பணவிடைதான்கூட்டியுண்ண
பபெலமானவாயுவெல்லாம்புரண்டுபோமே, (௨௮௫)

## கபாடலேகியம்,

பரண்டுபோமின்னமொருலேகியங்கேள்பெலமான ஆலாசுஅத்திநா
வல், முரண்டயமாம்பட்டைக்குக்கருவேல்பேட்டை மூர்க்கமுள்ளவெள்
வேலும்விதாரைமேவரும், திரண்டுவன்றதென்னம்பூஒன்பதுமேலன்றாய்

த்திறமாகப்பலமிரண்டுமிடித்துமைந்தா, இரண்டுமேபாலேயிட்டுக்குறு ணிநீர்தானிட்டுமதையெட்டொன்றுயிட்டுக்கேளே. (உஅசு)

கேளப்பாகியாழத்தைவடித்தாக்கொண்டு இருவையுடன்சர்க்கரையெல் லாமெறிந்துபோடு, தாளப்பாபூண்டுரித்துப்பலந்தானெட்டு தருவாக அ திற்போட்டுவேசகைவத்து, கோளப்பாசலமெல்லாங்குறுகிவெந்தாற் குண மாசமத்திட்டுக்கடைந்துகீயே, நாளப்பாபனைவெல்லம்டலந்தானுறு நன் மையுடனதிற்போட்டுப்பாகுபோலாம். (உஅஎ)

பாகுபோல்பதமாகும்போதிலேதான் பக்குவமாய்ச்சாதிக்காய்ஜெனி ஓமம், நேகலவைகைக்கிரண்டுவிராகனிடையாகு மிகாரகப்பொடிசெய் துபோட்டுக்கிண்டி, பாகுபோலிளக்கமதாயிருக்ககாணுற் பக்குவமாய்ச்ச லம்வற்றக்கிண்டும்போது, ஏகமாய்ப்பசுவின்நெய்கொஞ்சம்விட்டு, என்மக னேலேகியம்போல்கிண்டிவாங்கே. (உஅஅ)

வாங்கியேநெல்லிக்காய்வீதந்தானும் மைந்தனேஇருவேளையிருப துநாள்கொள்ளத், தாங்கிநின்றமூலமொடுகடுப்புரத்தம் தருவானசிமூட னேமூலக்கிராணி, ஓங்கிநின்றமூலத்திற்சேர்ந்தநோய்கள் ஓடுமடாசரம துமட்டாய்கூட்டு, பாங்குடனேபுளிகூட்டுபத்தியமோஇல்லை பாலகனே செந்தூரங்கூட்டித்தின்னே. (உஅகூ)

செந்தூரமுன்சொன்ன நாகமப்பா தின்றுடரில்திராதரோகமுண் டோ, விந்துநமெலும்புருக்கியோகந்தீரும் விதககனேதேகமதுபுஷ்டி யாகும், செந்தூரமுந்நூற்றிற்சுளுவாய்ச்சொல்லேன் திறமாகஅனுபா னமறிந்துகொள்ள, செந்தூரில்முருகனைப்போல்நோய்கள்நீக்கும்திறமா னவயித்தியபூரணமிதுதானே. (உகூ0)

## அதுவளைலேகியம்,

பூரணமாமின்னமொருலேகியங்கேள் புலத்தியனேநானூற்றில்புனி தமாக, காரணமாமுருங்கைப்பூதூதுவளம்பூவும் கணக்காகவடகக்குருநல் பலம்கிறுக்து, தாரணியில் ❊ சதாவேரிக்கிழங்குமூணு தருவானதண்ணு ரிவேர்பலமிரண்டு, காரணமாய்நிலப்பனையுநெரிஞ்சிமுள்ளும் வருசையாகவ கைக்குஒருபலமாய்க்கூட்டே. (உகூக)

❊ சதாவேரி-தண்ணீர்விட்டான்கிழங்கு.

கூட்டியேகுரணித்துப்பசுவின்பால்தான் குறுணியிலேபோட்டுமே குழம்புபோலே, காட்டியேவற்றிவரும்போதுமைந்தா கருவாகசீனிபல ம்பன்னிரண்டும்போட்டு, நாட்டியேகிளாயிலேபசுவினெய்தா னலையாக ப்படியரைதேனுழக்குவிட்டு, கேட்டியாலேகியம்போற்கிண்டிவாங்கிக் கி ருவையுள்ளசணடதிக்குப்பூசைசெய்யே, (உகூஉ)

செய்துமேதான்றிக்காயளவுகொள்ளத் திருகிறவியாதிகளைத்திறமா ய்க்கேளு, எய்துகின்றபிரமியமுமேகநோயும் இன்பமுள்ளஎலும்புருக்கி ப்பிரமேகந்தான், பெய்துமேமண்டலத்திற்றீர்ந்துகாதும் பெலமுண்டா யிந்திரியபெலமுண்டாகும், செய்துமேலேகியத்தில்மேகநோயெல்லாந்தி ருமடாபத்தியமோஇல்லைபாரே. (உகூங)

இல்லையென்றுமயங்காதேயின்னமொன்று என்மகனேசாதிக்காய்சா திப்பத்திரி, வல்லெலன்றகிராம்புசிறுநாகப்பூவு வகையானஅமுக்கருபற ங்கிப்பட்டை, கொல்லென்றசந்தனமுங்கொடுவேலிவேரும் கூர்மையுட ன்பச்சைக்கர்ப்பூரமொன்றாய், சல்லையென்றுவினையாதேகாற்பலமாய்வா ங்கித் தான்பொடித்துச்சரியிடைதான்சீனிகூட்டே, (உகூச)

திப்பிலிரசாயனம்.

கூட்டியேபசுநெய்யால்பிசைந்துமைந்தா குணமானபீங்கானில்வை த்துக்கொண்டு, நாட்டியேபாக்களவுஇரண்டுவேளை நன்மையுடனிருபது நாள்கொள்ளும்போது, தாட்டிகமாய்மேகநோய்நீங்குமப்பா தயவாகஇ ன்னமொருரசாயனக்கேள், காட்டுகிறேன்திப்பிலியும்பலம்பத்தப்பாகரு வானமிளகுடனேசுக்குபலமஞ்சே. (உகூரு)

பலமொன்று()இருசீரக*மிரண்டுஓமம் பாங்கான()அரத்தைரண் டு*திரிபலாதி, நலமானலவங்கமுடன்லவங்கப்பத்திரி நன்மையுள்ளலவ ங்கப்பட்டைதாளிசப்பத்திரி, பெலமானகொடுவேலியேலமப்பா பேசிய தோர்பதினைந்துபலமொவ்வொன்று, தலமாகவிளவறுப்பாய்ச்சூரணித் துத் தன்மையுடனவ்விடைக்குச்சீனிசேரே. (உகூசு)

() இருசீரகம்-கருஞ்சீரகம்-நற்சீரகம்.

* இரண்டுஓமம்-ஓமம்-குருசாணியோமம்.

() அரத்தைரண்டு-சிற்றரத்தை-பேரரத்தை

* திரிபலாதி-கடுக்காம்-தான்றிக்காய்-நெல்லிக்காய்

சேர்த்துமேதேன்விட்டுப்பிசைந்துமைந்தா திறமானபீங்கானிற்பத்ர னம்பண்ணி, காத்துமேதாம்பிரசெந்தூரங்கூட்டிக் கனமாகவுண்டிடவே காசரோகம், போர்த்துமேமந்தாரகாசங்கூடப் புலத்தியனேசயமிருமல் இளைப்புக்கக்கல், ஆர்த்துமேசேத்துமத்தொண்ணூற்றும் அகலுமடா மண்டலத்திலறிந்துபாரே. (உகூஎ)

### கக்குச்சூரணம்.

பாரேநீஇன்னமொருசூட்சங்கேளு பாங்கானசுக்கதனைச்சூரணமே பண்ணி, காரேநீகரும்புசர்க்கரையவ்வீதங் கலந்துமேயிருவேளையேழு நாளுஞ், சேரோநீதின் றுவரவாயுவுதீருந்திறமானதீபனமுண்டாமப்பா, ஊரெல்லாமருந்திருக்கக்காட்டிற்போய்நீ உலுத்தனைப்போலலையாதேஉ ண்மைகேளே. (உகூஅ

### திப்பிலிமிளகுசூரணம்.

உண்மையென்றதிப்பிலியைச்சூரணமேசெய்துஉகமையுடன்றேனி லேகுழைத்துத்தின்ன, வண்மையுடன்புகைந்திருமுஞ்சேத்துமநோய்தா ன்மாறியேபசியுண்டாமருவிப்பாரு, நன்மையுடன் மிளகுதனைசூரண மேசெய்து நலமானபசுநெய்யிற்சீனிகூட்டி, தண்மையுடன்மூன்றுநாள் அந்திசந்தி தானருந்தசளியிருமல்தவறிப்போமே (உகூகூ)

### திரிகடுகுசூரணம்.

தவறிப்போந்திரிகடுகுசூரணத்தால் தருவானமந்தமுடன்கழிச்சல் தீருந், தவறிப்போ ந்தேனிலேகொண்டாயானால் தருகாதுசங்கிச்தளங்க ள்தானுந், தவறிப்போம்பனைவெல்லங்கூட்டியுண்ண தண்மையுள்ளவ யிற்றுநோய்தானேதீருந், தவறிப்போஞ்சகலநோயதனைக்கண்டால் தரு காதுவயித்தியன்பேர் சொல்லுமுன்னே (௩௦)

### முப்பூவுக்குவிபரம்

முன்னமேமுப்பூவைமறைத்ததாவே முழுதுமது வகைவிபரஞ் சொல்லக்கேளு, நன்னயமாய்நாதமென்றால்பூமிநாதம் நாதாக்கள்பூசித் துவாழ்ந்தநாதம், அன்னைஉமைநாகமதிற்கொஞ்சம்வாங்கி அப்பனேபிரி திவியின்அண்டஞ்சேர்த்து, சொன்னமொழிதவறாமல் * அனுப்பினுட் சுவையுஞ்சேர்த்தரைக்கத்தாளிச்சாற்கருக்குரம்ப (௩௧

### * அனுப்பினுட்சுவை-உப்பு.

ரம்பவென்றாலனைநாழியரைத்தாற்போதும் நிலவரமாய்ச்சிப்பியு டசாம்பலுக்குள்வைத்து, ஐம்பதொருபுடம்போடசதாசிவனுமங்கேஅட ங்கிவெள்ளைநிறமாகிக்குருவுமாவார், செம்பொனென்றவாதமுடன்வயித் தியமுஞ்சித்தித் திறமானவாசிசித்திகுளிகைசித்தி, சம்புசதாசிவனுடை யபாதஞ்சித்தி தயாபரியாந்தாயினிடநாதத்தாட்டே (௩௨)

### இரசவாதத்திற்குவாலைரசசெந்தூரம்.

ஆட்டவென்றால்குருவில்லாதாட்டமுண்டோ அப்பனேவாலைரசச் செந்தூரத்தில், நாட்டமென்றபலம்நிறுத்துப்பாதிகெந்தி நன்மையுடன் பேய்ச்சேம்பின் கிழங்குசாற்றில், ஆட்டுவாய்நாண்மூன்றுபின்புலர்த்தி

அப்பனேகுப்பியிலேமூன்றுசாமம், வாட்டமில்லாதேயெரித்து முன்
போற்கெந்தி மாட்டியேயைந்துவிசையெரித்துவாங்கே. (௩௱௩)

### முன்சொன்னவைப்புக்குவிபரமும்-வெடியுப்புசுத்திவிபரமும்.

வாங்கினாற்குப்பியடியிருக்குமப்பா மைந்தனேசெந்தூரமேலேறு
து, தூங்கியேயலையாதேசொல்லக்கேளு துறையாகசெலவுக்குக்கிட்டுமப்
பா, ஓங்கியேசகலநோய்தீருமப்பா உத்தமனேமுன்சொன்னசீடனுக்கு,
தாங்கியேவாழையுடகிழங்குசாற்றில் தான்காய்ச்சிவெடியுப்புகூட்டநன்
றே. (௩௱௪)

### சைவீரவைப்பு.

நன்றப்பாசைவீரவைப்புதானும் நலமானவெடியுப்புநாலுபங்கு, நி
ன்றப்பாரசத்தைவிடிரண்டுபங்கு நிலையானநவச்சாரமிரண்டுபங்கு, கண்
டப்பாசீனமோர்பங்குகூட்டிக் கருவாகத்தான்பொடித்துக்கலையத்திட்டு,
முன்றப்பாகெந்தகம்போல் திநீர்வாங்கி மூட்டியனாசைவீர வைப்புநன்
றாம். (௩௱௫)

வைப்பானதிறவுகோலிதுதானப்பா மார்க்கமுடன்சித்தாதிசெய்யும்
வித்தை, செப்பாதசதுர்முகத்தோன்றிருவகமுன்சொன்னேன் றிரமான
சீடனுக்குயிருஞ்சொன்னேன், வைப்பானவைப்புக்குகை பாகஞ்சொன்
னேன் மகத்தானமுப்பூவின்மறப்பைச்சொல்வேன், அப்பானஅப்பினு
ப்புகல்லுப்புத்தான் அப்பனேநாதமென்றாற்பூநீறாமே. (௩௱௬)

பூநீறாஞ்சத்தியுப்புகல்லுப்பின்பேர் புலத்தியனேசிவமென்பார்பர
த்தைக்கேளு,பூநீறாமதற்கடியில்அண்டம்போலப் பூமியிலேதானிருக்கு
ம்தெரிந்திடாதோ,பூநீறாம்அண்டமென்றால்சுக்கான்கல்லு புலத்தியனே
பேருலகம்புகழுங்கல்லு, பூநீறாக்கல்லுப்பாஞ்சுண்ணாம்புகல்லுபூட்டிவி
ட்டு நாக்கறுப்பேனென்றசொல்லே. (௩௱௭)

சொல்லப்பாபரத்தினிடஉப்பிதப்பா சுகமாகமூன்றுமொன்றாய்ச்சு
ண்ணமானால், அல்லப்பாஆதாரந்தன்னில்மூணு அப்பனேயதைச்சேர்க்
கில்உயிருண்டாகும், வல்லென்றபெரியோரும்யோகியோரும் வாழ்ந்திரு
ப்பாரிதைதானேபூசைசெய்து கல்லென்றகலைக்கருகே யிருப்பார்சொன்
னால் காணரிதுகண்டவர்கள்கோடிக்கொன்றே. (௩௱௮)

### வெள்ளைக்குச்சூரணம்.

ஒன்றாகஇன்னமொரு சூரணங்கேள் உத்தமனேசந்தனமும்அகிற்க
ட்டையேலம், நன்றாகலவங்கப்பட்டைகிராம்புசோம்பு நன்மையதிமதுர
ங்கார்போகவித்து, சென்றதோர்வெட்பாலைதேற்றான் வித்துதிறமானஅ

ருகம்வேர்சிற்றுமுட்டி, பன்றுனவேருடனேபன்னிரண்டும்பாலகனேவ
கைக்குஅரைப்பலமாய்வாங்கே. (௨௱௯)

வாங்கியேவெயிலுலர்த்திச் சூரணமேசெய்து வண்மையுடனந்தி
டைக்குகற்கண்டுகூட்டி, தேங்கியேவெருகடிதான்அந்திசந்தி திறமானப
சுவெண்ணெய் மண்டலமேகொள்ளா, ஓங்கியேஓடுகிற வெள்ளைதீரும்
உத்தமனேநீமெரிப்புஉடனேதீரும்,பாங்குடனேபத்தியமோகாரமாகாப
ரிவானபுலத்தியனேபாகமாமே. (௨௱௰)

## இஞ்சிசூரணம்.

பாகமாயின்னமொருசூரணங்கேள் பாங்கானஇஞ்சிபலம்பத்துவா
ங்கி, தோகமாய்த்தோல்போக்கிவில்லையாக்கிசுத்தமாய்பொன்வறுப்பாய்
பசுநெய்யாலே, ஏகமாய்ப்பொடிசெய்துவைத்துக்கொண்டுஏலமொடுதிரி
கடுகுகிராம்புஓமங், தாகமாய்வாலுழுவைச்சாதிக்காயுந்தருவானஆனைத்
திப்பிலிசீரகமாமே. (௨௱௰௧)

ஆமப்பாஅதிமதுரம்குரோசானிஓமம் அமுக்கிறுகசகசாலவங்கப்
பத்திரி, காமப்பாமோடியுடக்கொத்தமல்லி நலமானபேரீச்சமுந்திரிகை
ஒக்க, தாமப்பாவகைக்குக்காற்பலமேவாங்கித் தருவானஇளவறுப்பாய்சூ
ரணமேசெய்து, ஓமப்பாசீனிபலம்பத்துங்கூட்டிஉத்தமனேமூன்றுமொ
ன்றாய்விரவிக்கொள்ளே. (௨௱௰௨)

விரவியேவெருகடிதான்அந்திசந்தி விவரமுடன்மண்டலமேகொண்
டாயானல், பரவியேமந்தமுடன்அக்கினியாமந்த மபாங்கானஊஷ்ணத்
ன்வாயுவுங்கூடக், கரவியேபித்தமொடுபித்தவாய்வுங் காணுதேஓடுமடாதீ
பனமுண்டாகும், பிரவியென்றவாதமெல்லாமொடுங்கிநல்ல பிலமுண்டா
மின்னமொருவிவரங்கேளே. (௨௱௰௩)

## திராட்சசூரணம்.

கேளேநீமுந்திரிகைப்பேரீச்சோடு கிருபையுள்ளதக்கோலமதுரமு
த்தம், வாளேநீகொத்தமல்லிஅல்லிக்கிழங்கும் வகையானசாதிக்காய்லவ
ங்கஞ்சுக்கு: ஆளேநீநன்னாரிலவங்கப்பத்திரி அப்பனேதாளிசம்திப்பிலி
விலாமிச்சு, பாளேநீசிறுநாவற்பூலவங்கப்பட்டை பாங்கானசந்தனமுமூ
ங்கிலுப்பே. (௨௱௰௪)

உப்பானநெல்லிவிதைநெற்பொரியுமொக்க வுத்தமனேவகைக்குஒரு
பலமாய்வாங்கி, செப்பாமல்சூரணித்துசமனிடைதான்சீனி சேர்த்துமே
வெருகடிதான்அந்திசந்தி, ஒப்பாககாலைகம்மா மண்டலந்தான் உத்தம
னேபசுநெய்யில்மாலையிலுண்ணத், தப்பாதபத்தியமோஇல்லையப்பா த
ருவானவியாதிதனைச்சாற்றக்கேளே. (௨௱௰௫)

சாற்றக்கேள்பயித்தியமும்பாண்டுசோகைத் தருவானபித்தமொடுமி
ரத்தபித்தம்,போற்றியேகாமாலைதாகசுரமும்வாங்கி போமடாசயித்தியமு
ம்தீர்ந்துபோகும், வாழ்த்தக்கேளின்னமொருசூரணந்தான் மைந்தனேதி

ரிகடுகுமோடிகோஷ்டம், றோற்றியதோர்நெல்லிக்காய்சந்தணமுமாஞ்சில் சுகமானதாளிசைகிராம்புசிரகமாமே. (௩௱௰௬)

மந்தவாயுவுக்குச்சூரணம்.

சிரகமூமேலமொடுபச்சைகர்ப்பூரந் திறமாகச்சூரணித்துச்சீனிசமன்கூட்டி, காரணமாய்வெருகடிதான் அந்திசந்தி கனமாகஉண்டிடவேபித்தமெல்லாம், பேரணியாய்நின்றதொருரத்தபித்தம் பிலமாகவெரிபித்தம் அரோசிகம்வாந்தி, தாரணியில்லில்லாதுபத்தியமோஇல்லை தருவாகஇருபதுநாள்கொண்டுதேறே. (௩௱௰௭)

வாந்திபேதிக்குச்சூரணம்.

தேறவேயின்னமொருசூரணங்கேள் திறமானஎட்டியுடவட்டேர்வாங்கி, கூறவேமேல்தோலைப்பழச்சாற்றலாட்டி குணமாகரவியுலர்த்திச்சூரணமேசெய்து, மீறவேபதனமதாய்வைத்துக்கொண்டு மேன்மையுடன்புரமெரித்தார்தும்பைரண்டும், ஏறவேயியாழமிட்டுச்சூரணந்தான் இன்பமுடன்கடலையிடையிட்டுக்கொள்ளே. (௩௱௰௮)

கொள்ளவேயுகபேதிதிருமப்பா குணமாகமீறியதுபேதியானால், விள்ளவேமறுபடியுங்கிஷாயத்தில்தாக்கு மீறுகிறவாந்தியொடுபேதியாகும், உள்ளவேகாதடைப்புசங்கிவேர்வை உத்தமனேதீருமடாமூன்றுவிசையிய, வள்ளவேவறுத்தரிசிகஞ்சிகொள்ளு மைந்தனேஊழியது பறக்கும்பாரே. (௩௱௰௯)

பறங்கிப்பட்டைச்சூரணம்.

பாரப்பாஇன்னமொருசூரணங்கேள் பறங்கியுடபட்டையொடுஅமுக்குறவும், நேரப்பாசெங்கத்தாரிவெம்பாடம்பட்டை நினைவாகத்திப்பிலியுஞ்சித்திரமூலம், சாரப்பாசமனிடையாய்ச்சூரணித்து சமர்த்தாகஆவின்பாற்பிட்டுவைத்து, சாரப்பாபசுநெய்யில்வெருகடிதானுண்ண காணுதுசூலைபுண்ணுப்பாகாதே. (௩௱௨௰)

கருஞ்சூரைச்சூரணம்.

உப்பாகாதின்னமொருசூரணங்கேள் உத்தமனேகருஞ்சூரைசித்திரைமூலஞ், செப்பாதவெள்ளருகுமிளகரணைமிளகுஞ்சிறுகுறிஞ்சா ✻ ஆகாசக்கிழங்குகருவேலும், உப்பானஉமூலத்திவேருபட்டை ஒன்பதுமேசரியிடையாய்ச்சூரணித்து, அப்பாநீமுன்போலேபாலிலிட்டு அவித்திடவேசுத்தியதாம்பின்புகேளே. (௩௱௨௧

✻ ஆகாசகிழங்கு- ஆகாசகருடகிழங்கு

காட்டுக்கரணைச்சூரணம்.

கேளேநீவெருகடிதானிரண்டுவேளைகிருபையுடன்பசுநெய்யில் தீருநோய்கேள், பாளேநீகடிவிஷமும்குஷ்டரோகம் பாங்கானகருங்கரப்பான் கிரந்திசூலை, ஆளேநீபுண்களெல்லாம்திருமய்யா அப்பனேவறுத்தவுப்பு

துவரையாகும் வாளேரீயின்ன மொருசூரணங்கேள் மைந்தனேபேய்கா ணேகழஞ்சுபதினறே (௩௨௨)

பதியானசுக்குமேகழஞ்சுநாலுபாலகனேகொடிவேலி கழஞ்சுரண்டு விதியானமிளகுரண்டுசூரணமேசெய்துமீருமல்மூன் றுசுண்டைக்காய்வி தந்தான், சதியாகவேழுநாள்அந்திசந்திகாதகமாயெள்ளெண்ணெய்குழை த்துத்தின்ன, குதியானமூலமுளேமூலரோகங்குணமாகும் பத்தியமும்பு ளியாகாதே. (௩௨௩)

## சீந்திச்சூரணம்

ஆகாதுஇன்னமொருசூரணங்கேள் அப்பனேசீந்தியுட சூரணத் தை, வாகானசுத்தகங்கைதன்னில்சுத்தி மைந்தனேமூவேழுதரமேசெய் து, பாகாகஉலர்த்தியதைபால்விட்டுப்பிசரி பாலகனேகாயவைத்துபலம்ப த்தப்பா, நேராகக்கரிசாலேசூரணங்கூட்டி நினைவாகப் * பூநாகப்பூச்சி தன்னே. (௩௨௪)

* பூநாகப்பூச்சி நாகப்பூச்சி.

தன்னேயேபாலிலிடமண்ணெல்லாங்கக்கும் தருவாகப்பின்புலர்த்தி ச்சூரணமேசெய்து, ஒண்ணுமேபலமூன்றுஇடையுங் ட்டி உத்தமனே மூன்றுவிசைப்பொடித்துவடிகட்டி, நிண்ணயமாய்வெருகடிதான்நெய்யி ற்கொள்ள, நிலேயாதமேகமொடுகவிசையிளே, சொன்னமேகாசமெட்டுஇ ளேப்புசயரோகந் தொலேயாத * கிரிச்சினமும்அண்டவாயுவே. (௩௨௫)

* கிரிச்சினம்-அற்பம்.

வாயுவென்றவாதமொடுவறட்சிபித்தம் வகையாகத்திருமடாதேனிற் கொள்ள, தோயுவென்றகர்மநோய்நாசிப்புண்கள் தொலேயாதபீனசமுந் தொலேந்துபோகும், பாயுமென்றசர்க்கரையிற்கொண்டால்மைந்தா பாங் கானமயிர்வெட்டும்புழுவெட்டோடுங் காயுவென்றகாற்பிலமுங்கண்தெளி வுமுண்டாங், கருவாகப்புளிப்புகையுந்தவிர்க்கச்சொல்லே. (௩௨௬)

## வாதசுரத்துக்குக்கியாழம்.

சொல்லவேகியாழமொன்றுவிபரமாய்க்கேள் சுகமானபற்பாடஞ்சீந் தில்முத்தம், அல்லவேமலேதாங்கிகண்டங்கத்திரி அப்பனேசெம்முள்ளி முன்னேசுக்கு, நல்லவேவகைக்கிரண்டுகழஞ்சுகூட்டி நாழிநீரெட்டொன் றும்மூன்றுநாளும், வெல்லவேயிருவேளேகுடிக்கும்போது மீண்டுவரும் வாதசுரம்விட்டுப்போமே. (௩௨௭)

விட்டுப்போம்வாதசுரந்தனக்குக்கேளு விதமானசுக்குமுள்ளிகண்ட ங்கத்திரி, வெட்டிப்போய்பெருமல்லிசிற்றுமல்லிவேருடனேவகைவீதங் கழஞ்சுரண்டு, தட்டிப்போம்நாலுழிநீர்நாழியாக காய்ச்சிவடித்ததில்உழ க்குவறுத்தரிசியிட்டு, கெட்டியில்லாக்கஞ்சுபோல்காய்ச்சிகொள்ளக் கெடி யானவாதசுரம்கிளறிப்போமே. (௩௨௮)

### பித்தசுரத்திற்குகியாழம்-கஞ்சி.

கிளறிப்போர்தூதுவளைவேரினோடு கிருபையுள்ளசீந்திசுக்கு மதுரமாஞ்சி, அளரிப்போம்பயறுமுத்தஞ்சிற்றுமுட்டி அப்பனேமுன்போலே கியாழங்கொள்ள, உளரிப்போம்பித்தசுரங்கஞ்சிகேளு உத்தமனேவில்வவேர்மதுரஞ்சுக்கு, முளரிப்போமிலுப்பைவேர்சிற்றுமுட்டிமுன்போலக் கஞ்சிகொள்ளமுறைமையாமே. (௩௨௯)

### தேசத்துமசுரத்துக்குகியாழம்-கஞ்சி.

முறைமையென்றதூதுவளைகண்டங்கத்திரி முயன்றதொருசெம்முள்ளிசுண்டைவேரும், வறுமையென்றசுக்குடனேகியாழம்பண்ணி வகையானதிப்பிலித்தூள்போட்டருந்த, அருமையென்றசேத்துமத்தின்சுரமுந்தீரும், அப்பனேகஞ்சிவகைபாதரியும்வில்வம், உரிமையென்றபெருங்குமிழம்வேரில்முன்போல் உத்தமனேகஞ்சியிடச்சேத்துமசுரம்போமே

### குளிர்சுரத்துக்குக்கியாழம்.

போமப்பாசிரகமுங் * குறுந்தொட்டிவேரும் புண்ணியனேகியாழமிடக்குளிர்சுரங்கள், ஆமப்பாவிஷசுரமும்போகும் அப்பனேவெள்ளுள்ளிவசம்புமஞ்சள், தாமடாகொடிவேலியிந்துப்போடு சாரணைவேர்முருங்கைசேர்கியாழங்கொள்ள, போமப்பாவாயுவினுடவயிற்றுவலிதீரும் புலத்தியனேயின்னமொருகியாழங்கேளே. (௩௩௧)

* குறுந்தொட்டி-பூனைக்காஞ்சொறி.

### சந்நிசூதவாயுவுக்கு

கியாழமென்றதூதுவளைகண்டங்கத்திரி கிருபையுடன்முட்காவேளைசுக்குமொன்றால் கியாழமிட்டுத்திப்பிலித்தூவிக்கொள்ள கிருபையுள்ளசந்நியுடசூதகத்தின், கியாழத்தில்வாயுவுடனேவலிப்புதீரும் கிருபையுடன்நெல்லீர்க்குகருவெம்பீர்க்கு, கியாழமுடன்அருகம்வேர்பிடிதானென்றுகிருபையுடன்நெழுன்றறுப்பாய்அரிந்துபோடே. (௩௩௨)

போட்டினன்மிளகுகொஞ்சம்உடைத்துப்போட்டுப் புண்ணியனேதான்வறுத்துஅறக்கிப்போட்டு, நாட்டியேஅறுகம்வேர்க்கணுப்போக்கிப்போட்டு நன்மையுடனிளவறுப்பாய்வறுத்துத்தண்ணீர், காட்டிடுவாய்ஒருபடிநீர்விட்டுப்பின்பு கணக்காகக்கிராம்புஐந்து வறுத்துப்போட்டு, தாட்டிகமாயெட்டொன்றுயிருத்துக்கொண்டு தருவானபாக்களவுவெண்ணெய்போடே. (௩௩௩)

### மூலக்கியாழம்இரசவேக்காட்டுக்கியாழம்.

வெண்ணெயிட்டுஉள்ளுக்குக் கொடுத்தாயானால் வியாதியதுதீருகிறவிதந்தான்கேளு, தண்மையுடன்கர்ப்பஸ்ரீ சூடுகொங்கை சலக்கட்டுமலக்கட்டுந்தீருமப்பா, வண்மையுடன் விலாமிச்சை லவங்கப்பட்டைம

ரமஞ்சள்கியாழமிடமூலந்தீரும், நண்ணயமாய்க்கருவேலுவெள்வேலம்ப ட்டை நலமானதுளசிவேர்எருக்கம்வேர்தான். (கக௪)

தானென்றாய்க்கியாழமிட்டுக்கொப்பளிக்கதருவானரசத்தினுடவே க்காடாறு, கானன்றாய்சோதித்துப்பார்த்தேனப்பா நாய்ச்சூலைவாய்ச்சூ லையிரண்டுந்தீரும், தானன்றாய்ச்செய்துஇதைக்கொப்பளிக்கத் தருவான தந்தமெல்லாமிறுகுமப்பா, வானென்றகந்தகத்தைப்பசுவெண்ணெயிட் டு மைந்தனேதானரைத்துதுணியிற்பூசே. (கக௫)

பூசியேஉருட்டியதைக்கதிரில்கோத்துப் புலத்தியனேதீய்க்கொளு த்தியெரியும்போது ஆசியேஅடியிலேபீங்கான்வைக்க அப்பனேசுடர்த்த யிலமிறங்கும்பாரு, தேசிகனேபதனமாய்வைத்துக்கொண்டு திறமாகமூ ன்றுதுளிமூக்கிலூற்ற, தூசனத்தால்மூக்கறுக்கவந்தநோய்தான் துலைந் துவிடுபற்றுநாளூற்றும்போதே (கக௬)

ஊற்றுதேபோனுக்கால்நோய்திராது உத்தமனேயெளியோரைப்பெ ரியோர்தன்னே, சாற்றியேகற்புடைமங்கையோரைத் தருவாகமொக்கைகு லத்ததினலப்பா, தேற்றியதோர்அரசர்களைப்பழித்தாசானல் சீக்கிரத்தி ல்மூக்கறுத்துக்காதுங்கொய்வார், பார்த்திருந்துபோகிகளைப்பழித்ததோ ஷம் பாவமதால்மூக்கறுக்கும்பழவினையாம்பாரே. (கக௭)

நசியம்.

பழவினைகாந்தீராதுபாவிமார்க்கு பரிவானபுலத்தியனேமருந்தியா தே * உழலுனையாலூடாடிக்கெல்லாமட்டும் உலுத்தருக்குத்திராதுஉறு திசொன்னேன், கழவினையுந்தானகற்றிபெரியோருக்குக் கால்பிடித்துஏ வல்செய்துகாத்திருந்தால், பழவினையுந்தானகலுமருந்துகேளு பாங்கா னநிம்மஎண்ணெயப்படியரைக்கால்வாங்கே. (கக௮)

* ஊழ்வினைஎதுகைநோக்கிஉழவினையெனமருவியது

வாங்கியதில்திரிகடுகுதான்றிக்காயும் மைந்தனேமிளகோடுகஸ்தூரி மஞ்சள், தாங்கிநின்றகார்கோலும்வேப்பமுத்துத் தருவாகக்கழஞ்சியரை ப்பொடித்துப்போட்டு, தேங்கிநின்றரவிப்புடந்தானேமூநாள்வைத் திரு ம்பவதைவாசலிலேவைத்துமைந்தா, ஓங்கிநின்றஇரவிதனைநமஸ்கரித்து உத்தமனேமூன்றுதுளிமூக்கிலூற்றே, (கக௯)

மூக்கிலேமூன்றுநாள்விட்டயோனல் முழுவினையால்வந்தசொருபீ நசமேதீரும், மூக்கிலேசாரணையுங்கிழங்கிந்துப்புமிளகுடனேசீனிவகை கழஞ்சரண்டு, மூக்கிலேமுலைப்பாலாலரைத்துசெய்யில் மூன்றுநாள்ரவி

யிலிட்டு, மூக்கிலேநீர்ப்பாய்ச்சல்பீநசமேதீரும் முறையாகஇன்னமொரு திரிதான்கேளே. (௩௪௰)

பீநசத்துக்குத்திரி,

திரியென்னபூவரசம்வெள்ளெருக்கின்வேரும் திறமானமலைதாங்கி கஸ்தூரிமஞ்சள், உரமானசிறுநாகம்வெடியுப்புப்புழுகும் உத்தமனேபு கையிலைச்சாற்விட்டுஆட்டி, திறமாகச்சீலையிலேபுரட்டிக்கொண்டு தீர்க்க மாயனற்கொளுத்திநாசிக்கேற்ற, பரமானபீநசமும்புருவுக்கூட பாலக னேதீர்ந்துவிடுமபாகக்கேளே, (௩௪௧)

சிரசுநோய்பீநசம்சிரச்சூலைக்குத்தயிலம்

கேளப்பாநெல்லிக்காய்சாறுநாழிகிருபையுடன்சரிசாலைச்சாறுநாழி, ஆளப்பாபசுவின்பால்எள்ளெண்ணெய்நாழி அதிமதுரம்பலமரைத்துக்க லக்கிக்காய்ச்சி, வேலப்பாதலைமுழுகசிரசிலுள்ளநோய்கள் விலகுமடாபீந சமுஞ்சிரசிற்சூடும், ஏளப்பாதாந்தீருங்கண்தெளிவுமாகும் இன்பமுட னின்னமொருதயிலக்கேளே. (௩௪௨)

கபாலசூலைக்குசவுரித்தயிலம்

கேளப்பாசவுரியிடப்பழச்சாறுநாழி கிருபையுடன்பொடுதலையின் சாறுநாழி, வேளப்பாபசுவினிடபால்தானுழி விதமானமிளகுபலம்நல் லெண்ணெய்நாழி, தாளப்பாகலக்கியதைமெழுகுபோல தான்வடித்தள ண்ணெய்தனைமுழுகும்போது, கோளப்பாவொன்றுமில்லை மிளகுநீருங் கூட்டியேசாதமுண்ணுபோகம்நீக்கே (௩௪௩)

நீக்கவேதீருகிறவியாதிகேளு நிலையானகபாலவலி கபாலத்துக்குச், போக்குமேபீநசங்கள்மண்டைசூலைபொல்லாதநேத்திரத்தின்மாசிதீரும், வாக்குமேநீர்க்கடுப்புமேகச்சூடும் வாங்குமடாதைலமதுவாரந்தோறும், தாக்குமேதவறுமல்மூழ்கிவாநீ தண்மையுள்ளநோய்களெல்லாந் தவறிப் போமே. (௩௪௪)

சிவயோகிகற்பம்.

தவறிப்போஞ்சிவயோகம்செய்வோர்க்கெல்லாந் தண்மையுள்ளஎள் ளெண்ணெய்நீக்கிமைந்தா, சவரிச்சாற்பொடுதலைச்சாற்பசுவின்பாலுஞ்ச மன்கூட்டிமிளகிட்டுக்காய்ச்சிமூழ்க, தவறிப்போமுன்சொன்னவியாதிதீ ருந் தண்மையுடன்சிவயோகங்கேளுமைந்தா, அவமானஞ்சொல்லுகிறே ன்மூலவன்னி அப்பனேசாந்தியடாசெந்தீதானே (௩௪௫)

செந்தீயென்ற உந்தியிலேமைந்தாகேளு சிவசிவாகங்கைசிவகங்கை யுண்டு, சொந்தமுடனந்தநிலையடுத்துக்கொண்டு சுத்தமுள்ளசங்கைசிவ சுகமாய்நீயும், அந்திசந்திகொண்டதனுல்அய்யாகேளு ஆதாரமானதனை

சிவமூலாதாரம், எந்தவிதமென்றறிந்துசொல்லப்போறேன் ஏகசிராமய் மானமூலந்தானே. (௫௪௬)

## ஆகாரஉகாரதீட்சை பூரணமகிமை.

தானென்றஆதாரமூலம்பார்க்கச் சாதகத்தைச்சொல்லுகிறேன்நன் றுய்க்கேளு, கோமென்றகுருவருளால்காரதீட்சை கொண்டபின்புஉகார மடாசத்திதீட்சை, வானென்றமவுனமடாமகாரதீட்சை மார்க்கமுடனுரு வறிந்துதீட்சைபெற்றால், தேனென்றஅமிர்தகற்பத்தாலே திடமில்லாக் காயமதுசித்திதானே. (௫௪௭)

தானென்றசித்தியதுயோகமார்க்கந் தன்னையறிந்தமூலமடாபிரமஞான ம், வானென்றஞானமடாகேசரியின்றீபம் மௌனத்திலானதுவுமூலத்தீ ய்தான், ஓனென்றதீயதுதான்உந்தியுந்தி ஓமுடிந்தஆவியடாபிராணயந்தா ன், தேனென்றநாதமடாசிலம்பினோசை திக்கடங்காவோசையைநீசெவியிற் கேளே. (௫௪௮)

செவியான ஆகாசமோசைமைந்தா தீர்க்கமென்றமூலமதில்நாவிதன் னால், தவியாதவாசியடாமேகமாச்சு சங்கையுள்ளமேகமதுரவியினாவி, கு வியாதரவியுடனேமேகஞ்சேர்ந்து குமுறுலிசத்தமதாய்ச்சலமுமாச்சு, அவியாதமேகசலந்தன்னால்மைந்தா அண்டசராசரங்களெல்லா மூயிரு ண்டாச்சே. (௫௪௯)

உண்டானசேதியப்பாபுலத்தியனேகேளுஉரைத்துவிட்டபூரணமா ய்நானூற்றுள்ளே, கண்டாயேபூரணமும்நாலுநூற்றில் கண்டெடுத்துச் சொன்னபொருணிந்தநூல்தான், விண்டனடாஅகில்சொன்னகருக்கனெல் லாம்வேதாந்தயோகியர்க்குவிளக்கமாகும், பண்டுபோலிதிற்கருக்கள்தெ ளிவாய்ச்சொன்னேன் பதனமப்பாஇன்னமொருதயிலங்கேளே. (௫௫௰)

## கந்தகத்தயிலம்;

தயிலங்கேள்கந்தகமும்வெடியுப்புச்சிலையுங் கருவாகப்பலமொன்று பொடிக்கும்போது, அயிலமென்றகாரச்சாரம்வீரந்தானுமப்பனேயனை க்கழஞ்சுகூடப்போட்டு, ஒயிலாகப்பலம்நாலுபசுவின்வெண்ணெய் உத் தமனேகல்வத்திலிட்டுஆட்டி, தயிலமப்பாமுன்போலச்சுடர்த்தயிலம்வா ங்கித்தருவானமீங்காலிற்பதனும்பண்ணே. (௫௫௧)

பண்ணியேபணவிடைதானந்திசந்தி பத்துநாள்சர்க்கரையிற்கொள் ளும்போது, உண்ணவேபத்தியமோஇல்லைகண்டாய் உத்தமனேநீங்குகி றவியாதிகேளு, நண்ணவேகுஷ்டசொறிவிரணம்வெள்ளை நலமானகரு மேகம்வாதவாய்வு, திண்ணவேசயரோகங்குன்மவலிகூடத் தீருமடாஇ ன்னமொருசெய்திகேளே. (௫௫௨)

## மூதண்டக்கியாழம்.

செய்தியென்னகூடுகொண்டால்மருந்தினாலே தீருதற்குஅறுகம்வே
ர்பலம்பத்தப்பா,நைதுமேயதிமதுரங்கூடகைநீறும் நலமானமாதளம்பூமி
ளகினொடு, எய்துமேடலமைதான்கூடப்போட்டு என்மகனேஅறுபடிநீ
ரெட்டொன்றாக்கி, கொய்துமேகாற்படிநீர்பாக்களவுவெண்ணெய் கூட்டி
யேமூணுநாள்காலமேகொள்ளே. (௩௱௩)

## சன்னிக்குத்தயிலம்.

கொள்ளவேவீறுடனேகடுப்பும்போகும் குணமானசன்னிபிட்டதயில
க்கேளு, விள்ளவேமாவிலிங்கம்புனல்முருங்கக்காயும் விளாவின்வேர்நொ
ச்சிவேரெருக்கன்வேரும், கள்ளவேசொன்னகசாவாதமடக்கக் கருவாண
பட்டைபலமாறுடொக்க, வள்ளலேபலமிரண்டுமயில்பீலிதானும் வண்
மையுடனெட்டியிடகுறுணியாமே. (௩௱௪)

குறுணியாமித்தனையு மிடித்துப்பாண்டங்கூட்டியே வேப்பெண்
ணெய்புங்கினெண்ணெய், கருணமாயெள்ளெண்ணெய்படியளையாய்வார்
த்துத் தயவாகத்தான்பிசறிமேலோடுமூடி, அருணமாய்ச்சீலைமண் வலு
வாய்ச்செய்து அப்பனேயடியிலேதுமருதான்போட்டு, வருணவாய்க்குழி
வெட்டிப்பல்லாய்வைத்துமைந்தனேபல்லாவாய்ப்பானைத்துவே. (௩௱௫)

தூரெல்லாம்மண்பூசிப்புகைபோகாமல் துரிதமுடன்சாணமேற்றிச்
சுத்திகேளு, பாரெல்லாந்தானெரியக்கனற்புடமாய்ப்போட்டுப் பாங்கான
கலயத்தில்தயிலம்விழும், நேரானகுழித்தயிலம்பதனம்பண்ணி வினவா
கமேல்பூசிப்பிடித்துவரும்போது, பாரெல்லாஞ்சன்னியொடுவலிப்பிசிப்பு
பாங்கானமுடக்கம்பாரிசவாயு. (௩௱௬)

## காதுமந்தத்துக்குச்சிரசில்தேய்க்கத்தயிலம்.

வாயுவெல்லாம்போகுமடாதயிலந்தன்னில் வன்மையுடன்காதுகே
ளாமற்போனால், நேயுவென்றநல்லெண்ணெய்படிகால்தன்னில் நிலப்ப
னையுங்காற்பலந்தான்பொடித்துக்காய்ச்சி, பாயுவென்றபாதமிரண்டடியி
ல்தேய்நீ பதனமாய்ப்பக்குவமாய்மண்டலந்தான், ஓயுவென்றநல்லெண்ய
டிகாலுக்கு ஞுத்தமனேகொடிவேலிபட்டைபலங்காலே. (௩௱௭)

## காதுக்குத்திரைச்சலுக்குத்தயிலம்,

காலப்பாமூலைப்பால்விட்டரைத்துக்காய்ச்சிக் கனமாகத்தினங்கொ
ஞ்சம்சிரசில்தேய்த்து, மேலப்பாமண்டலமிப்படிரண்டெண்ணெய் மே
ன்மையுடன்றான்றேய்க்கக்காதுமந்தம், பால்போலேதீர்ந்துபோகும் குத்
திரைச்சலுக்குப்பாங்கானகொள்ளுக்காய் கொழுஞ்சிவேரும், காளப்பாசழு
ஞ்சுமேல்தோலரைத்து நன்மையுடன்மூலைப்பாலாலநன்றாயாட்டே. ( )

ஆட்டியேசாற்படிநல்லெண்ணெய்தன்னில் அன்பாகக்காய்ச்சியதில ஞ்சு துளிவிட்டு, பாட்டியேகாதுக்குள்பஞ்சடைத்துவைக்கப் பருவாகக்க திரைச்சல்காதுகுத்தல், ஓட்டியேகாதுநோய்போகுமப்பா உத்தமனேப ல்வலிக்குமறுபாகத்தில், நாட்டியேதைவேளையறுகம்புல்லும் நலமாகத் தட்டியதைக்கசக்கிக்கேளே. (௯௫௯)

அறுகம்வேர்த்தயிலம்.

கசக்கியேமறுபாகங்காதில்தானும் கடுகவேமூணுதுளிவிட்டாற்போ கும், நசுக்கிடவேமுகவாதந்தந்தரோகம் நன்மையில்லாஒருதலைவலியும் போகும், பசக்கியேயின்னமொருதயிலங்கேளு பாங்கானஅறுகம்வேர்ப லம்பத்தப்பார், தொசக்கியேபலத்தில்குறுணிநீர்தான் சுகமாகஎட்டொ ன்றுயிறுத்துக்கொள்ளே. (௯௬௰)

இறுத்துநீயெள்ளெண்ணெய் படிதான்கூட்டி என்மகனேவெட்டி வேர்கார்கோல்வித்து, நெருக்கியேகோஷ்டமுடன்கழஞ்சுவீதம் நெகவ ரைத்துத்தயிலமதைநீரில்லாமல், கருத்தாகக்காய்ச்சியதைமுழுகும்போ துகனகனத்தமண்டையிடிசிரசிற்பித்தம், வருத்தமுள்ளமஞ்சள்நீர்ரத்த மூத்திரம்மகத்தானமேகநோய்தணிந்துபோமே. (௯௬௧)

போமப்பாஉஷ்ணங்கள்நேத்ரவாயு பொல்லாதசயித்தியமும்பயித் தியமுங்கூட, நாமப்பாமூதண்டதயிலங்கண்டால் நன்மையில்லாநோய்க ளெல்லாம்காடாதப்பா, தாமப்பாபித்தமென்றவியாதிபோகும் நயவான சந்தனாதியிதற்கொவ்வாது, வேமப்பாவிஷங்களுக்குக்குழம்புகேளு வே ப்பமூத்துரசங்கெந்திதுருசுவெள்ளை. (௯௬௨)

விஷங்களுக்குக்குழம்பு.

வெள்ளையொடுமனோசிலையும்பெருங்காயமேழு மேன்மையாய்வகை க்குஅரைக்கழஞ்சுகூட்டி, தள்ளையென்றநேர்வாளஞ்சுத்திசெய்து தருவா கக்கழஞ்சதுவுமேழுமொன்றாய், வள்ளலேகல்வத்திட்டெருக்கம்பாலால் மாட்டியரைஒருசாமமெழுகுபோலே, துள்ளவேபின்பு*நிம்பநெய்தான் விட்டுத்துருசாகவொருசாமமரைத்துக்கேளே. (௯௬௩)

* நிம்பநெய்-வேப்பநெய்.

அரைத்துமதைக்கொம்புசிமிழ்தன்னில்வைத்து அப்பனேவிஷத்தீ ண்டிவந்தபேர்க்கு, திறத்துடனேபயிறளவுவெற்றிலையிலீய்ந்து தீர்க்கமு டன்கடிவாயிற்கொஞ்சம்பூசு,பறந்துவிடுஞ்சகலவிஷம்போகுமென்று பா டினதுவடமொழிநூல்பாகமப்பா, உரைத்துவிட்டேன்பத்தியந்தான்பசு மோராகும் உத்தமனேசந்திக்குக்கலிக்கங்கேளே. (௯௬௪)

### சந்நிக்குக்கலிக்கம்.

கேளப்பா மருக்காரைப்பழத்தைநீயுங் கிருபையுடனுடைத்துஅதி ன்விரையில்தானும், பாளப்பாபிசினிருக்கும்வாங்கிக்கொள்ளு பாலகனே விரையெல்லாம்நீக்கிப்போடு, தாளப்பாபயறுபோலுருட்டிக்கொண்டு த ருவாகவெள்ளைச்சாரணைவேளைபோடு, கேளப்பாவெற்றிலையுங்கசக்கிச்சா ற்றில்கிருபையுடன்தானரைத்துவிழியிற்போடே. (௩௬௫)

### ஆக்கிராணநசியம்.

போடவேசந்நியொடுபிடரிநோயும் பொல்லாதவுடம்புநோய்நீரேற் றங்கள், சாடவேஒடிப்போமின்னமொன்று சாற்றுகிறேனுக்கிராணந்தய வாய்க்கேளு, நாடவேகாட்டெருக்கில்எருக்கம்பாலே நாலாறுவிசையடித் துக்காயப்போட்டு, தேடவேபுடம்போட்டுச்சாம்பல்தன்னைத் திறமாகநா சியிலேஏற்றுவாயே. (௩௬௬)

### கண்வியாதிக்குமருந்து.

ஏற்றவேசலதோஷமண்டைக்குத்து ஏற்றமென்றநீரேற்றமெல்லா ம்போகும், பார்த்திபனேகண்ணிலுள்ளவியாதிபோகப் பாடுகிறேன்*ச ம்பழத்தில்நூற்றுஎட்டு, தோற்றுமல்துளைதுளைத்துலவுங்காட்டித் துரி தமுடன்கயிற்கோத்துச்சட்டியிலேதாக்கிப், பார்த்தாலேவிளங்காய்போல் பசுவின்வெண்ணெய் பாலகனேலவங்கமெல்லாம்பரப்பிமூடே. (௩௬௭)

* சம்பழம்-எலுமிச்சம்பழம்.

மூடியேயச்சட்டிதனில்படாமல்மூர்க்கமுடன்சுத்தகங்கைவிட்டுவை நீ, நாடியேநாற்பதுநாள்வேறேவேறே நலமானசுத்தகங்கைவிட்டுவைத் து, தீடியேபிறகுவெண்ணெய்தனையெடுத்துத் திறமானதாம்பிரத்தின்ப ரணிலேவைத்து, சாடியேபழமுடனேலவங்கப்பூவும், தள்ளிவிடுவெண் ணெய்தனைக்கண்ணில்தீற்றே (௩௬௮)

தீற்றிடவேசலம்வீழுமெரிப்புண்டாகுந் திறமாகச்சிலையினாற்றுடை க்கநிற்கும், மாற்றிடவேமண்டலந்தான்கண்ணில்தீற்ற மாறுதநேத்திர நோய்மாறுமென்னும், போற்றிடவேயென்குரு வேதியர்தானிந்தப் புத்த கத்தின்பெருமையினாற்புகன்றதப்பா, தோற்றிடாவுலகத்திலெளியோரு ண்டுதுரையானதுரையக்களரசருண்டே. (௩௬௯)

### வயித்தியதருமம்.

அரசரென்றால்பொருள்கொடுத்துநோய்தீர்த்துக்கொள்வாரதனாலே யுந்தனுக்குத்தருமமில்லை, நிரசரென்றுலெளியோர்க்குவயித்தியஞ்செய்ய கிலேயானதருமமதுநிலைக்குமென்று, பிரிசமுடனென்குருவேதியர்தான் சொன்னார் பிள்ளையென்றுபுலத்தியனையு னக்குச்சொன்னேன்பரிசனமா

ய்மனதில்வைத்தால்முத்திசேர்வாய் பாலகனேயிதைமறந்தால் பலித்தி டாதே. (கஎல)

பலித்திடவேவேணுமென்றல்புலத்தியனேஐயா பாரிலுள்ளவுயிரெல்லாந்தன்னுயிர்போலெண்ணி, சலித்திடாயொருபோதுந்தருமஞ்செய்யச்சந்தையங்கள்செய்யாதேசதிசெய்யாதே, சலித்திடவேகருமத்தால்பிறவிகிட்டும் தருமத்தால்சாயுச்யபதவிகிட்டும், சலித்திடாய்சற்குருவையடுத்துக்காருசதாகாலஞ்சதா சிவனைப்போற்றிப்பாரே. (கஎக)

## கர்ப்பவியாதிக்குஎண்ணெய்.

போற்றினலின்னமொருஎண்ணெய்கேளு புலத்தியனேபிள்ளையில்லாமலடியோர்க்கு, சாற்றுகிமேருமேரண்டஎண்ணெய்நாழி தைவேளையிலையுடனேயொண்டத்திலையும் பார்த்திடவேமஞ்சளோடுகடுக்காயிந்துப்பு பரிவானவெண்காரம்வெள்ளைப்பூண்டு தோற்றிடவேகடுகுடனேவிழுதிநிலாவரையுந்தொகைவைத்துகைமூன்றுபலமாய்த்தூக்கே. (கஎஉ)

தூக்கியேயம்மியிலேமைபோலாட்டித் துரிதமுடனெண்ணெயிற்கலக்கிக்காய்ச்சி, தாக்கியேமெழுகுபதமாய்வடித்துத் தருவானகுப்பியிற் பதனம்பண்ணி, வாக்கிலேவடிக்குமுன்னேகழஞ்சுநிறைப்பால் யுள்ளகள்ளிப்பால்கூட்டிக்கொண்டு, தேக்கியேகரண்டிநிறைநாலுள்கொண்டு திறமாகமூன்றுநாள்கொடுத்துக்கேளே. (கஎங)

கேளப்பாபத்தியமோஉப்பாகாது கிருபையுடன்மூன்றுவிசைகொடுத்தாயானல், யாளப்பாரூதகத்தின்வாயுகுத்துப் பக்கத்திற்சூலையுடன் வயிற்றுவலிதீர்ந்து, நாளப்பாபெண்களுக்குக்கர்ப்பமுண்டாம் நானூறு வயித்தியபூரணமாய்ச்சொன்னேன், கேளப்பாஒருநாளுமில்லையில்லைகுணமாகஇன்னமொருஎண்ணெய்கேளே. (கஎச)

## சகலமேகஎண்ணெய்.

எண்ணெயென்றமேகவெண்ணெய்சொல்லக்கேளு மேரண்டஎண்ணெய்படியிருள்ளிச்சாற், நன்னயமாய்*தேசிச்சாற்செம்பொனெருஞ்சிலமானகரிசாலைகற்பூரவள்ளி, பின்னையென்றபூவரசங்காய்சங்கக்குப்பிபிரியமுடன்வகைக்குச்சாற்படியரைக்கால், சொன்னமேமெழுகுபதமாகக்காய்ச்சிச்சோதனைக்குஎழுநாளுப்பாகாதே. (கஎரு)

* தேசிச்சாறு-எலுமிச்சம்பழச்சாறு.

உப்பில்லாப்பத்தியமாய்க்குடிக்கும்போது உள்ளுருக்கிமேகநோய்உட்டினங்கள், தப்பில்லாக்கிரந்தியொடுஅரையாப்புப்போகுந் தயவானயோனிப்புண்வெடிசூலைதீரும், ஒப்பில்லாமேகத்தின்வாயுகூடஓடுமடா

இனியேதுவயித்தியந்தான், சொற்பமாய்ப்பாடிவிட்டேனிந்தநூலில்சேச தனைக்குப்பூரணத்தைப்போற்றிப்பாரே. (௩௭௬)

பூரணநூல்மகத்துவஞானம்.

போற்றினாலுனதுவினையகலுமப்பா பிறவியில்லாப்பதவியிலேபுனி தமாவாய், போற்றினால்பூரணமுங்கூடப்பேசும் பூகலத்தில்நீயுமொருசி த்தனாவாய், போற்றினாலென்னபலனில்லையென்றால் பொதியமலையெனக் கேதுபுலத்தியாகேள், போற்றினேம்பூரணத்தின்கிருபைகண்டோம் புத் தியுடன்தானேதான்பூண்டுபாரே. (௩௭௭)

தானான ஆதாரசொரூபங்கன்னைச்சமர்த்தாகத்தானறிந்து தியானம் செய்து, தேனானபுலத்தியனேயறிவால்தானும் தேகத்திலுயிர் சிவமாய்த் தெரிந்துகொண்டு,வானானகேசரியில்மனக்கண்வைத்து மனங்கனிந்துஓம் நீம்அம்ஸ்ரீ என்று, கோனான ஆகாரபூசைதானும் கோடானபூசைசெய்த பலத்துக்கொப்பே. (௩௭௮)

ஒப்பென்றால்மனம்நிலைக்கஉறுதிகேளு ஓமென்றபிரணவமேமூல ம், செப்பென்றபீடமதில்நீங்காரவாலை சென்றிருந்த அகாரமதுசிவ ...ச்சு, குப்பென்றுதானெழுந்துவாசியாகிக் கொண்டுநின்றதிருவாசி ...கை, அப்பனே ஆகார ஆமாவாசையறிந்துகொண்டு பௌரணையி ல்பூசைபண்ணே. (௩௭௯)

பூசையென்றாலந்திசந்திபூசைபண்ணு புண்ணியனேகாயாதிகற்பங் கொண்டு, நேசமுடன்பூரணத்தைத்தினமும்போற்றி நினைவாகவுனதுச டம்நிலைத்துப்போகும், பாசமென்றபாசமதைவிலக்கிமைந்தா பக்குவ மாயகாரமென்றால்சத்திசிவமாச்சு, பேசவொண்ணாச்சத்திசிவமூலந்தன் னைப்பெருமையுடன்தன்னிடமாய்ப்பேணிக்காணே. (௩௮௰)

காணப்பாமயேந்திரமாங்கிரிக்கடுத்துக் கணநாதர்தனைநோக்கிப் பூ சைசெய்தால், தோணப்பாஅம்மலையில்வாழுஞ்சாரைசுத்தமுள்ளவெண் சாரைநிலத்திற்பாயும், காணப்பாபூமியிலேபாய்ந்தபின்பு சமர்த்தாகமை யமதிற்பிடித்துக்கொண்டால், ஊணப்பாபிடித்தபிடிகையில்தங்குமுத்த மனேரண்டுதுண்டுமொன்றும்பாரே. (௩௮௧)

ஒன்றாகப்பூமியிலேஓடிப்போகுமுண்மையுடன்பிடித்தபிடியுள்ளே கொள்ளு, நன்றாகவருஷமொன்று அந்திசந்திநாட்டமுடன்கொண்டுவரு ம்போதிலேதான், பண்டானவாசியதுபாயாதப்பாபரஞானகாயமமிசித்தி யுண்டாம், சென்றடப்புத்தியந்தான்கடுகெள்ளெண்ணெய் திறமானசை யோகமுன்றாகாதே. (௩௮௨)

மூலகிரி.

ஆகாதுஆண்டொன்றுசிவத்தைப்பூசிஅப்பனேசத்தியிடகற்பங்கே ளு, போகாதமூலகிரிதன்னில்நீயும் புத்தியுடன் சென்றுதவஞ் செய்

ந்தாயானால், ஆகாசந்தனிலிருந்துபூமிதன்னி லங்காரமாய்க்கருஞ்சாரையா யுமுன்னே, தாகாசமந்திரந்தானுமென்றேறுதித் தம்பித்துநடுவையும் பிடித்துக்கொள்ளே. (க அரு)

கொள்ளப்பா ஆண்டொன்பதுஅந்திசந்தி குணமாகக்கொண்டோரக் குணத்தைக்கேளு, பிள்ளப்பாமூலமதில்அனலேமீறிப் பித்தமது மேற கொண்டுசெந்தீபற்றி, துள்ளப்பாதேகமதுஇளைத்துக்கண்டால் துங்கவே மூதண்டக்கியாழக்கொள்ளு கள்ளப்பாஉகாரமதைப்பூசைசெய்யநாயா னதினாயகன்றநாட்டங்காணும். (க அசா)

நாட்டமென்றால்சுழிமுனையில்நாட்டங்காணும் நடுமனையில்தீபஜோதி நன்றாய்த்தோணும், தேட்டமென்றபூரணத்தின் தீபங்கண்டால் திறமா னதேகமதுவலுத்துப்போச்சு, கூட்டமென்றசிவசத்திபூசைசெய்தருணா மானரண்டுகற்பங்கொண்டபின்பு, பாட்டமென்னகாலைபிலேயிலத்தைப் பூசி பாலகனேமாலையிலேயுகாரங்கொள்ளே. (க அ௭)

கொள்ளவேஆண்டுமொருமூன்றுஞ்சென்றால் குணமானசட்டைய துமூன்றும்நீங்கி, விள்ளவேஆண்டுனக்குமூன்றாண்டு மிஞ்சாதுகுறை யாதுபித்தினையுநீங்கி, வள்ளலார்திருநடனம்வெளியாய்த்தோணு மைமந் தனேரவிமதியுமொன்றாய்க்காணும், மெள்ளவேவாசியென்றகுதிரை விமேலானபோதகிரியுச்சம்பாரே. (க

போதகிரி.

உச்சமென்றபோதகிரியுச்சந்தன்னில் உண்மையுடன்கர்ப்பூரத்தீப ம்போலே, பச்சமுடன்சதாசிவமும்நாமுங்கூடப்பதினெட்டுச்சித்தர்களு மக்கிருப்போம், இச்சையுடன்போதகிரிதன்னிலென்னை யேறிவந்துகண் டவுடனின்பமாக, அச்சமென்றஅச்சமதையகற்றினமக்தா அழியாதபத வியுனக்களிப்போம்பாரே. (க அஎ)

பாரப்பாபோதகிரியார்தான்காண்பார் பாலகனேக்கவசித்தர் பார்த்த போதம், சேரப்பாபோதமென்றால்சிவபோதந்தான்நிலையாதபோதத்தை நிலைத்தோன்காண்பான், மேரப்பாஉச்சமென்றபோதங்கண்டு மேன்மை யுடனழியாதபதவிபெற்றால், சாரப்பாசதாநந்திமணியைநீயும்சார்ந்ததினு லுன்துவினைதவறிப்போமே. (க சுஅ)

சிவராசயோகம்.

தவறிப்போஞ்சிவராசயோகங்கண்டால் தாரணியில்மற்றமற்றபோ கமெல்லாந், தவறிப்போம்முச்சுடருமொன்றாய்க்கண்டால் தாழ்வானது

றப்பிறப்புந்தண்மையாகித், தவறுமல்ஞானவழிகண்டுமைந்தா தண்மையுடன்முக்கோணத்தறுகோணத்துள், தவறிப்போநாற்கோணம்ஐங்கோணத்துள்சதாசிவனுரொளிகண்டுவெளிகண்டோர்க்கே. (௩௮௯)

கண்டோர்க்கேநாதவொலிகாதில்கேட்குங் காணுதமடையருக்குவெளிதோணுது, பண்டோர்க்குவிட்டகுறைபற்றியேறும்பாவியர்க்குக்கிடைத்தாலுமெட்டாதப்பா,விண்டோர்க்குக்கோடிபலனுண்டுசொன்னேன்வீணருக்குவிண்டதினுல்நரகமெய்தும், அண்டர்பிரானருளதனுலிந்தநூலில்ஆதிதொடுத்தந்தம்வரையடைவாய்ச்சொன்னேன். (௩௯௰)

சொன்னடாநூல்தோறுமொளித்தசேதி சுத்தமுடனிச்சயமாய்த்தோணச்சொன்னேன், முன்னேநான்பெருநூல்களநந்தம்சொன்னேன்மிச்சமிந்தநூல்போலேயொன்றுங்காணேன், கண்ணுனபுலத்தியனேயிந்தநூலைக்காட்டாதே உலகருக்குங்காட்டிடாதே, விண்ணோருஞ்சித்தர்களும்யோகியோரும்வேதாந்தவயித்தியபூரணமென்பாரே. (௩௯௧)

பாரப்பாசத்திதனைமாலையிலேபூசி பதிவானகாலையிலே சிவனைப்பூசி, சாரப்பாநடுச்சாலைகடந்துபாரு சந்தையமேபூரணத்தின் சார்புதோணும், வாரப்பாபூசையென்றால்வாலைபூசை மந்திரமாயெட்டிரண்டுமகிழ்ந்துகண்டால், மேரப்பாமூலைவழிபாதைகாணும் மேல்மூலைகண்டுமெள்ளவிழித்துப்பாரே. (௩௯௨)

விழித்துப்பார்த்திடவேபொரிதான்வீசும்முச்சந்திநடுவிதிதீபந்தோன்றும், சுழுத்தியிலேபோகாதேஒருமனதாய்நின்றால் சுத்தமென்றநாதவொலிகாதிற்கேட்கும், இழுத்துதென்றுநீகூடத்தொடர்ந்தாயானு லெண்ணவொண்ணுப்பிறப்பிறப்புமெய்தும்பாரு, அழித்துமனஞ்சுழித்தேற்றிவிழித்துப்பாருஅரகராசிவசத்தியாட்டமாமே (௩௯௩)

ஆட்டமென்றால்கண்ணிமினிடஆட்டேஆட்டு அதையறிந்தால்சதாசிவத்திருட்டங்காணும், பாட்டைமிகப்பார்த்ததினுலென்னதோணும்பாடறிந்தயோகியென்றால்பலுக்குந்தோணும், கூட்டமென்றால்வாசியிடகூட்டேகூட்டுகூட்டுவிட்டுப்பின்னொருத்தர்கூட்டேனப்பா, திட்டமென்றால்சதாதிட்டைதிட்டேதிட்டுதிட்டறியநாட்செல்லுமரிதுதானே. (௩௯௪)

அரிதாகஇத்தனைநாள்மறைத்ததெல்லா மன்புடனே மழைபோலே பொழிந்தேனிந்நூல், குரிதாகப்பாடிவைத்தேனிந்நூல்தன்னை கூறினேன்சகலமுமேவெளியாய்ச்சொன்னேன், பெரிதாகப்பாராட்டுமிந்தநூலைப் பேரின்பமுத்திதனைப்பெறுவாயப்பா, சிறிதாகவெளியாங்கம்செய்தாயானால் சிவசிவாரவிசோடிநரகமெய்தும் ௩௯௫

நரகமென்றநரகமதில்விழுதனன்றோ நன்மையுள்ளசாயுச்சியம்பெறுதனன்றோ, தெரிவையர்கள்சந்தநடுவிழுதனன்றோ சிவஞானமுத்திபெற்றுஇருக்கனன்றோ, பரியானவாசிதனிலேறனன்றோ பாழானஉலகமதிலிருக்கனன்றோ, தெரியாதேபுலத்தியனேயிந்தநூலைத் தேசத்தில்காட்டாதே சதிசெய்வாரே ௩௯௬

நூல்கொடாதிருக்க.

சதிசெய்வாரிந்நூலைவெளிவிடாதே சதிராகவுலகத்தோர்கேட்பாருன்னை, விதியாலேநூல்தன்னையீந்துவிட்டால் வினைவனுனைமதியான்வித்தையாலே; எதிராளியானவனும்உன்னைத்தானு மெவ்வளவும்போடாநீ வாடாவென்பான், குதிப்பாகக்குருவிந்தப்பாடுபட்டால் குவலயத்தோர் படும்பாடுஎன்னசொல்வேன் ௩௯௭

சொல்வானேநான்தாண்டாகுருவுமென்பான் சோதனைக்குமாரணத்தைச்செய்துபார்ப்பான், வெல்வானேவெளியோனைவலிமையாலே விணருக்குநூல்கொடுத்தால்சாபமெய்தும், செல்லாதபணமொருநாள்செல்லாதப்பா சிவாயகுருநாதனென்றால்செல்லவைப்பான், வல்லோருக்கியாதேயோசிக்கிந்தால் வகையானநூலதனைவணங்குவானே ௩௯௮

வணங்குவார்சிவயோகிஞானயோகி மற்றமற்றபேரெல்லாம்தூஷணிப்பார், இணங்குவார்போலிருப்பாரிணங்கார்பின்னே இந்தநூல்கிட்டுமட்டுமிணங்கிநிற்பார், பிணங்களுடனுறவுசெய்யவேண்டாம்சொன்னேன் புலத்தியனேபேரின்பவெளியைச்சொன்னேன், குணங்காமல்வழிகூடிநடுவழியேகாடில் குருவானபராபரனெல்லைவெளியாமே ௩௯௯

வெளியானவெளியதுதான்பாஞ்சொரூபம் வேதாந்தரூபாட்டாசொரூபாநந்தம், வழியானவயித்தியபூரணமானந்தம் மகத்தானபூரணத்தினர்த்தங்கண்டு, நெளியாமலாகாசங்கடந்துமேலே நெருப்பாறில்மயிர்ப்பாலவழியேசென்று, அளியாதபரவெளிஒளியோடேவெளியாய்மருவதுஆனந்தபூரணமுமுற்றே சா

முற்றானபுலத்தியனேபுலத்தியமகாரிஷியே மூச்சுடருமாதியந்தம்நன்றாய்ப்பாரு, சித்தானவயித்தியபூரணமீதப்பா தேசத்திற்கிடையாது திறமாய்க்கேளு, பத்தானபதிதனிலேவைத்துப்பூசி பதிதானவாசியதுசித்தியாகும், வித்தானவினையறுக்குஞ்ஞானசித்தி வேதாந்தபூரணத்தின்வெளிசேரமுற்றே சாக

அகஸ்தியர்

திருவாய்மலர்ந்தரு...

பரிபூரணம்-சா

முற்றிற்று.